ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப்பிரதி விலை | உள்நாடு 1 அணா | வெளிநாடு 1½ அணா

# குடி அரசு

| | | |
|---|---|---|
| வருட சந்தா முன்பணம் | — | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, | — | ,, 1 12 |
| வெளிநாட்டிற்கு ,, | — | ,, 4—0 |

வாரப்பதிப்பு

ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம்: அங். 1க்கு ரூ. 1
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2
☞ நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 5 | சென்னை, சுக்கிலவருஷ புரட்டாசிமீ 14௳ (29—9—29) ஞாயிற்றுக்கிழமை | மலர் 21



இந்தியாவிலும் இலங்கையிலும் நடைபெற்ற அநேக வைத்திய மகாநாடுகளிலும், மருந்து கண் காட்சிகளிலும் முதல்தரமான மருந்துகளென்று அநேக தங்கபதக்கங்கள் பரிசு பெற்றவரும், வைத்திய சிம்ஹம், வைத்திய பூபதி, வைத்திய ஆசிரியர், ஸ்பெஷலிஸ்ட் என்ற பல பட்டங்களைப் பெற்றவருமாகிய,

## டாக்டர் டி. சி. சிங்காரம்

அவர்களால் தயார் செய்யப்படும் பிரசித்தி பெற்ற மருந்துகள்.

(ஓர் யோகீஸ்வரரின் அநுபவமுறைப்படி தயார் செய்யப்படுவது.)

### ஆச்சரியமாய் அநேக நோய்களை குணம் செய்கிறது.

### மஹா சந்தனாதி தயிலம்

உலகப் பிரசித்தி பெற்றது

கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இத்தயிலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

இத்தயிலத்தால் குணமாகும் நோய்கள்

| | |
|---|---|
| கண் எரிச்சல் | வெட்டை சூடு |
| கண் சிகப்பு | காது நோய் |
| கண்ணில் நீர் வடிதல் | மண்டை இடி |
| கண் அரிப்பு | பீனிசம் |
| கண் பார்வைக்குறைவு | தலைமயக்கம் |
| கண் கூச்சம் | தலைப்பொடுகு |
| கண்ணில் பீளைசாருதல் | சொரி சிரங்கு |
| மேகநீர், வெள்ளெழுத்து | தலைமயிர் உதிர்தல் |
| ஒருத்தலை நோய் | நாள்பட்ட தலைநோய் |
| கைகால் எரிச்சல் | முதலிய பல வியாதிகளை |
| மூலச்சூடு | ஆச்சரியமாய் குணம் செய்யும் |
| அஸ்திசாங்கை | |

### சாலாமிசிரி லேகியம்

சிறந்த தாதுபுஷ்டி மருந்து!

மிகுந்த பலத்தையும் வீரிய விருத்தியையும் உண்டாக்கும்.

இந்த லேகியத்தை சாப்பிட்டு வந்தால் கைகால் அசதி, இடுப்பு வலி, பலக்குறைவு, ஆயாசம், நரம்புத்தளர்ச்சி, சொற்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் ஏற்படும் துரிதஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளைப்போக்கி குறைந்த ஆண் தன்மையை அதிகரிக்கச்செய்து, தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி, வீரியத்தை விருத்தி செய்து நல்ல திடகாத்திர சரீரத்தை உண்டாக்கும். மனதுக்கு உற்சாகத்தை யும், சுரு சுருப்பையும் கொடுக்கும். எவ்வளவு கடின வேலை செய் தாலும் யாதொரு களைப்பும் உண்டாகாது. சம்போக இன்பத்தை முற்றிலும் அநுபவிக்கச்செய்யும். சாப்பிட மதுரமுள்ளது. பத்திய மில்லை.

ஒருசேர் டப்பி விலை ரூ. 2—8—0

சரீரத்திலுள்ள எவ்வித உஷ்ணத்தையும் நீக்கி குளிர்ச்சியைக்கொடுக்கும். ஒரு முறை இத்தயிலத்தை உபயோகித்தவர்கள், அவர்களே மற்றவர்களுக்கும் சிபார்சு செய்து வருகிறார்கள். இதன் உண்மையை நீங்களும் ஒரு முறை பரிக்ஷித்துப்பார்க்கவும். ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம்.

24 அவுன்ஸ் டின் விலை ரூ. 4—0—0 12 அவுன்ஸ் டின் விலை ரூ. 2—2—0

பாக்கிங், தபால் சிலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும்.

## டி. சி. சிங்காரம் அண்டு கோ.,

தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.

(38)

## ப கு த் த றி வு

கூடிய விரைவில் "குடிஅரசு" பதிப்பகத்தாரால் வெளிவரப் போகும் மாதப்பத்திரிகை.

இதில் பகுத்தறிவில் சிறந்த பல அறிஞர்களின் கட்டுரைகளும் 'சித்திரபுத்திரன்' வேடிக்கை சம்பாஷணைகளும் ஏராளமாக வெளி வரும். இப்பொழுதே ஆயிரத்துக்கு மேற்பட்ட சந்தாதாரர்கள் முன் பணம் அனுப்பித் தங்கள்பெயரைப் பதிவு செய்திருக்கின்றனர். வருடசந்தாஅணு 0—8—0 எட்டே. வெளிநாடுகளுக்கு 0 12 0.

(எப்) விலாசம் :— "பகுத்தறிவு" காரியாலயம், 14, மவுண்ட்ரோட், சென்னை

## மதன லீலா படங்கள்

64 வகை சிற்றின்ப ரகசிய உருவ ஒரிஜனல் மாதர் போட்டோ படங்கள்

ஆல்பம் உள்பட விலை ரூ. 5.


K. G. STORES, VEPERY, MADRAS.

## பூவுலக வாழ்க்கைக்கு இன்றியமையாத சிங்கபலத்தைத் தருவதெது?

# அமிர்த சஞ்சீவி லேகியமும்
# அயக்காந்த செந்தூரமுமே

முறையாய்ச் செய்த அயக்காந்த
செந்தூரத்தைக் காட்டிலும்
தேகபலத்தைத் தரும் ஔடதம்
வேறொன்று மில்லை

விளம்பரம்
இதைக் கண்ணுறும் கனவான்களே!



இந்த லேகிய செந்தூரங்கள் சாமான்யமானவையல்ல. அபாரமான பலத்தைத் தரக்கூடிய சக்தி அமைந்துள்ளவை. உறுதியாய் இவற்றை நம்பி வாங்கிச் சாப்பிட்டால் ஒரே தடவையிலேயே இவற்றின் விசேடகுணம் நன்கு விளங்கும்.

## இந்த லேகிய செந்தூரங்களால்

### நிவர்த்தியாகும் முக்கிய வியாதிகளாவன:

தற்காலத்தில் மனிதரின் பால்ய சேஷ்டையாலும், இரத்தப் போக்காலும் அவர்க்கு உண்டான 20 வகை மேகரோகங்கள், குஷ்டரோகம், குன்மரோகம், பித்தப்பாண்டு, கைகால் முடக்கு, ஓவொய்வு, பித்த எப்பம், நெஞ்சு தொண்டை, எரிச்சல், வயிற்றுப்பிசம், அஜீரணம், பசியில்லாமை, தாதுஹீனம், தேக உளைச்சல், கண்ணில் நீர்வடிதல், சோம்பல், நித்திரையில்லாமை, தலை சுழற்றல், நீர் இறங்கும் போது பொறுக்கமுடியாத பாதையைத்தரும் தந்திமேகம் முதலியவைகள் ஆச்சரியப்படத்தக்க விதமாய் நீங்கிவிடும். பயங்கரமான மேக சம்பந்த வியாதிகளைப் பத்தே வேளையில் போக்கி சப்த நரம்புகளுக்கும் முறுக்கேற்றி அபரிமிதமான இரத்த விருத்தியைப் பெருக்கி பலத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின இலேகிய பஸ்பம் வேறெங்குமில்லை என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம். இதல்லாமல் தேகத்தைப் புஷ்டியாக்கித் தேகத்தடிப்பு, நகக்கண் வெளுத்திருத்தல் முதலிய வியாதிகளைக் கண்டித்து, தினந்தோறும் மலத்தைத் தாராளமாய்ப் போக்குவதில் இந்த லேகிய செந்தூரங்களே முதன்மையானவையென்பதை நாம் எமது அனுபவத்தில் கண்டிருக்கிறோம். நிற்க, இந்த லேகிய செந்தூரங்கள், மேற்கண்ட வியாதிகளைக் கண்டிப்பாய் நிவர்த்திக்குமா என்னும் சந்தேகமுடையோர் பரீக்ஷார்த்தமாக முதலில் 48-நாளாவது வாங்கி புண்டால் இவற்றின் அபார குணம் தெரியவரும். தவிர யாங்கள் இம்மகத்துவம் பொருந்திய லேகிய செந்தூரங்களை எவ்வளவு சிறப்பித்துக் கூறியபோதிலும் அது தகும். மேலும் இவற்றை நோய் உள்ளவரேதாம் சாப்பிடவேண்டும் என்ற அவசியமில்லை; யாவரும் சாப்பிடலாம். நோய் உள்ளவர்களைவிட நோய் இல்லாதவர்கள் எண்ணிக்கையாக 48-நாள் இந்த லேகிய செந்தூரங்களை யாதும் பத்தியமின்றிச் சாப்பிட அவர்க்கு நல்ல பலம் ஏற்படும். இது தவறாது. இவற்றைத் தருவித்து நண்பர் எண்ணிக்கையாகச் சாப்பிட்டு 10-நாளைக்குள் குணம் இல்லாவிடில் உடனே தெரியப்படுத்தினால் கட்டாயம் இவற்றிற்கு வாங்கிய பணம் வாபீஸ் செய்யப்படும். தவிர மேற்காட்டிய நோய்கள் உடையோர் 48-நாட்கள் சாப்பிடுவார்களேயானால் அவை முழுதும் நீங்கிவிடும். அப்படி நீங்கிக் குணம் ஏற்படாவிடில் நாங்கள் அதற்கு உத்திரவாதிகளாவோம். யாங்கள் இவ்வளவு அருமையான லேகிய செந்தூரங்களை எவ்வளவோ சிரத்தையுடன் கஷ்டப்பட்டு முடித்துப் பரோபகார்த்தமாக வெளியிட்டோம். இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரங்களுக்குப் பொன் மெடல், வெள்ளி மெடல் பெற்றதல்லாமல் ஆயிரக்கணக்கான யோக்கியதா பத்திரங்களும் பெற்றிருக்கின்றோம். ஆதலின் நமது லேகிய செந்தூரங்கள் யாம் சொன்னபடி குணத்தைக் கொடுக்கும் என்பதைப்பற்றி ஜவாப்தாரியாயிருக்கக் காத்துக்கொண்டிருக்கிறோம்; இது உண்மை. இவற்றை ஒரே தரம் தருவித்துப் பாருங்கள்; எமது உண்மை விளங்கும்.

வாதாதிக்க தோஷத்தினாலாவது, துரப்பியாசத்தினாலாவது, அதிக மனக்கவலையினாலாவது, அடிக்கடி உண்டாகும் நோயினாலாவது, மற்றெந்தக் காரணத்தினாலாவது பல மிழந்தவர்கள் எண்ணிக்கையாக மேற்படி லேகிய செந்தூரங்களைப் புசிப்பார்களானால் இவை தேகாரோக்கியம், வலிமை, அழகு முதலியவற்றை அவர்க்குக் கொடுத்து அவர்களைச் சந்தோஷிக்கச் செய்யுமென்பதில் தடையில்லை. வெளியூர்க் கனவான்கள் இந்த லேகிய செந்தூரங்களில் முழு நம்பிக்கைவைத்து ஒரே ஒருதரம் இவற்றைப் பரீக்ஷிப்பார்களானால், அவர்கள் அவசியம் ஆனந்த மடைவார்கள்.

இந்த லேகிய செந்தூரங்களுக்குப் பத்தியமே கிடையாது. எந்தப் பண்டங்களையும் நீக்குதலின்றி சாப்பிடலாம். மருந்து சாப்பிடும்போது பசி அதிகமாய் எடுக்கும் ஆதலால் பச்சைப்பயற்றுக் குழம்பு, கறி, மார்க்கண்ட சூப்பு. இவைகளை அதிகமாகப் பசியைத் தணிக்கக்கூடிய விதமாகத் தாமதம் செய்யாமல் சாப்பிட்டுவர வேண்டியது. இவற்றைப் புசிக்கும்போதெல்லாம் பலகாராதிகள் சாப்பிடல் வேண்டும். தயிர், பால், நெய் முதலியவைகள் எவைகளாயிருந்தாலும் சந்தேகமின்றிச் சாப்பிட்டுவரலாம்.

இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரங்களை மட்டும் ஒருவர் தருவித்து எண்ணிக்கையாக 48 நாள் சாப்பிடுவாரேயானால் இவை தேகத்தில் ஊற ஊற, மேகமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கி அவர் தேகமானது வலுத்துப் புதிய ரத்தம் பரவித் தன் வாழ்நாள் பரியந்தம் இளைக்காமலிருக்கும். இவற்றைப் புருஷன் பெண்ஜாதி இருவரும் ஏககாலத்தில் ஒற்றுமையாய்ச் சாப்பிட்டு வந்தார்களேயானால் அவர்க்கு உதிக்கும் மக்கள் மிகுந்த தேஜஸோடு தோன்றுவார்கள். இது உண்மை. இதை அதிகம் எழுதுதல் அனாவசியம்.

இந்தியா, பர்மா, ஸிலோன் ஆகிய உள் நாடுகளுக்கு 24 நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் செந்தூரமும் விலை ரூ. 1 12 0. போஸ்டேஜ் அணா 6. ஒரே தடவை 48 நாள் மருந்து வாங்குவோருக்கு போஸ்டேஜ் உள்பட ரூ. 4.

பினாங்கு, சிங்கப்பூர், நெட்டால் முதலிய அயல்நாடுகளுக்கு 24 நாள் சாப்பிடக்கூடிய மருந்து விலை ரூபா 1 12 0 தபாற் கூலி ரூபா 1 4 0

48 நாள் மருந்து வாங்குவோருக்கு போஸ்டேஜ் உள்பட ரூபா 5—8—0. சிங்கப்பூர், பினாங், மலாக்கா முதலிய வெளி நாடுகளுக்கு வி. பி. ஆர்டர் இருந்தாலும் முன்பணம் அனுப்பாதவர்களுக்கு மருந்து அனுப்பப்படமாட்டாது.

(51) விலாசம்:— **கருணாநிதி டிப்போ,** 1/6 வெங்கடேசமேஸ்திரி தெரு, சென்னை.

# ஏதனால் சுயமரியாதைக்காரர்களை நாஸ்திகர்கள் என்று சொல்லுகிறார்கள்

(கைவல்யம்)

இந்த பிரம்மாண்டமாகிய பிரபஞ்சத்தையும், இப்பிரபஞ்சத்தில் பரிமாணத்திற் கெட்டாத பருத்த பருவதங்களையும், அகன்ற ஆழங்களையும், மலைகள் போலெழும்பிக் கர்ச்சிக்கும் பேரலைகளையுடைய சமுத்திரங்களையும், தாவிப் பிடிக்கக்கூடாத தாது வர்க்கங்களையும், கணக்கிட்டு முடியாத கந்த மூலாதிகளையும், யூகிப்புக்கெட்டாத ஊர்வன கிருமி கீடாதிகளையும், பற்பல விதமாக பாடும் பறவைகளையும், நானாவிதமாக நடிக்கும் பட்சிகளையும், விசித்திர விநோதமான விலங்குகளையும், மிகுந்த மேன்மையாகும் மானுஷீக மனோவாக்கிற் கெட்டாத அனந்தகோடி சொரூபசின்னபேதங்களைப்பெற்ற பிராணிகளையும், இவ்வித பிராணி சமூகங்களுக்கு ஆதாரமான வாயுவாதி பூதங்களையும், ககனத்திற் றூங்கா விளக்குகளாக சகல தேஜஸோடு சதா காலம் ஜ்வலிக்கும்சூரிய சந்திர நக்ஷத்திர தூமகேதுவாகிய உத்பாதங்களையும் பார்க்கும்போது இவற்றிற்கெல்லாம் காரண வஸ்து ஒன்று இருக்க வேண்டும். அது கேவலம் கிரகிக்கக் கூடிய தாதுவாதி கந்த மூல கிருமிகீட பட்சி பிராணி பஞ்ச பூதமயமாகும் பொருட்களைப் பார்க்கிலும் பெரிதிலும் பெரியதாய் சிறிதிலும் சிறியதாய் எங்கும் வியாபிக்கத்தக்கதாய், அபாரசக்தியாய் இருத்தல் வேண்டுமென்றும் யூகித்து, அந்த சக்தியே கடவுளென்றும் அதையடைந்து ஆனந்தப்படுவது அவசியமென்றும், அதற்காக வேண்டிய சாதனங்களை முயற்சி செய்வோர் ஆஸ்திகரென்றும் சொல்லப்படுகிறது.

இந்தக் கொள்கைக்கு எதிரிடையானது நாஸ்திகம். நமது தேசத்தில் சாங்கியம், சார்வாகம், பிரஸ்பதி மதம், லோகாயத, பஞ்சபூதாத்தும வாதம், இந்திரியாத்தும வாதம், அந்தக்கரணாத்தும வாதம், பிராணாத்தும வாதம், சூனிய வாதம், முதலிய சமயாச்சாரங்களும் மேனாட்டிலிருந்த ஆமில்டன், கிரோ, மான்செல், டார்வின், கிப்பன் .ரீட், ஹெக்கல், பக்ளியர், வால்டேர், லெக்கி, காலின்ஸ், ஜான்மில், பிராட்லா முதலியவர்களுடைய கொள்கைகளும் நாஸ்திகமென்று சொல்லப்படுகின்றன.

இந்து மத வேத புராணங்களின் கட்டுக் கதைகளையும் வீண் பூசை வேள்விச் சடங்குகளையும் விட்டொழித்து சித்த சுத்த ஞானத்திறல் உண்மையான பரம்பொருளையும் பரிசுத்தத்தையும் நாடும்படியாக நம் நாட்டிலுண்டான மதங்கள் பௌத்தம், ஜைனம், சீக்கியம், பிரம்மசமாஜம் ஆரிய சமாஜம் முதலியவைகளாகிய இம்மதங்களும் நாஸ்திகமென்றே நமது நாட்டில் சொல்லப்படும் இவைகளில் பௌத்தம் ஜைனம், நாஸ்திக மதமென்னும் பிரசாரத்தைக் கொண்டு இந்து ராஜாக்களின் ஆதிக்கத்தால் அந்த மதங்கள் அழிக்கப்பட்டன. சீக்கியர்கள் வீரர்களாயிருந்தபடியாலும் அவர்கள் காலத்தில் இந்துராஜாக்களின் ஆதிக்கம் குறைந்து போனமையாலும் வடநாட்டில் அந்த மதம் இப்பொழுதுமிருக்கிறது. பிர்மசமாஜமும் ஆரிய சமாஜமும் இங்கிலீஷ் ராஜாங்கத்தின் சட்டத்தோடு கல்வி மிகுந்த இந்தக் காலத்தில் அமைக்கப்பட்டபடியால் அதுவும் நிலைத்துநிற்கிறது.

நம் தேசத்திலுண்டாயிருக்கும் ஆஸ்திக மதப் பிரிவுகள் ஒன்றுக் கொன்று நாஸ்திகமென்று கற்பித்துக்கொண்டு ஒரு மதஆச்சாரிகளுக்கு மற்ற மதஸ்தர்கள் பாஷாணம் வைத்தும் கல்லையில் தள்ளியும் பல நிந்தையான புஸ்தகங்களெழுதியும் தெய்வங்களை விகாரப்படுத்தியும் கோயில்களைச் சீர்குலைத்தும் வந்திருக்கிறார்கள். ஒரு பிரிவின் மதத் தெய்வத்தை இன்னொரு மதப்பிரிவினர் ஒரு தேவனென்று சொல்லுகிறார்களே ஒழிய தெய்வமாக ஒத்துக்கொள்ளுவதில்லை. சிவன், விஷ்ணுமுதலிய தெய்வங்கள் பிரமத்தின் மாயாத்தோற்றமென்றே சங்கரர் சொல்லி இந்து மதப்பிரிவுகள் அனைத்தையும் கண்டித்தார். அந்த சங்கரர் மதத்தை மாயாவாதக் கொள்கை என்றும் பிரத்தியட்ச பௌத்த நாஸ்திகமென்றும் மற்ற சமயவாதிகளும் கண்டிருக்கிறார்கள். இதில் ஆஸ்திக நாஸ்திகங்களெவை?

பிரபஞ்சத்தையும் அதிலுள்ள சிருஷ்டியின் வைபவத்தையும் எவ்வளவு ஆஸ்திகர்கள் அறிவின் தத்துவஆராய்ச்சியால் தெரிந்து கொண்டார்களோ அவ்வளவு தூரம் நாஸ்திகர்களென்று சொல்லப்பட்டவர்களின் ஆராய்ச்சியும் சென்றிருக்கிறதென்பது மிகையாகாது.

வைணவர்களில் சாதன பந்தி வைணவர்களென்று ஒரு கூட்டமுண்டு. அதற்குத் தலைவர் சாதனர். அவருக்குத் தொழில் மாம்சம் விற்பது. விற்று வருகையில் ஒரு சந்நியாசி சாலிக்கிராமம் கொடுத்தார். அதை அவர் பக்தியோடு பஜனை செய்து வந்தார். அப்பொழுது ஒரு பிராமண ஸ்திரீ அவர்மேல் காமமுற்று வர அவர் அவளைத் தடுக்க அவள் தன் புருஷனைக்கொன்று உடன்கட்டை ஏறினாள். அன்று முதல் அநேகர் சாதனரைச் சேர்ந்து அவரைக் குருவாகக் கொண்டு விஷ்ணுவை வணங்கி வருகிறார்கள். சாதன வைணவத்திற்கு சமய ஆச்சாரி சாதனர்; இவர் ஆஸ்திகர்; தெய்வ லோகத்தில் சதா மும்மூர்த்திகளுடன் உறவாடிக்கொண்டு தேவேந்திரனுக்குக் குருவாய் இருக்கப்பட்ட பிரகஸ்பதி நாஸ்திகர் ஒருகாலத்தில் தேவேந்திரன் ராஜ்ஜியத்தைவிட்டு தவசுக்குப்போய்விட ராஜாவில்லாது தெய்வ லோகம் சீரழிய தேவர்களெல்லாம் மும்மூர்த்திகளிடம் முறையிட அவர்களால் நீராது குருவான பிரகஸ்பதியிடம் போகக் கட்டளையிட அவ்விதமே பிரகஸ்பதியிடம் போய் அவரால் தேவேந்திரனுக்கு உலகச் சிறப்பு உபதேசிக்கப்பட்டு தேவேந்திரன் தெய்வலோகத்தை சீர்திருத்தி சிறப்பாக அரசாளச் செய்தார் என்று சொல்லப்படும் பிகஸ்பதி சொன்னதும் நாஸ்திகம். பிகஸ்பதியைவிட சாதனர் அதிகம் தெரிந்துவிட்டவரென்று சொல்லுவதற்கு இவர்களைப் பற்றின சமயவாதபுஸ்தகங்கள் இடம் கொடுக்குமா?

பார்ப்பனனுக்கு எங்கெல்லாம் உயர்வும் பிழைப்புமில்லையோ அங்கெல்லாம் நாஸ்திகம்தான் அவர்கள் தரும சாஸ்திரமான ஸ்மிருதிகளுக்கு தடையுண்டானால் சமயம் கெட்டு சாஸ்திரம் பாழடைந்து கடவுள் ஓடி ஜன சமூகமெல்லாம் நாஸ்திகர்களாகி விடுவார்கள். அந்த சமயம் ஜனங்களுடைய சமயப் பற்றுக்கும் மூடபக்தி அறியாமைக்கும் தகுந்தவர் யார் யாரைக் கொண்டு எழுத வேண்டுமோ அவர்களைக் கொண்டு எழுதியும் கட்சியுமுண்டுபண்ணி விடுவார்கள். இவை அகத்தியர் கதையிலிருந்து பரிமேலழகர் உரையோடு அநேக காலத்து வழக்கம். இப்பொழுது நடந்து முடிந்திருக்கும் ஒரு விஷயத்தை உங்கள் ஞாபகத்திற்குக்கொண்டுவருகிறேன். திருவாளர்கள் கா. சுப்பிரமணியபிள்ளையவர்களும் சுவாமிவேதாசலமவர்களும் ஆரியக் கொள்கை - தமிழ்நாட்டுக்குச் செய்த சில அலங்கோலத்தைச் சொன்னார்கள். உடனே சிலபார்ப்பனர்கள் பின்னாலிருந்து கொண்டு திரு. மா. சாம்பசிவம் பிள்ளைக்குத் தொகுத்துக் கொடுத்து அவரைக் கொண்டு திருநான்மறை விளக்க ஆராய்ச்சி என்னும் எழுதி விட்டார்கள். அதற்கு அபிப்பிராயம் சொன்ன சைவப் பெரியார்களில் இலக்குமணப் போற்றி யென்பாரும் இன்னுமொரு சிலரும் தவிர மற்றவர்களெல்லாம் மேற்சொல்லப்பட்டவர்களைத் தாழ்த்தியும் நாத்திகப் பிரசாரகர்களென்றும் எழுதும்படியும் செய்யப்பட்டிருக்கிறது.

எதற்கும் காரணமாயிருக்கும் கடவுள் முகத்திலிருந்தும், தோளிலிருந்தும், தொடையிலிருந்தும், பாதத்திலிருந்தும் மனிதனை உண்டுபண்ணி முகத்திலிருந்து வந்தவனுக்குவேதத்தைச் செய்துகொடுத்து, மற்றவர்களுக்கு அதைச் சொல்லாதேயென்று சொல்லி யாரோ தப்பித் தவறிக் கேட்டுவிட்டால் அவன் மூக்கையும் நாக்கையும் அறுத்துவிடு என்று சொன்ன கடவுள் எந்தக் கடவுள் என்பதுதான் சுயமரியாதைக்காரர்களின் கேள்வியே ஒழிய கடவுள் உண்டா இல்லையா என்று வாதிக்க வந்தவர்களன்று. உலக போகத்தை விட்டு கடவுள் பாதத்தை அடையப் போகிறவர்களைத் தடைப்படுத்தவந்தவர்களுமன்று. கடவுள் பாதத்தை வணங்கப்போகும் பக்தர்கள் கடவுளுக்கும் அவர்பிள்ளை குட்டிகளுக்கும் எந்தவித லஞ்சமும் வேண்டியதில்லை என்றும் சொல்லுகிறார்கள். கடவுள் பாதத்திற்குப்போகும் பக்த கோஷ்டிகளுக்குப் பின்னால் வரும் மற்ற பக்தர்களை அவர் சந்நிதியில் தடுக்கும் பக்தர்களுக்கு எந்தக் கடவுள் இந்த கொடுமையான புத்தியை உபதேசம் பண்ணினார் என்றே கேட்கிறார்கள். ஒழுக்கம் விட்டவன், பாவி துரோகி, பிரஷ்டன் முதலிய பக்தர்களுக்கு மோசம் குஷ்ட நோய் பேராசை சமயப்புரட்டால் பொருள் பெறுகை முதலியவைகளோடு கூடிய அர்ச்சகர்கள் அர்ச்சிக்கும் சந்நிதிக்கு ஏழையான பரம சாதுக்கள் வந்துவிட்டால் அந்த இடத்தைவிட்டு ஓடிப்போகும் கடவுள் எந்த கடவுளென்பதை ஜனசமூகம் தெரியவேண்டுமென்றே அவர்கள் விரும்புகிறார்கள்.

கடவுளைக் காட்டி தங்களை மேன்மைப்படுத்தி தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்திக்கொள்ளுகிறவர்களின் பேரில்மற்றவர்களின்பற்றுதல்குறைவதற்குபலகாரணங்களிருக்கின்றன. அவைகளில் ஆஸ்திக மதங்களிலிருக்கும் பலபிரிவுகளே முதற்காரணம். ஆசாரியன் சொல்லுவதுபோல பிரஜைகளும்கடவாமல் கடைசியாய் ஆசாரியனும் ஜனங்கள்கடப்பதைப்போல் நடக்கவேண்டி வந்தது கடப்பது இரண்டாம் காரணம். வைதிக விஷயங்கள் அசிரத்தையோடு பரிகாசத்திற்கு ஏதுவாய்தன்காரியத்திற்கே வலம் காமக்குரோத மோகாதிகளில் மூழ்கி மூட நம்பிக்கையில் முடிவதே மூன்றாம் காரணம். தம்தம் கொள்கைகளே உண்மை எனச்சாற்றி வந்த சமயவாதிகளின் கட்சி வாதங்களும் பலவகைப்பட்ட பண்டைக்காலத்து மூடப் பிடிவாதச் சமயக்கொள்கைகளும் இக்காலத்தில் செய்யப்படும் புராதன தத்துவ ஆராய்ச்சியென்னும் செம்மட்டியடியாலும் பூதபௌதிக சாஸ்திரத்தாலும் மொத்துண்டு மண் பாண்டங்களைப்போற் பொடிசூரணமாய் மறைவதே நான்காம் காரணம். இக்காலத்தில் மேற்றிசையில் மதத்தை யனுசரிப்பது ராஜிய நிர்வாக உலகத்திற்கு மந்த புத்தியை அளிக்கும் இயல்பெனக் கருதி தெளிந்த புத்தியுள்ளவர்கள் மதத்தின் சம்பந்தத்தை இழிவாய்க் கருதுவது ஐந்தாம் காரணம். எந்த விதமாக விவகாரங்களைச் செய்தாலும் கடைசியில் உலகவிவகாரங்களின் அவசியத்தில் மனிதனுடைய சகல நிலைகளும் முன் நின்று கொள்ளுவதே இத்தனை காரணங்களுக்கும் இடம் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

(தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க)

# இதிகாசங்கள்

## இராமாயணம்—கிட்கிந்தா காண்டம்

(கட்டுரை—6)

(திரு. சந்திரசேகரப் பாவலர்)

(சருக்கங்கள் 27 முதல் 38 முடிய)

இராமன் தம்பியுடன் பிரசிரவண மலையின் குகையில் தங்கியிருந்தான். அவன் ஒவ்வொரு நாளும் சீதையை நினைத்து கண்ணும் கண்ணீருமாக மனம் குன்றி அறிவிழந்து எப்போதும் பரிதவிப்பதை இலக்குவன் கண்டு அவ்வாறு சோர்வைப் பெருக்கினால் வல்லவனாகிய இராவணனை வெல்ல முடியாதெனக் கூறித் தேற்றினான். இராமன் அதனால் தெளிந்தான். தம்பி கவலையற்ற மழைக் காலத்தைக் கழிக்க வேண்டினான். ஒருநாள் இராமன் மழைக்காலத்தை விவரித்தான். அவன், "தம்பி! எனக்கு விரக தாபம் அதிகரிக்கிறது. இக்காடு சிவந்த நீருடைத்தாகி மயில்கள் ஆடுவதும் மதுப்பாண்டங்களாலும் குடித்துக் கூத்தாடுபவர்களாலும் விளங்கும் சாராயக் கடையைப்போலிருக்கிறது. மேகத்தின் மின்னல் இராவணன் மடியிலிருக்கும் சீதையைப்போல இருக்கிறது. திருமால் ஆடிமாதத்தில் தூங்க ஆரம்பித்து ஆவணிமாதத்தில் ஆழ்ந்து தூங்குகிறார். சுக்ரீவன் நாட்டையும் மனைவியையும் அடைந்து சுகமாக வாழ்கிறான். நானோ அரசை யிழந்து மனைவியையும் பறிகொடுத்து பகைவனையும் வெல்லாமல் ஆற்றின்கரையைப்போல் கரைந்து கரைந்து வருந்துகிறேன். இராவணனோ சாமானியனல்லன். என் துக்கத்திற்கோ எல்லையில்லை. சுக்கிரீவன் வாக்கை நிறைவேற்றுவானென 'நினைக்கிறேன்' என்றான். இலக்குவன் "அதுசரி" யென்றான். சுக்கிரீவனோ, மழைக்காலம் கழிந்தும், ருமை தாரை முதலிய பெண்களுடன் குடித்துக் குலாவியிருந்தான். அனுமான் வந்து நினைவுறுத்த சுக்கிரீவன் நீலனை அழைத்து பதினைந்து நாட்களுக்குள் சேனைகளை வரவழைக்கக் கண்டிப்பாகக் கட்டளையிட்டான்.

சுக்கிரீவன் வாராமை கண்டு இராமன் மூர்ச்சையடைந்தான். பின் தெளிந்து விரகதாபம் மேலிட்டு புலம்பி அறிவிழந்திருந்தான். இலக்குவன் தேற்றினான். இராமன் தெளிந்து மறுபடியும் காமமீதூர்ந்து புலம்பி, "சுக்கிரீவன் நான் என் ஊரையும் உறவினரையும் பிரிந்து அநாதையாயிருக்கிறேனென என்னை அவமானம் செய்கிறான். நான் அவனுடன் சேர்ந்ததும் வாலியைக் கொன்றதும் சீதையைத் தேடுவதில் அவனுடைய உதவியை நாடியே என்பதை மறந்து விட்டான். தம்பி! நீ உடனே சுக்கிரீவனைக்கண்டு என் இயல்பு கூறி அவன் வாக்கைத் தவறினால் கொல்வேன் எனச் சொல்!" என்றான். இலக்குவன், "அண்ணா! சுக்ரீவன் தீயவன் அவனைக்கொன்று விடுவோம். தாரையும் அங்கதனும் சீதையைத் தேடட்டும்" என்று கூறிப்புறப்பட்டான். ஆனால் அவனைப் பொறுமையாக நடக்கும்படி இராமன் எச்சரித்தான்.

இலக்குவன் கடுங்கோபத்தோடு வருவதைக் கண்ட வீரர்கள் போர்க் கருவிகளோடு கோட்டையைக்காத்து நின்றனர். சிலர் சுக்கிரீவனிடம் இச்செய்தி கூறியும் அவன் மயங்கியிருந்தான். இலக்குவன் நகரினுட்புகாமல் வீரர் தடைபுரிந்திருந்தனர். அவன் அங்கதனைக்கண்டு தன் வருகையைச் சுக்கிரீவனுக்குரைத்து வரச் சொன்னான். அங்கதன் தெரிவித்தும் சுக்கிரீவன் குடி வெறியாலும் துக்கத்தாலும் உணர்வற்றிருந்தான். அங்கதன் வராமைக் கண்டு இலக்குவன் உள்ளே நுழைய முயன்றான். அங்கதன் அந்தரங்க அமைச்சிருவருடன் சுக்கிரீவனை அடைந்து செய்திகூற சுக்கிரீவன் அச்சமடைந்து இலக்குவனை எவ்வாறு சமாதானம் செய்வதெனக் கவலைப்பட்டான். அனுமான் இலக்குவனைப் பணிவதே அதற்கு வழி என்றான். சுக்கிரீவன் இலக்குவனை அழைத்து வர அனுமதி தந்தான். இலக்குவன் உள்ளே நுழைந்து மாடமாளிகைகளைக் கடந்து அரண்மனையினுள் புகுந்து வீணை முதலிய இன்னிசை கேட்டு பெண்கள் சிறந்த அணிபல அணிந்து மாலை தொடுத்திருந்ததைக் கண்டு வில்லொலி காட்டித் தன் வரவை அறிவித்து ஒருபுறம் கவலையுடன் உட்கார்ந்திருந்தான். சுக்கிரீவன் அஞ்சி தாரையை அனுப்பினான்.

தாரை சம்போக சுகத்தை வளர்க்கக் குடித்த மதுவின் மயக்கத்தால் கண்கள் சுழல சிரமத்தால் தள்ளாடி அடிமேல் அடிவைத்து நடந்து கொண்டு உடைகள் தளர்ந்து அவிழ்ந்து தொங்க படுக்கையிலிருந்த கோலத்துடன் சம்போகக் குறிகள் தெளிவாக விளங்க தனபாரத்தால் சற்று வளைந்த உடலுடன் இலக்குவனிருக்கும் இடத்திற்கு வந்தாள். அவன் வெட்கமற்றுத் தன்னைக் கண்டு தலை குனிந்த இலக்குவனைச் சமாதானப்படுத்தினாள். இலக்குவன் தான் சினந்து வந்ததைக் கூறி சுக்கிரீவன் குடிவெறியிலிருப்பதைக் கண்டித்தான். தாரை சேனைகளைச் சுக்கிரீவன் சேர்ப்பது கூறி அவனை மன்னிக்குமாறுவேண்டி உள்ளே அழைத்துச் சென்றாள். சுக்கிரீவன் பலவித அணிகலன்களோடும் சிறந்து ருமையை மார்போடு இறுகத் தழுவிக்கொண்டு இலக்குவன் வருவதைக்கண்டு எழுந்தான். இலக்குவன் அவனுடைய நன்றிகெட்ட செயலைக்கூறிக் கண்டித்தான். அப்போது தாரை, "இவன் காமத்தில் ஆழ்ந்திருக்கிறான். நன்றி மறந்தவனல்லன். இராவணனோ வெல்ல முடியாதவன். அதனால் சுக்கிரீவன் தனது சேனைகளைச் சேர்க்கிற முயற்சியிலிருக்கிறான். நீர் சினம் தணியும். இப்பெண்கள் சுக்கிரீவனுக்கு அபாயம் நேருமோ என அஞ்சுகிறார்கள்" என்றாள். அதனால் இலக்குவன் சீற்றம் தணிந்தான். சுக்கிரீவன், "உங்களால் நான் இழந்த அரசைப்பெற்றேன். உங்களுக்குவேண்டும் உதவிகளைச் செய்வதே என் கடமையென்பதை உணர்வேன்" என்றான். இலக்குவன் மகிழ்ந்து தன்னை மன்னிக்குமாறு வேண்டி இராமனைவந்து பார்க்குமாறு சுக்கிரீவனை அழைத்தான்.

சுக்கிரீவன் பத்து நாட்களுள் வானரச் சேனை முழுமையும் திரட்ட அனுமானுக்குக் கட்டளையிட, அனுமான் அவ்வாறே வீரரை ஏவினன். சேனைகள் வந்துசேர்ந்து அரசனைப் பணிந்தன. இலக்குவன் சுக்கிரீவனை நோக்கி வணக்கமாக, "திருவுடையாய்! இனி உனக்குப் பிரியமானால் இவ்வூரை விட்டுப் புறப்படுவோம்" என்றான். சுக்கிரீவன் இலக்குவனுடன் ஓர் பல்லக்கில் எதிர்சென்று இராமனைப் பணிந்தான். இராமன், "படையெடுத்துச் செல்லவேண்டும்; ஏற்பாடுகளைச் செய்" எனக் கூறினான். சுக்கிரீவன் இராவணனை விரைவில் வெல்ல ஏற்பாடு செய்வதாகக் கூறினான். இராமன் மகிழ்ந்தான். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

நம் நாட்டில் சிலர் தெய்வமாகக் கருதி வழிபடும் இராமன் ஒவ்வொரு நாளும் சீதையை நினைந்து கண்ணும் கண்ணீருமாக அறிவிழந்து மனம் குன்றி எப்போதும் பரிதபித்தனனாம். ஒருநாள் அவன், "தம்பி! எனக்குவிரகதாபம் அதிகரிக்கிறது" என்று கூறினனாம். தனது தாபத்தைத் தம்பியினிடம் வெட்கமில்லாமல் சொல்லி அழுவது தெய்வத்தின் தன்மை போலும்! இராவணன் மடியிலிருக்கும் சீதையைப்போல மேகத்தில் மின்னலிருந்ததாம்! இதை இராமன் வாயிலேற்றி வால்மீகி கூறுகிறார். அக்காட்டில் நீர் நிலைகளின் அருகே மயில்கள் ஆடுவது கள்ளுக்கடைகளினருகே குடிவெறியில் ஆடுவதுபோல இருந்ததென வான்மீகர் கூறுகிறார். இப்புலவர் பெருமானுக்கு இதனினும் சிறந்த உவமானம் தோற்றவில்லை போலும்!

"திருமால் ஆடியில் தூங்கத் தொடங்கி ஆவணியில் ஆழ்ந்து தூங்குவார்" என இராமன் கூறுகிறான் என்றால் இவனைத் திருமாலின் தோற்றமெனக் கூறுவது எங்ஙனம் பொருந்தும்? திருமாலின் பெருமை தானென்னே? தூங்கு மூஞ்சியர் எங்கும் நிறைந்த கடவுளாவாரா? என்னே இவர் தெய்வ இயல்புகள்!

இராமன் பொறுமையில் ஒப்புயர்வற்றவன். அவன், "சுக்கிரீவன் நாட்டையும் மனைவியையும் அடைந்து சுகமாக வாழ்கிறான். நானோ அரசையிழந்து மனைவியையும் பறிகொடுத்து பகைவனையும் வெல்லாமல் ஆற்றின் கரையைப்போல் கரைந்து கரைந்து வருந்துகிறேன்" என ஏங்குகிறான். 'இராமனைத் தெய்வமென நம்பி அவன்போக்கில் நாமும் நடந்தால் நமது சிந்தை எவ்வளவு தீயதாக மாறிவிடும்!

இராமன் இராவணனுடைய அளவில்லா ஆற்றலை நினைந்து நினைந்து மனம் கலங்குகிறான். மழைக்காலம் கழிந்தும் சுக்கிரீவன் வாராமையால் ஏங்கி மூர்ச்சையடைகிறான். பின் காமத்தால் புலம்பி 'நான் அவனுடன் சேர்ந்ததும் வாலியைக்கொன்றதும் சீதையைத் தேடுவதில் அவனுடைய உதவியை நாடியே" என்று கதறுகிறான். இத்தகைய சுயநலக்காரரும் உண்டோ? இலக்குவன் சுக்கிரீவனைக் கொன்று அங்கதனுக்கு முடிசூட்டி அவனால் உதவி பெற நினைக்கிறான்! என்னே இவர் தம் சுயநலம்!

சுக்கிரீவனோ மிகவும் தீயவனாகக் காணப்படுகிறான். இராமன் செய்த நன்றியை மறந்து அளவிறந்து குடித்து விட்டு தனது அண்ணனாகிய வாலியின் மனைவியைக் கூடிக் காம இன்ப நுகர்ச்சியில் ஈடுபட்டு மதியிழந்திருந்தான். அண்ணனின் மனைவியைத் தாயெனக் கருதவேண்டுமென்ற உத்தம ஒழுக்கத்தையும் மறந்தான். இத்தகைய பாதகனை நம்பி இராமன் கவலையுற்றனன். தீய ஒழுக்கங்களெல்லாம் திரண்டு ஒருருவானவனோ இச்சுக்கிரீவன்!

இலக்குவன் கிட்கிந்தையுட் புகுந்துபோகும்போது வால்மீகி அந்நகரவளப்பத்தை மிக விவரிக்கிறார். அத்துடன் அந்நகர மாந்தர் நிலைமைகளையும் விரித்துக்கூறுகிறார். அவைகளை ஆராயும்போது அறிவற்றமிருகமும்கூட அவ்வளவு சிறந்த நகரீகத்தினரைக் குரங்குகளென்று கூறாது. ஆனால் ஆரிய முனியாகிய வால்மீகி அவ்வளவு பெருமைகளையும் கூறிவிட்டு அந்நகரமாந்தர் குரங்குகள் என்கின்றனர். இவர்களுடைய பித்தலாட்டங்களுக்கு அளவும் உண்டோ? குரங்குகளுக்குச் சின்ன மூளை சிறிதாயிருத்தலினாலேயே அவைகளுக்குக் கையினால் செய்யும் நுட்பமான தொழில் முறைகள் வீணை முதலிய இசைக் கருவிகளை மீட்டுதல் முதலிய அருஞ்செயல்கள் இயலவில்லை, இவ்வருஞ் செயல்களைச்

செய்வதற்கு ஏற்ற திறம் மக்களுக்கு மட்டுமே உண்டு என உடல் நூல் ஆராய்ச்சியாளர் நிலைநாட்டுகின்றனர் அவ்வாறாயின் சினமிக்க இலக்குவனுடைய மனமும் ஈடுபடும்படி அந்நகரப் பணிப்பெண்களே வீணை வாசித்தனரெனின் ஏனைய உயர் நிலைப்பெண்கள் பெருமைக்கும் அளவுண்டாமோ? அவர்களைக் குரங்குகளென எழுதிவைத்தது ஆரியர் தம் குரங்குச்சேட்டையேயன்றி வேறு யாது? உண்மையில் நாகரீக மற்றவர்களாகிய ஆரியரையே மிருகங்களென்றும் குரங்குகளென்றும் கூறுதல் அமையும்!

"தாரை சம்போக சுகத்தைவளர்க்கக் குடித்த மதுவின் மயக்கத்தால் கண்கள் சுழல சிரமத்தால் தள்ளாடி அடிமேல் அடிவைத்து நடந்துகொண்டு உடைகள் அவிழ்ந்து தொங்க படுக்கையிலிருந்த கோலத்துடன் சம்போகக் குறிகள் தெளிவாக விளங்க இலக்குவன்முன் வந்து தோன்றினாள்" என வால்மீகி கூறுகிறார் இந்த இடத்தில் சீனிவாசய்யங்கார் பக்கம் 124-ல் "எந்தப் பாணத்தால் என் பிரிய நாயகனை வாலியை அடித்துக் கொன்றாயோ அதே பாணத்தால் என்னையும்கொன்று வாலியுடன் சேர்த்துவை. நானில்லாவிட்டால் வாலி துக்கமடைவாரென்று சொன்ன பதிவிரதை இவளே. வால்மீகியின் கருத்து இப்படித் தெளிவாய் இருந்தாலும் கம்பருக்கு இது இஷ்டமில்லை. சகல உத்தம குணங்கள் வாய்ந்த தாரையைக் குறைவாகச் சொல்ல மனமில்லை. மகாபதிவிரதை யென்னும் கைம்பெண்களுக்குரிய வேஷத்துடனும் நியமத்துடனும் காலங்கழித்தாளென்றும் அழுத்தமாகச் சொல்லுகிறார்" என ஒரு குறிப்பு எழுதியிருக்கிறார். இது ஒவ்வொருவரும் ஆழ்ந்து சிந்திக்கவேண்டிய குறிப்பே. இது கம்பருடைய மனப்பான்மைக்கு மிக ஏற்ற இடமாயிற்றே. இதனை மாற்றித் தாரையை மிகவும் நல்லவளாகக் கூறுவதில் இவருக்கென்ன நோக்கம் என்றால் சுக்கிரீவனை மிகவும் நல்லவனாகக் காட்ட விரும்பியே இவர் இவ்வாறு செய்தார். இவைதத் தவிர வேறு நல்ல நோக்கம் இவருக்கு இருந்திருக்க முடியாது. இதைப்பற்றி நாம் பின்னர் விவரிக்க எண்ணியிருந்தேமெனினும் இவ்விடத்தில் விளங்க எழுதுவோம்.

கம்பரைப்பற்றி யாம் குறை கூறுகின்றோமெனச் சில நண்பர்கள் நினைக்கலாம் அது மிகவும் தப்பிதமான எண்ணமென நாம் அந்நண்பர்களுக்குக் கூறுகின்றோம். கம்பர் தமிழ்மக்களை இழித்துரையாடும் இராம கதையைப்பாடியதோடு ஆரியர் தம் ஏற்றமும் பற்பல இடங்களிலும் குறித்துத் தமது இனத்தவருடைய தாழ்வைக் கருதினர் என்பதே எமது உள்ளத்தை ஈர்வது. அதனால் அவருடைய மனநிலையைஉள்ளவாறு எடுத்தியம்புகின்றோம். எமது உடன் பிறப்பாளராகிய தமிழ்மக்களுக்கு உண்மையை எடுத்தியம்புவதே எமது உண்மையான நோக்கம் கம்பர் தாரையாகிய ஓர் பெண்மணியை இழித்துரைப்பானேன் என்று கைம்மை தோற்றதாகக் கூறுகிறார் எனச் சிலர் நினைக்கலாம். அற்றன்று; ஏனெனில், கம்பர் உண்மையில் பெண்மை பேணும் தன்மையினரேல், இத்தாரையின் கோலத்தைப்பற்றிப் பின்வருமாறு எழுதுவாரா என அன்பர்களைச் சிந்திக்கவேண்டுகின்றோம். தாரையின் கைம்மைக்கோலத்தை விவரிக்க வந்த கம்பர் பின்வருமாறு பாடுகிறார். (கிட்கிந்தைப்படலம் பாடல் 52)

"மங்கல அணியை நீக்கி மணி
அணி துறந்து வாசக்
கொங்கலர் கோதைமாற்றி குங்கு
மம் சாந்தம் கொட்டாப்
பொங்குமம் முலைகள் பூசக் கழுத்
தொடுமறையப் போர்த்த
நங்கையைக் கண்ட வள்ளல் நயனங்
கள் பணிப்ப நின்றான்"

ஒரு கற்புடைய பெண்மணியை ஒழுக்கமுடைய புலவனொருவன் விவரிக்கும் முறை இது தானோ? தாலியில்லாமல் வேறு நகையில்லாமல் முக்காடிட்டு வந்து இலக்குவன் முன் தோன்றினாள் தாரை என்று கூறி அமைதலாகாதோ; குங்குமச் சாந்திழந்த திரண்ட கொங்கைகள் மறையமுக்காட்டிட்டாள் என்றுதான் கூற வேண்டுமோ? அறிஞரே சிந்தியுங்கள். இதனால் நமது கம்பர் வேறு எந்நோக்கம் கொண்டு வால்மீகியினுடைய கதையை மாற்றியிருப்பரென அறிஞர் தெளிதல் சுலபமாம். இன்னும் நமது புலவர் பெருமானாகிய கம்பர் மனநிலையை இதே படலங்களில், இவர்கூறும் பாடல் பகுதிகளால் கூறுவாம்.

கார்காலப்படலத்தில் பாடல் 34ல் கம்பர் பெருமான் "காட்டாறுகள் பூமாதேவிதனது மலைகளாகிய பெரிய கொங்கைகளிலிருந்து சுரந்த பால் போன்றன" எனப்பாடுகிறார் கம்பர் சீதையைப்பற்றிக் கூறும் போது பாடல் 49-ல் "தேரைக் கொண்ட பேரல்குலாள்" என்றும் பாடல் 52-ல் "வாரேர் முலையாள்", என்றும் கூறுகிறார். கம்பர் இதே கார்காலப்படலத்தில் பாடல் 13-ல் 'புழுங்குமபுணர்முலை" என்றும், பாடல் 47-ல் "முகிழ் முலை ஆய்ச்சியார்" என்றும், பாடல் 82-ல் "செறி குரம்பைத் துமரு எயிற்றியர்" என்றும், பாடல் 85-ல் "இழைப் படுக கொங்கையும்" என்றும், பாடல் 110-ல் "பாசிழை மடந்தையர் பகட்டுவெம்முலை" எனவும் பல இடங்களில் கொங்கைச்சொல்லைக்கூறி மகிழ்கிறார். இம்மகிழ்ச்சிக் கருதியே தாரையையும் முன் கூறியபடி விவரித்தார் என்பதில் என்ன தடை?

தாரை இலக்குவன் முன் வந்ததைக்கூறும் கம்பர் அவளுடன் வந்த பெண்களை வருணிக்கிறார். அப்பாடல் வருமாறு:—(கிட்கிந்தைப்படலம் 45)

"விலங்கு மெல்இயல் வெண்நகை
வெண்மதி
இலக்கு நுண்இடை ஏந்திள
மென்முலைக்
குலங்கள் தோகை மகளிர்
குழாத்தினுள்
வலங் கொள்வீதி செலவழி
மாற்றினாள்"

பின்னர் பாடல் 77-ல் இலக்குவனைப் பிரிந்து தாரை தோழியருடன் போனாள் என்று கூறுமிடத்தும் கம்பர் "தேரல்குல் கலசக் கொங்கை மாதர் குழாத்தோடும் தாரை போனாள்" எனப் பாடுகிறார்.

சுக்கிரீவனுக்கு இளம் பெண்கள் கால் பிடித்தனர் எனக் கூறவந்த கம்பர் (பாடல் 18) "இளமுலைச்சியர் ஏந்தடி தைவர" எனக் கூறினார். இவ்வித வருணனைகளையெல்லாம் அறிஞர் சிந்தித்து உண்மைத் தெளிய வேண்டுகின்றோம்.

தாரை உண்மையில் சுக்கிரீவனுக்கு மனைவியாக உடன்பட்டிருப்பாளா? வயதானவள், வாலியினுடைய மனைவி, பெரிய அங்கதனென்ற மகனை உடையாள். இவளைக் காம வயப்பட்டு அறிவு கெட்டான் என்பது அறிஞர் ஒப்புமாறில்லை. இது ஆரியர் புரட்டேயாதல் வேண்டும். அதுவும் வால்மீகியால் எழுதப்பெறாமல் பிற்காலத்திய நீமதியாளர் சிலரால் இவ்வனம் எழுதப்பெற்றிருக்கவேண்டும். இவ்வாறு வாலியைப்பற்றிக் கூறுமிடத்துப் பல மாறுதல்களைப் பிற்காலத்தார் செய்திருக்க வேண்டுமென்று மொழிபெயர்ப்பாளர் சீனிவாசய்யங்கார் எழுதிய குறிப்பை முன் கட்டுரையில் எடுத்துக் காட்டினோம். இவர்கள் தம் நீமதி இருந்தவாறென்னே? சுக்கிரீவன் மிகவும் நீமதியாளனெனினும் அவனைப்பற்றி இலக்குவனைக் கண்டபோது வால்மீகி கூறும் கூற்றுக்கள் அறிவுடையார் அருவருக்கும் நிலைமையிலுள்ளன. அத்தகைய சிரியனாகிய சுக்கிரீவனுடைய நட்பை விரும்பிப் பெற்ற இராமன் எந்நிலையினனாதல்வேண்டும்!! தாரை, "சுக்கிரீவனுக்கு அபாயம் நேருமோ என குமை முதலியோர் அஞ்சுகின்றனர். என இலக்குவனிடம் கூறிய இடத்தில் சீனிவாசய்யங்கார் பக்கம 130ல் "சுக்கிரீவன் செய்த பிரதிக்ஞையை மறந்தானா? சீதையைத்தேட என்ன ஏற்பாடு செய்திருக்கிறானென்று கேட்டுத் தெரிந்துகொள்; அப்படிச் செய்யாவிட்டால் இவ்விதமாகக்கண்டித்துவா என்று ராமனும் சொல்லவில்லை இலக்குவனும் தாரையைக் கேட்கவில்லை, இது இருவரிடத்திலும் புத்திக் குறைவைக் காட்டுகிறது. தாரை இலக்குவனுக்குச் சமாதானம் சொல்லி அவன் கோபிக்க இடமேயில்லை என்று நிரூபித்துவிட்டாள். அப்பொழுது இலக்குவனுக்கு வெட்கமுண்டாயிருக்க வேண்டும். வாலியைக்கண்டு கேட்டு விசாரிக்காமல் சுக்கிரீவனுடைய வார்த்தையையே நம்பி வாலியைக்கொன்றதுபோலாகும்" என எழுதுகிறார். இதனால் இராம இலக்குவருடைய அறிவில்லாமை விளங்குகின்றது. சுக்கிரீவனுடைய பேச்சைக்கேட்டு இலக்குவன் மகிழ்ந்து மன்னிப்புக் கேட்ட இடத்தில் சீனிவாசய்யங்கார் பக்கம் 132ல் "சீக்கிரமாகக் கோபிப்பதும், சீக்கிரமாகச் சந்தோஷப்பட்டு மெச்சுவதும் குழந்தைகளைப்போல் இலக்குவனுடைய சுபாவம்" என்று எழுதுகிறார். இதனால் இலக்குவனுடைய அற்ப சுபாவம் விளங்குகிறது. இனி கம்பருடைய ஏனையமாறுபாடுகளையும்காண்போம். இலக்குவன் சுக்கிரீவனைக்கொன்று அங்கதனைத் துணைக் கொள்ள வேண்டுமெனக் கூறிய பேச்சைக் கம்பர் மறைத்தார். மேலும் அங்கதன் சுக்கிரீவனுடைய மயக்கம் கொண்டு அமைச்சரை யழைத்து வந்து அவனுக்கு உணர்வுறுத்தினன் என்று வால்மீகி கூற அவன் அனுமானிடம் போய் அவனுடன் தன் தாரையை அடைந்து நிகழ்ந்ததுரைத்தனரென்றும் அவர் அவளுடைய செயலைக் கண்டித்துரைத்தனரென்றும் கம்பர் கூறுகிறார்.

சுக்கிரீவனுடைய ஆணையின்மேல் இலக்குவன் ஊருள் வந்தனனென்று வால்மீகி கூறுகிறார். கம்பரோ குரங்குகள் கதவையடைத்துப் பல மலைகளைப் பறித்து கதவைத்திறக்க முடியாமல் சார்த்தின என்றும் இலக்குவன் சினங்கொண்டு காலால் மிதிக்க அது சிதறித் திறக்க உடன் அவன் ஊருள்நுழைந்தனனென்றும் கூறுகிறார். இலக்குவன் வரும் செய்தியுணர்ந்த சுக்கிரீவன் தாரையை யனுப்பினனென வால்மீகி கூற கம்பர் அவள்தானே அனுமனொடு தன்தோழியர் சூழ வந்தனள் என்கின்றார். மிக அலங்கோலமாக வந்தனளென வால்மீகி கூற, கம்பர் அவள் உத்தம ஒழுக்கத்தினளாய் கைம்மையளாய் வந்தனள் எனக்கூறுகிறார். தாரைகூறியகூற்றால் இலக்குவன் சினம் தணிந்ததுகண்ட அனுமான் அவன் முன்னிலையில் வெளிப்பட்டுச் சினந்தணியப்பேசி அவனைச் சுக்கிரீவனிடம் அழைத்துப்போகின்றானெனக் கம்பர் புதுக்கதை புனைகிறார். பின்னர் இலக்குவன் அங்கதனிடம் தன் வருகை கூறியனுப்ப அவன் சுக்கிரீவனிடம் சென்று கூற சுக்கிரீவன் "குடிவெறியால் இத்தனை தீங்கு விளைந்தது. கள்ளினால் வருங்கேடுகள் அளப்பில; இனி நான் கள்ளுண்டேனேல் இராமனது சேவடி சிதைக்க" என்று சபதம் செய்கின்றனன் எனவும் அவர் புதுக்கதை புனைகிறார். கட்குடியை இனி விரும்புவதில்லை யெனச் சுக்கிரீவன் சூளுரைத்தமையொன்றும் வால்மீகி கூறாதொழிய அவன் கூறியதாகக் கம்பர் கூறவானேன்? ஈதெல்லாம் நீசவனாகிய சுக்கிரீவனை நல்லவனாகக் கூறி உலகை ஏமாற்றவல்லவா? இதே சிந்தனைதான் சுக்கிரீவன் தாரையைக் கூடினனெனக் கூறுமவிருக்கச் செய்ததும்! இங்கே

(தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க)

# ஆராய்ச்சி முரசு

## 'க.. வுளை நம்பினோர் கைவிடப்படாரா?'

["தமிழ்மகன்" வரைவது.]

"::: என்னைப் படைத்த ஈசா! கையிலேயங்கிரிவாசா! ஜீவதயாபரா! அப்பனே! ஆண்டவனே! நான் படும் அவஸ்தை உனக்குத் தெரியவில்லையா? உனக்குக் காணக் கண்ணில்லையா? தேவாதி தேவா! நான், மற்ற மனிதர்களுக்கு இருக்கின்றது போன்ற அவயவங்களையும், அறிவையும் உடையவனாகவே பிறந்திருந்தும் - தெய்வபக்தியில் நிறைந்தவனாகவிருந்தும்- சன்மார்க்கத்தினின்று சிறிதும் பிறழ்ந்து நடவாதவனாயிருந்தும் — எந்த விஷயத்திலும் மனதறியத் தவறிழையாதவனாயிருந்தும் "பறையன்" என்று கூறப்படும் குலத்தில் பிறந்த ஒரு காரணத்திற்காக என்னை எல்லா மனிதரும் வெறுக்கின்றனரே! "பறையர் குலம்" என்னபாவஞ் செய்ததோ தெரியவில்லையே! நான் என்ன குற்றஞ் செய்தேன்? எவர் பொருளை அநியாயமாகத் திருடினேன்? எவரைக் கொலை செய்தேன்? எவர் குடும்பத்தைக் கெடுத்தேன்? நான் ஒரு பாவமுஞ் செய்தவனல்லவே! ஆ! கடவுளே!! நான் உன்னைச் சதாகாலமும் எனது இருதயத்தில் இருத்தி வழிபாடு செய்துகொண்டு வருபவனாயிருந்தும் நீ என்னைப்பற்றிக் கவனிக்காமலிருந்து வருகின்றாயே! இது சரியா? இது முறைதானா? இது தர்மந்தானா? ஏ! பரமதயாளனே! பார்வதி கணவா! பக்தர்கள் நேயா! முருகனைப்பெற்ற குரவா! இவ்வாறு நான் துன்பப்பட்டுக்கொண்டு இருப்பதை நீ இன்னும் நிவர்த்தி செய்து வைக்காமல் பார்த்துக்கொண்டு இருக்கலாமா? உன் மனம் என்ன கல்லா அல்லது இரும்பா? அன்றி பாறையா? ஐயனே! ஆண்டவனே! நான் முறையிடுவது உனது காதுகளுக்குக் கேட்கவில்லையா? அல்லது என்னைக் காக்க உனக்கு விருப்பமில்லையா? நான் ஒருவன் மட்டும் இந்த நிலையிலில்லை? இந்தியாவில் மட்டும் ஏழு கோடி மக்கள் என்னைப் போலிருந்து வருகின்றனர். ஒருவரல்ல; இருவரல்ல 'ஏழுகோடி மக்கள்!' (சிறிது நேரம் மௌனம்) ஆம்! ஏழுகோடி மக்களில் பெரும்பாலார் இருக்கக் குடிசையின்றி — சாப்பிடக் கூழுமின்றி—குடிக்க சுத்த ஜலமின்றி நாடோறும் ஆயிரக்கணக்காக இறந்து வருகின்றனர். கருணைக் கடலே! கற்பகத் தேவே! எங்கள் துன்பத்தை நீ பார்த்துக்கொண்டு பேசாது இருக்க உனக்கும் மனம் இடங்கொடுக்கின்றதா? வேண்டாம்! வேண்டாம்!! சோதனை வேண்டாம்! தாமதம் வேண்டாம்! ஐயோ! ஆ! என் செய்வேன்! நான் பிச்சை எடுத்துக் 'கால் வயிறு' கஞ்சிசாப்பிட்டு 'பதின் மூன்று நாட்களா'கின்றனவே! உடல் தளர்கின்றதே! மயக்கம் உண்டாகின்றதே! மண்டையிடிக்கின்றதே! பசி வயிற்றைப் பிளக்கின்றதே! கண்பஞ்சடைகின்றதே! காது கேட்கவில்லையே! மூச்சுவிட முடியவில்லையே! நான் ஏன் மனிதனாய்ப் பிறக்கவேண்டும்! நாய், பன்றி, கழுதையாகப்பிறந்தாலும் சுதந்தரமாக வாழலாமே! ஏ! கருணாகரனே! ரதிபிதாவே! பிட்டுக்கு மண் சுமந்த பெருமானே! என்னை ஏன் இந்த நீச ஜென்மம் எடுக்கும்படி செய்து துன்புறுத்துகின்றாய். நான் எவ்வித பிழையும் செய்தவனல்லவே? போதும் உனது சோதனை, இப்போதாவது என்னைக் காப்பாற்று. என் அப்பனே; நீ வரமாட்டாயா எனது உயிரை மீட்க மாட்டாயா? நீ தான் கதி அய்யனே. அபயம் அபயம் அபயம் அபயம் என்று தஞ்சமடைந்தவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தவர் எனக் கேட்டிருக்கிறேன். ஆண்டவனே நீ ஏழைகளை ரட்சிப்பவர் என்பதாய்க் கேட்டிருக்கிறேன்; தயாநிதியே நீ எறும்புகடை எண்பத்து நான்குலட்சம் ஜீவப் பிராணிகளையும் காப்பவர் என்பதாய்க் கேட்டிருக்கிறேன். கிருபையங் கடலே! அத்தனைய பெருமானாகிய நீ —அவனியை படைத்த ஆண்டவனாகிய நீ—சர்வ லோகங்களின் பிதாவாகிய நீ —எங்கும் நிறைந்துள்ள இறைவனாகிய நீ— எல்லாஞ் செய்ய வல்லவனாகிய நீ — கருணை உருவினனாகிய நீ என் ஒருவனை இன்னும் காப்பாற்றாமல் பேசாமலிருக்கலாமா? என் ஒருவனைக் காக்க உன்னால் இயலாதோ? அதோ பேச முடியவில்லையே! ஆண்டவா நா உலர்கின்றதே! தடுமாற்றம் அதிகரிக்கின்றதே! தொண்டை கமருகின்றதே! (சிறிது நேரம் மௌனம்) ஹோ! ஏழை பங்காளா! இருடிகள் நேசா! வீராதி வீரா! கங்கையைச் சடையில் தரித்துள்ள கர்த்தனே. கேட்பவர்க்கு இல்லை யென்னாது கொடுக்கும் கிருபாநிதியே! இங்குவர மாட்டாயா? வந்து எனக்குக் காட்சி தரமாட்டாயா? காட்சி தந்து என் கஷ்டத்தை நீக்கமாட்டாயா? நான் பட்ட துன்பம் கொஞ்சமல்ல கோமானே! இன்னும் என் காலந்தாழ்த்திக் கொண்டிருக்கின்றாய்? நான் உனக்கு எவ்விதமான கெடுதியும் செய்தவனல்லவே! ஒருவேளை, நான் போனஜென்மத்தில் உனக்கு ஏதேனும் குற்றஞ் செய்தவன் என்பதை உத்தேசித்துக்கொண்டு வாளாவிருக்கின்றாயா? நான், அவ்வாறு போன ஜென்மத்தில் குற்றஞ் செய்தவனாயிருந்தாலும், அதற்காக இந்தஜென்மத்தில் என்னைத் தண்டிப்பது தர்மமாகாதே! நான் எந்தஜென்மத்திலுமே உனக்குப் பிழை செய்திருக்க மாட்டேன் என்று எனது மனம் நம்புகின்றதே! ஆம்!நான் உனக்கோ, மற்றவர்க்கோ எந்த ஜென்மத்திலும் இன்னல் புரிந்திருக்க மாட்டேனென்றே நான் பூரணமாய் நம்புகின்றேன்! ஏ! ஆபத் பாந்தவா! அநாதை ரட்சகா! அருளாளா! ஐயனே அகிலாண்டகோடிப்ரமாண்டநாயகா! என்னைக் காப்பாற்று நாயனே. நான் பட்டகஷ்டங்கள் கொஞ்சமல்ல அப்பனே! நான் எதை நினைந்தழுவேன்? ஆ! ஆ!! மனம் பதறுகின்றது! நான் ஆதியில் "ரங்கனு"க்குப் பிள்ளையாய்ப் பிறந்ததை நினைந்து அழுவேனா! எனது தாயிடம் பால் கிடைக்காமல் பட்டினியாய்க் கிடந்ததை எண்ணி அழுவேனா! குழந்தைவயதானபோது சாப்பிடுவதற்குக் கூழ் கூடக் கிடையாமல் நாலு நாள் ஐந்துநாள் பட்டினி கிடந்ததை உன்னி அழுவேனா! வாலிப வயதடைந்த பின்னர் வீடு தோறும் சென்று பிச்சை எடுத்து கால் வயிறு, அரை வயிறு, புளித்த கஞ்சியை உண்டு ஜீவனஞ் செய்ததை நினைந்தழுவேனா! 'சுடு சாதம்' என்பது எப்படியிருக்கும் என்பதை இதுவரையிலும் பாராமலிருந்து வருவதை நினைந்து அழுவேனா! வீடுகளில் பிச்சை எடுக்கும்போது "நாயே! பேயே! தடியா! எருமை மாதிரியிருக்கிறாயே! அறுத்துப் போட்டாலும் ஐம்பது வீசை கறியிருக்குமே! வேலைசெய்து சாப்பிட உனக்குச் சக்தியில்லையா? இனிப் பிச்சை எடுக்க வந்தால் 'ஆயிரக்கால்' சாப்பாடுதான் பெறுவாய்! ஓடு! பிச்சைக்கார நாயே!" என்ற சொற்களைக் கேட்டதை நினைந்து அழுவேனா! சில இடங்களில் வேலை கேட்க அதற்கு "ஏண்டா! பிச்சைக்கார! ஈனஜாதிப் பயலே! உனக்கு என்ன ஆணவமடா! எச்சியிலை பொறுக்கித் தின்னப் பிறந்த பயலுக்கு 'உத்தியோகம்' வேறு வேண்டுமா? சீ! சீ!! ஓடிப்போ! இனி வந்தாயானால் 'ஆற்காட்டுச் சோடு பூசை தவறாமல் பெறுவாய்!" என்று கூறிய புண்ணியவான்களுடைய சொற்களை நினைத்து அழுவேனா! படுக்க இடம் கிடையாமல் தெரு வீதிகளிலும், குப்பை கொட்டும் இடங்களிலும் தூங்கியதை எண்ணி அழுவேனா! குடிக்கத் தண்ணீர் கிடைக்காமல் மாடுகளுக்குக் கட்டியுள்ள மாட்டுத் தொட்டிகளில் சில காலங்களில் நீரருந்தியதை நினைந்தழுவேனா! சாப்பாடு கிடையாமல் ஐந்து நாள், பத்து நாள் பட்டினி கிடந்ததை எண்ணி அழுவேனா! தெருக்களில் நான் செல்லவிடாமல் தடுக்கப்பட்டதை நினைந்து அழுவேனா! சிறுவர்கள் என்னைப் பைத்தியகாரனாக மதித்துக்கொண்டு கல்லாலும், மண்ணாலும் அடிக்கப்பட்டதை நினைந்து அழுவேனா! இன்னும் நீ என்னைக் காக்கவராமல் இருந்துகொண்டிருப்பதை எண்ணி அழுவேனா? எதை நினைத்து அழுவேன்? திணறித்திணறி அழுதவண்ணம் சிறிது நேரம்மௌனம்) ஏ! ஓங்கார ரூபா! உத்தமர் மித்திரா! என்னைக் காப்பாற்று அய்யனே! நான் ஏழை, தேவனே! நான் ஏழையிலும் பரம ஏழை, நாதனே! நீ என்னைக் காக்காவிடில் என்னை ஆதரிக்கக் கூடியவர் இந்த உலகத்தில் ஒருவருமேயில்லை பூமானே! அன்பர்கள் சகாயனே! அருணாசலனே! 'ஆதிதிராவிடர்' என்று கூறப்படும் குலத்தில் பிறந்தவர்கள் எல்லோரும் இந்த நாட்டில், உனது அன்புக்குரிய இந்த நாட்டில் இருடிகள் பிறந்த இந்த நாட்டில் அடைந்துவரும் இன்னல்கள் ஒன்றல்ல; நூறல்ல; ஆயிரந்தானல்ல; லட்சமட்டுமல்ல; கோடியுமல்ல; பலகோடிகள் தானல்ல; அவை கணக்கிலேயே அடங்காதவை; ஆண்டவனே! நீ அறியாத ரகசியமல்ல; நிர்மலனே! 'உயர் குலத்தார்' என்று கூறிக்கொள்ளுபவர்கள் எங்களை நடத்திவரும் கொடுமைகளை அநியாயங்களை இரண்டு கண்களுடைய நல்ல மனிதர் பார்த்துச் சகிக்க முடியாதவர்களாயிருந்து வருகின்றனரென்றால், மூன்று கண்களையுடை நீ எப்படிப்பார்த்து சகிக்கப் போகிறாய்? ஊர்களில் எங்களை வசிக்கவிடமாட்டேனென்கின்றார்கள்! எங்களைத் தொட்டால் 'தீட்டு' உண்டாகிவிடுமென அஞ்சுகின்றார்கள்! பிச்சை எடுத்துச் சாப்பிடவிடமாட்டேனென்கின்றார்கள்! தண்ணீர் எடுக்கவிட மாட்டேனென்கின்றார்கள்! சுத்தமாயிருக்க விடமாட்டேனென்கின்றார்கள், கண்ணில் தென்பட விடமாட்டேனென்கின்றார்கள்! வெள்ளை ஆடை கட்டவிடமாட்டேனென்கின்றார்கள், செருப்புப்போட்டுக்கொண்டோ, குடைபிடித்துக் கொண்டோ நடக்கவிடமாட்டேனென்கின்றார்கள்! அங்கவஸ்திரம் போட்டுக்கொண்டு நடக்கவிட மாட்டேனென்கின்றார்கள்! கூரை வீடுகட்டிக் குடியிருக்கவிடமாட்டேனென்கின்றார்கள்! கைவீசி நடக்க விடமாட்டேனென்கின்றார்கள்! வேலை செய்து சாப்பிடக்கூட விடமாட்டேனென்கின்றார்கள்! ஒரே வார்த்தையில் கூறிவிடுவதென்றால் எங்களை உயிருடன்வாழவிடமாட்டேனென்கின்றார்கள். அப்பனே! மண்டலாதிபதியே! மலைமகள் கணவா! அரவமாலை யணிந்த பரமேஸ்வரா! என்ன; எதைதைக்கூறி முறையிடுவேன். ஐயையோ! நினைக்க நினைக்க மனம் பதறுகிறதே! கண்களில் நீர் தாரை தாரையாய் வடிகின்றதே! உதடு படபடவெனத் துடிக்கின்றதே; கூறுவதற்கு வாய் தடுமாற்றமடைகின்றதே! தேவா! மார்க்கண்டேயருக்கு என்றும் பதினாறு வயதுதந்த என் நாயனே! நாங்கள் உனது அன்பிற்குரிய மக்களில் சிலராகிய நாங்கள்-உன்னால் படைக்கப்பட்டவர்களாகியநாங்கள்-உன்னைச் சதா காலமும் மறவாதவர்களாகிய நாங்கள்—எவ்விதக் குற்றத்தையும் எவருக்கும் செய்யாதவர்களாகிய நாங்கள்—அறநெறி பிறழாது வாழ்வோராகிய நாங்கள்—

உன்னால் படைக்கப்பட்டவர்களாகிய பலரிலேயே உயிருடன் சித்திரவதை செய்யப்படுகின்றோம் என்றால் அதைப் பார்த்துக்கொண்டு நீ இருக்க உன் மனமும் இடம் தருகின்றதா? உனக்குக் கொஞ்சமாவது ஜீவ தயையில்லையா? இது உனக்கு அழகா? விஷ்ணுவின் மைத்துனா! வேலன் தந்தையே! மன்மதன் மாமனே மகேஸ்வரனே! சோதனை வேண்டாம்! சோமசுந்தரக் கடவுளே! நாங்கள் இவ்வளவு காலமாகச் சோதிக்கப்பட்டது போதும். தேவனே! நாங்கள் நாயிலும் இல்லை இல்லை, நாய்க்குக் கூட சுதந்தரம் கொடுக்கப்பட்டிருக்கிறது, பன்றியிலும் அன்று அன்று; பன்றிக்கும் சுதந்தரம் கொடுக்கப்பட்டிருக்கிறது; புழுவிலும் கீழாக நரகலிலும் அற்பமாக உயர் மக்கள் என்பவர்களால் கொடுமையாக நடத்தப்பட்டு வருகின்றோம். இனி இருப்பதா இறப்பதா என்ற நிலையில் உழன்று வருகின்றோம் ஆண்டவனே! இதை நீ அறியாயா? உனக்குக் காணக் கண்ணில்லையா? இரு கண்களுக்கு மூன்று கண்களிருக்கின்றனவே; நாங்கள் இனி பொறுக்க முடியாது; பொறுத்துப் பொறுத்து நாங்கள் பட்ட துன்பம் போதும் அந்தோ கண்ணீர் மாலை மாலையாய் விழுகின்றனவே! சே! பாழும் கண்களா! உங்களுக்கு அழுகைகூட ஒருகேடா? (சிறிது நேரம் மௌனம்) ஹே! காளைவாகனனே! இன்னும் ஏன் தாமதஞ் செய்கின்றாய்? இனி நீ வந்தாலல்லாமல் நான் உயிருடன் இருக்கப் போவதில்லை இது நிச்சயம் நீ இருப்பது உண்மையா? பொய்யா? என்பதை நான் பரிசோதிக்கப் போகின்றேன்! இதோ அருகிலிருக்கும் கிணற்றில் விழப்போகின்றேன்! நீ இருப்பது உண்மையானால் என்னைக் கிணற்றில் விழாமல் தடுத்து ஆட்கொள்! இன்றேல்-இ-ன்-றே-ல்-ல-வ? நான் இறந்து போகின்றேன்! அபயம்! அபயம்! உனக்கு அபயம்! என்று கூறிவிட்டு, மதுரையைச் சேர்ந்த வில்லாபுரத்தின் அருகிலிருந்த ஒரு பாழுங்கிணற்றில், எலும்பும் தோலுமாய் மிகவும் இளைத்துப் போய்க் காணப்பட்ட ஒரு மனிதர் ஒரு நாள் இரவு 10-மணிக்குத் திடீரென விழுந்தார்.

நானும், எனது நண்பரொருவரும் 'பிள்ளையார்பாளையம்' என்ற கிராமத்திற்கு எங்கள் சொந்த விஷயத்திற்காகச் சென்றிருந்தோம். எங்கள் வேலையை முடித்துக்கொண்டு திரும்பிவரும்போது 9 மணியிருக்கலாம். அச்சமயம் வில்லாபுரத்தின் அருகில் உள்ள ஒரு பாழுங்கிணற்றின் அருகில் ஒரு உருவம் நின்று கொண்டிருந்தது தெரியவே, அது என்ன என்பதைத் தெரியவேண்டி பக்கத்திலிருந்த ஒருமரத்தின் மறைவில் நின்று கவனிக்கலானோம். ஒரு மனிதர் ஏதோ பேசிக்கொண்டிருப்பது தெரியலாயது. ஆகவே, என்ன பேசுகிறார்? என்பதைக் கூர்மையாகக் கவனித்துக் கேட்கலானோம்.

மேலே கூறியுள்ளவாறு அந்த மனிதர் 'கடவுளை' நோக்கிப் பேசிக்கொண்டிருந்து விட்டு திடீரெனக் கிணற்றில் விழுந்தார். நாங்கள், அந்த மனிதர் கிணற்றில் விழுவார் என்றே சிறிதும் சந்தேகப்படாமலிருந்தபடியால் உடனே சென்று அவரை விழாமல் தடுக்க இயலாமல் போய்விட்டது. அவர் கிணற்றில் விழுந்து சிறிதுநேரமாகியும் நாங்கள் எங்களுடைய வியப்புநிறைந்த நிலையினின்று விடுபடாது இருந்தோம். பின்னர் ஒருவாறு நிலைமையைச் சமாளித்துக்கொண்டு, நாங்கள் கொண்டுபோயிருந்த பாட்டரி 'விளக்கால்' கிணற்றுக்குள் பார்த்தோம். ஆழம் கொஞ்சமேயிருப்பதாகக் காணப்பட்டது. உடனே எனது நண்பர் கிணற்றுக்குள் இறங்கிவிழுந்த மனிதரை அதிக கஷ்டமின்றி தூக்கிக்கொண்டு மேலே வந்து சேர்ந்தார். சேரவே, கிணற்றில் விழுந்த மனிதருக்கு உயிர் இருக்கின்றதா? என்பதைப் பரீக்ஷித்துப் பார்த்தோம். அந்த மனிதர் மிகவும் மெலிந்தவராயிருந்தபடியாலும் சாப்பிட்டு அநேக தினங்களானவராகக் காணப்பட்டபடியாலும் கிணற்றில் விழுந்தவுடனேயே இறந்து போய்விட்டார். எனவே பிணத்தை நாங்களே அடக்கம் செய்துவிட்டு மதுரை வந்து சேர்ந்தோம். இதிலிருந்து "கடவுளை நம்பினோர் கைவிடப்படாரா?" என்பதை எனது அன்புக்குரிய சகோதரி, சகோதரர்களே தெரிந்து கொள்வார்களாக!

## சமதர்மம் ஓங்குக

## வேற்றுமை விருக்ஷம் வேரோடு வீழ்க!

(பினாங்கு கே. என். மருதமுத்து.)

நானும் நீங்களும் நலம் பெறப் பிறந்த நம் நற்பொன் னாட்டிலே, ஏனோ ஓர் விருக்ஷம் எப்படியோ முளைத்துத் தானே வளர்ந்து தாராளமாய் வேரூன்றி விழுது இறக்கிப் பூமியைப் பலமாய்ப் பற்றி நிற்கின்றது. அறிவாளிகளதற்கு வேற்றுமை விருக்ஷம் என்ற பெயரைக் கொடுத்திருக்கின்றனர். அப்பெயர் அதற்குச் சாலப் பொருத்தமானதே அந்தப் பாழும் பெயர்கொண்ட விருக்ஷத்தைச் சுற்றிலும் தேளும், பாலும் சேர்ந்து நிந்திக்கும் தன்மையுடைய நமது சுயமரியாதை வளர்ந்து விசனமுகங் காட்டிக்கொண்டு நிற்கின்றது. நாம் அதை "வா"வென்றழைத்தாலோ; "பாழும் வேற்றுமை விருக்ஷத்தை வெட்டி வீழ்த்தி விடுங்கள்; அப்பால் நான் நீங்களழையாமலே வருவேன்" என்கிறது. பாருங்கள்! என்ன தெய்வீகத் தன்மையான சுயமரியாதை இது? தான் வரும்பொழுது வேற்றுமை என்னும் உயர்வு தாழ்வுகளே யிருத்தல் கூடாது என்கிறது.

ஆ ஹா! இத்தகைய சுயமரியாதை வந்து விட்டால், மக்கள் எத்தகைய இன்ப வாழ்வை வாழ்வார்கள்.

இத்தகைய சமத்துவம் போன்ற சுயமரியாதை அடைய வேற்றுமை விருட்சத்தை யன்றோ வெட்டித் தீயிலிட வேண்டியிருக்கின்றது. பாழும் வேற்றுமை விருட்சமோ, வந்து கொண்டிருப்பவர்க்கெல்லாம் குடிபுக இடம் கொடுத்து குவலயமெல்லாம் கெடவோர் கொடும்பிணிபோல் நின்று கொண்டிருக்கின்றது இவ்விருக்ஷம் படரப் படர வந்தவர்களெல்லாம் சுய ஆதிக்கம் செலுத்த முயற்சிக்கின்றனர். அங்ஙனம் முயல்பவர்களைத் தூரத்த எத்தனித்தால் வேற்றுமை விருக்ஷம் வீடுபோல இடங்கொடுத்து மேதினியைப் பாழ்படுத்திவிடும்போல் தோன்றுகிறது. அதற்காக வேற்றுமை விருக்ஷத்தை பின்பு வெட்டிக் கொள்வோம். முதலில் வேற்றுமை விரட்டிவிடுவோமெனப் புறப்பட்டால் வீர முழக்கம் செய்யும் நமது ஈ. வி. ராமசாமிப் பெரியார் வழியை மதித்து, "சகோதரர்களே பதட்டம் வேண்டாம்! பாபச் செயல் வேண்டாம், உங்கள் பூமியில் உங்கட்கு இடைஞ்சலாய் முளைத்திருக்கும் வேற்றுமை விருக்ஷத்தை வெட்டி வீழ்த்துங்கள். சுயமரியாதை பெற்று சுயராஜ்யம் பெறலாம்" மென்கிறார். சகோதர சகோதரிகளே! பாதாளத்தில் கிடக்கும் பஞ்சமர்களின் முன்னேற்றத்திற் கென்று ஓர் ஆசிரியரும் பத்திரிகையும் தோன்றியுள்ளதெனில் உலகில் சிறந்த தர்மம் வேறெது உளது? இத்தகைய சிறந்த தர்மவான்கட்கன்றோ பாரத தேவி தன்னருள்முகத்தை காட்டுவாள். அன்பர்காள்! எழுந்திருங்கள். வேற்றுமை விருக்ஷத்தை வேரோடு வீழ்த்துங்கள் "உயர் வேதியராயினும் ஒன்றே அன்றி வேறுகுலத்தவராயினு - மொன்றே." என்று நமது பாரதியாரின் பொன்மொழியை மனதிற் பதித்து எனதருமைச் சகோதர சகோதரிகளெல்லோரும் இப்பெரும் தருமத்திலிரங்கி, சமத்துவம், சகோதர தத்துவப் பேற்றையடைய முன் வருவார்களாக.

கிற்க; பினாங்கு நகரத்தில் உள்ள ஆண்பெண் மக்கள் இரு பாலரும் சுயமரியாதைக் கொள்கைக்கேற்பவே பலகாலமாக வாழ்ந்துகொண்டு வந்த போதிலும், இதனை மென்மேலும் விருத்தி செய்ய இவ்வூர்செந்தமிழ் வாலிப சங்கத்தார்களும, முக்கியமாக, எம். ஏ. சுப்பையா அவர்களும் முன்னின்று உழைப்பார்களாயின், வெகு சீக்கிரத்தில் இங்குள்ள மூடப்பழக்க வழக்கங்களும், மற்றும் உள்ள தீமைகளும் ஒரு சிறிதெனினும் தொலைந்தபோம் என்பதுதின்ணம். சுயமரியாதை இயக்கம் நீடூழி வாழி

## கல்கத்தா வைதீகர் ஓட்டம்

சுமார் 300 மாதர்கள் தேசபந்துதாஸ் குமாரி கலியாணி தேவி, வாசந்தி தேவி முதலியவர்களின் தலைமையின் கீழ் கொடிகளுடன், கல்கத்தா டவுன்ஹாலில் சாரதா மசோதாவை எதிர்க்க காசிம் பஜார் மகாராஜா கூட்டிய கூட்டத்திற்குள் நுழைந்து அதைக் கைப்பற்றி, அநேகம் மாணவர்கள் மற்றையோரின் ஆதரவைக் கொண்டு சாரதா மசோதாவைப் பலமாக ஆதரித்து தீர்மானம் நிறைவேற்றினர். கூட்டத்திற்குக் கலியாணி தேவியே தலைமை வகித்தார். பண்டிட் ஷையாம் சுந்தர் சக்கிரவர்த்தி மசோதாவை ஆதரித்துப் பேசுபவர்களை, இது ஒரு அந்தரங்கக் கூட்டமென்று கூறி பேசவிடாது தடுக்க முயன்றார். ஆனால், அவரால் முடியவில்லை. அவர் அடங்கி ஒடுங்கி உட்கார்ந்தார். பின்னர் அக்கூட்டத்தைப் பார்க்க வந்திருந்த பண்டிட் ஜவஹர்லால் நேருவை இதைப்பற்றி தீர்ப்புக் கூறும்படி கேட்கப்பட்டது. அவர் இது பொதுக் கூட்டமே என்றும், இதில் இருகட்சியாருக்கும் பேச உரிமை உண்டென்றும் கூறினர். வைதீகர்கள் இவ்விதம் அவர் தீர்ப்புக்கூறியதை ஆட்சேபித்தனர். குழப்பமுண்டாயிற்று. சிலரை ஹாலிலிருந்து வெளியே தூக்கிக்கொண்டு போய் போடப்பட்டது. இவ்விதமாக வைதீகர்கள் தாங்கள் தோல்வியடையவே சாரதா மசோதாவை ஆதரிப்பவர்களை கூட்டம் நடத்தவிட்டுவிட்டு ஓட்டம்பிடித்தனர்.

## ஸ்ரீரெங்கம் பானகல் அரசர் வாசகசாலை திறப்பு விழா.

நாளது செப்டம்பர்௴ (30-9-29) தேதி திங்கட்கிழமை இந்நகர் தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தின் ஆதரவில் இவ்வாசகசாலை திறப்பு விழா நடைபெறும்.

அதுபோது "குடி அரசு" ஆசிரியர் உயர்திரு. ஈ. வெ. இராமசாமி அவர்கள் தலைமை வகிப்பார்கள்.

"திராவிடன்" ஆசிரியர் உயர்திரு. ஜே. எஸ். கண்ணப்பர் அவர்கள் வாசகசாலையைத் திறந்துவைக்க மகிழ்ச்சியுடன் ஒப்பியுள்ளார்கள். அன்பர்கள் பலர் "நமது இயக்கம்" "நெல்லூர் மகாநாடு" என்பதுபற்றி விரிவுரை நிகழ்த்துவார்கள்.

காரியதரிசி,

தா. காமாக்ஷியார்.

## நன்கொடை

திருநெல்வேலி, குளத்தூர் திரு. சங்கரசதாசிவம் அவர்கள் இம்மாதம் 9ந் தேதி நடைபெற்ற சுயமரியாதைத் திருமண நிகழ்ச்சியின் பொருட்டு, நமது பத்திரிகைக்கு ஒரு ரூபாய் நன்கொடை அளித்துள்ளார்.

மலேயநாடு ரெயில்வே தம்பின்:- லாம்புமன் திருவாளர் க. குழந்தைத் தம்பியும், பொவின்ஸ்மெனும் திருவாளர் ஏ. இராஜேந்திரம் அவர்களும் குடியரசுக்கு ரூபாய் 31-0-0 நன்கொடை அளித்திருக்கின்றனர். (இவர்கள் அன்பையும் ஊக்கத்தையும் நாம் மன மூவந்து பாராட்டுகின்றனம் -ப-ர்)

## செய்தித்திரள்

சிங்கப்பூர்:—இவ்வூர் அராவுத் தெருவிலும், பீச் ரோட்டிலும் உள்ள கைலி கடைகளில் உள்ள இளைஞர்கள் பலர் சுயமரியாதைப் பற்றுடையவராதல்பற்றி, அவர்களை சில குறும்பர்கள் எள்ளி நகையாடி, வேலையினின்றும் நீக்கப் பொல்லாச் சூழ்ச்சிகள் செய்யப்படுகின்றனர் என்று சுயமரியாதை ஊழியர், சிங்கப்பூர் அராபுத் தெரு வாசி திரு. ஆர். கோவிந்தசாமி அறிவிக்கின்றார்.

* * *

திருச்செங்கோடு :— 15-9-29 ந் தேதியன்று உண்மை நாடுவோர் சங்கத்து ஆதரவில், ஆநந்தாசிரமத்து மேல்மாடியில், திரு. டி. ஆர். பெருமாள் முதலியாரவர்கள் தலைமையில், பல அறிஞர்கள் அரிய சொற்பெருக்காற்றினர். வல்லபாய் படேலை கண்டித்து ஓர் தீர்மானமும், உண்ணாவிரதமிருந்து உடல்நீத்த திரு: சதீந்திரநாத் அவர்கட்கு ஓர் அநுதாபத் தீர்மானமும் நிறைவேற்றப் பெற்றன.

* * *

நாகர்கோயில்:—அகில திருவிதாங்கூர் முதலாவது சுயமரியாதை மகாநாடு அக்டோபரில் இங்கு கூடப் பெறும். திருவாளர் பி. சிதம்பரம் பிள்ளை அவர்கள் வரவேற்புக் கழகத் தலைவராய் நியமிக்கப்பெற்றுள்ளார். திருவாளர்கள்: பி. சுவாமிநாத பிள்ளை, எ. சங்கரன் பிள்ளை, டி. எம். சிதம்பரம், தாணுப் பிள்ளை ஆகியவர்கள் பொதுக் காரியதரிசிகளாய் அரிய வேலை செய்து வருகின்றனர் என்று விளம்பர அதிகாரி திரு: ஆர். இராமலிங்கம் அறிவிக்கின்றார்.

* * *

சென்னை:—இவ்வூரில் சுயமரியாதைச் சங்கம் ஒன்றை காசிமேட்டில் திறவத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக, இராயபுரம் காசிமேடு பெரியதம்பி தெரு, திரு: அ. பாலகிருஷ்ணன் வரைகின்றார்.

* * *

சிவகங்கை:—1929-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 22-ந் தேதியன்று மதுரை - இராமநாதபுரம் ஜில்லா பார்ப்பனரல்லாத இளைஞர் பிரசாரக் கமிட்டியார் பிற்பகல் இரண்டுமணிக்குக்கூடிப் பின்வருமாறு தீர்மானிக்கப் போவதாக அறிவிக்கின்றனர்:- (1) குடியரசு, திராவிடன் முதலிய பத்திரிகைகளை மக்களிடைப் பரப்புதல், (2) 1,000-ம் சனத்தொகைக்கு மேற்பட்ட ஊர்களில் சுயமரியாதைச் சங்கங்களை நிறுவுதல், (3) கிராமங்களிடை, நகரங்களிடை பரவிய பிரசாரம் புரிதல்; பிறவுமாம்.

* * *

தேன்மாப்பட்டு:—இவ்வூர் வாலிபர் சங்கம் வீரர் வாசக சாலையில் பின்வருமாறு ஓர் தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது:—திருப்பத்தூர் யூனியன் போர்டு மெம்பர் பெருந்தகைத் திருவாளர் எஸ். அப்பாவு பிள்ளை அவர்களை இவ்வூர் பெஞ்சு கோர்ட்டுக்கு கௌரவ மாஜிஸ்திரேட்டாக நியமிக்கப்பெற்றதை இச்சங்கம் பாராட்டுகின்றது.

* * *

இராமநாதபுரம்:—இவ்வூரில் 11-9-29ல் இராமநாதபுரம் ஆதிதிராவிட சங்கம் திரு: ஐ. செக் அவர்கள் தலைமையில் கூடி லேபர் ஆபீசர்கள் ஆதிதிராவிடர்கட்குத் தக்க மனைக்கட்டு வசதிகள் அளிக்காத குறை நிவர்த்திக்கப்பட வேண்டுமென்றும், ஆதிதிராவிட மக்களை தஞ்சை ஜில்லா போர்டார் ஆஸ்டல்களில் சேர்த்துக்கொண்டதற்கு இச்சங்கம் பாராட்டுகின்றதென்றும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன.

* * *

பெரம்பலூர்:— பெரம்பலூரைச் சார்ந்த புளியங்குளத்தில், ஆதிதிராவிட மக்கள் தண்ணீர் எடுக்காமல் தடைப்படுத்தப் பெறுகின்றதென்று கண்டித்து ஓர் தீர்மானம் இவ்வூரில் 12-9-29ல் நடைபெற்ற மகாநாட்டில் நிறைவேற்றப்பெற்றது.

* * *

பள்ளிபாளையம்:— பள்ளிபாளையம் சன்மார்க்க செங்குந்த பாலியர் சங்கம் முதலாவது ஆண்டு நிறைவு விழா புரட்டாசி 7 ந் தேதியன்று திரு: கே. வெங்கிட்டாசல முதலியாரவர்கள் தலைமையில் நடைபெறுமென்று அறிவிக்கப்படுகின்றது.

* * *

சிராவயல்:—இவ்வூர் காந்தி நிலைய தற்காலிகத் தலைவர் காரியதரிசிகளின் நடைமுறைப் பிழைச்செயல்களின் காரணமாகவும், ஆசிரியர் திரு: முருகனை அநாவசியமாய் விலக்கிவிட்ட காரணமாகவும், அது பற்றி நிலைய மாணவர்கள் பலர் விலகி விட்ட காரணமாகவும் நிலைய நிர்வாக சபையினர் திருவாளர்கள் ப. சீவாநந்தன், பெ. பூதலிங்கம், பெ. கணபதி ஆகியவர்களும், ; கூட்டத்தினர் ஆ. சுப்பையா அவர்களும் நிலயத்தை விட்டு விலகிக்கொண்டதாக முற்கூறப்பட்ட நிர்வாக சபையினர் அறிவிக்கின்றனர்.

* * *

மதுரை:—செப்டம்பர் 18ந் தேதியன்று இவ்வூர் பார்ப்பனரல்லாதார் இளைஞர் சங்கம் மாலை 6-30 மணிக்கு ஓர் பொதுக்கூட்டம் கூடி, அக்காலை சங்க அதிகாரிகளைத் தேர்ந்தனர். திரு: எல். வி. சாமி பி. ஏ., பார்—அட்—லா அவர்கள் தலைவராகவும், திரு: என். லட்சுமிதாத்தன் எம். ஏ. பி. எல், பொதுக் காரியதரிசியாகவும் நியமிக்கப் பெற்றனர்.

* * *

அம்மன்புரம்; இலங்கை:—நாவலப்பிட்டி தாலூக்கா, திருக்குறுங்குடி திருமணச்சம்பு சந்நிதி டாக்டர் திபதிகள் புரோகிதர்களை ஏவி பொருள் சம்பாதிக்க அனுப்பியுள்ளாரென்றும், அதற்கு மயங்கிவிடப்படாதென்றும் சுயமரியாதைத் தொண்டன் திரு: இராஜேந்திரம் தெரிவிக்கின்றார்.

* * *

ஆதனூர்:—1929 அக்டோபர் 1ந் தேதியன்று பெரம்பலூர் தாலூக்கா, ஆதனூரில் ஆதிதிராவிட மகாநாடு நடைபெறும். அதுபோது திரு: ஈ. வெ. இராமசாமியார் தலைமை வகிப்பார்கள். திரு. எம். சாமிநாதன் வரவேற்புக் கழகத்தலைவராய் நியமிக்கப்பெற்றுள்ளார்

* * *

மதுரை:—வெற்றிலைப்பேட்டை சின்னக்கடை முனிசிபல் பகல் பள்ளிக்கூடத்து ஆறாவது ஆண்டு பூர்த்தி விழா ஜில்லாக் கல்விப்பயிற்சி அதிகாரி திரு. எஸ் ஏ ஸ்டீல் அவர்கள் தலைமையில் 22-9-29ல் நடைபெற்றது.

* * *

முத்துராமலிங்கபுரம்:— இவ்வூர் பார்ப்பனத் தலைமை ஆசிரியர், திரு. அழகிரி என்னும் ஒரு ஆதிதிராவிட மாணவனை பூட்டி வைத்துக் கொடுமைப்படுத்தியதாக பார்ப்பனத் தலைமை ஆசிரியரின் பாதகச் செயல் என்னும் தலைப்போடு ஒரு நிருபர் வரைகின்றார்.

* * *

ஆயக்குடி:—13-9-29 பிற்பகல் பழனித் தாலுக்கா, ஆயக்குடி ஆதிதிராவிடர் தெருவில் ஒரு பெருங் கூட்டம் நடைபெற்றது. திரு: கருப்பண்ணன் சாம்பான் தலைமை வகித்தார்.

---

### சுயமரியாதைத்திருமணங்கள்

புதுச்சேரி:—திருவாளர் துரைசாமி நிவேல் அவர்கட்கும், செல்வி வீரனுப்பேன் அம்மாளுக்கும் புதுவை நகர மாளிகையில் மாலை 5 மணிக்கு அதிகச் செலவில்லாமல் மெய் விவாகம் நடைபெற்றது.

இருகுடி:— திரு: கதிரேசன் அவர்கள் தன் காதற்கிழத்தியாம் செல்வி மீனம்பாளை உற்றார் உறவினர் முன்னர் ஆவணி 25ம் நாளன்று மனைக்கிழத்தியாக ஏற்றுக் கொண்டனர் என்றும், அதுகாலை திரு. ஈ. வெ. இராமசாமியாருக்கு ஜே! என்ற முழக்கமும், திரு. கண்ணப்பருக்கு ஜே! என்ற முழக்கமுமே பன்னிசைமுழங்கினது என்றும் மணமகனார் அறிவிக்கின்றார்.

பாக்நய்:— திரு: முருகையனுக்கும், செல்வி உண்ணாமலை அம்மாளுக்கும் பார்ப்பனீய மொழிந்த திருமணம் 15-9-29ல் இனிது நடைபெற்றது. மணமக்கள் இதுநிகழ்ச்சிபற்றி குடியரசுக்கு ஒரு ரூபாய் நன்கொடையும் அளித்துள்ளனர்.

---

### மரணம்

வேலாக்கிபூர் அருணாசலனார் என்னும் பெரிய சுயமரியாதை மாபெருந் தொண்டர், இலங்கையில் உடல் நீத்தார். இவர் 'செந்தமிழ்ச் செல்வி' 'சுயமரியாதை' என்னும் பத்திரிகைகளை இயற்றி சுயமரியாதை இயக்கத்தைப் பெரிதும் போற்றி வந்தார் என்று அறிவிக்கப்படுகின்றது.

## மதிப்புரை

### திருக்குறள்

ஜாலாஜாபாத் இந்துமத பாடசாலை தலைமை ஆசிரியர் இயற்றிய காஞ்சிபுரம் தமிழ் நூல் பதிப்புக் கழகத்தாரால் வெளியிடப் பெற்ற பொழிப்புரையுடன், திருக்குறள் மூலம் ஒன்று வரப்பெற்றோம். இந்நூலில் நமது சுயமரியாதைக்கு இசைந்ததாய், திருக்குறளின் ஆசிரியர் உள்ளபடியே தம் மனதில் கருதியவற்றைத் தெள்ளத் தெளிய விளக்கிக் காண்பிப்பதாய், பரிமேலழகரின் பார்ப்பனீய உரையைப் பார்க்கிலும் உண்மையை உணர்த்தும் மேன்மைத்தாய், இளைஞரும், சிறிது பயின்றவரும் உணரும் பான்மைத்தாய் பொழிப்புரை வரையப் பெற்றுள்ளதை நாம் மனமுவந்து வரவேற்பதுடன், தமிழ் மக்கள் அனைவரும் இதனை வாங்கிப்படித்து உண்மையை அறியும்படி வேண்டுகின்றோம். ஏறக்குறைய 300 பக்கங்கள் கொண்ட இப்பெரிய நூலுக்கு, பதிப்புக் கழகத்தார் அமைத்துள்ள விலை அணா எட்டு என்பது மிகமிகச் சிறிய தொகை என்றே நாம் கருதுகின்றோம். ஆதலின் பொருள் வறுமை உள்ளவர்களும் எளிதில் வாங்கிப்படிக்கும் தரத்தது. பதிப்பாளர் திருவாளர் குப்புசாமி அவர்கள் இதனைப் பதிக்க எடுத்துக் கொண்ட அரிய முயற்சி பெரிதும் பாராட்டற்பாலது.

இவர் இந்நூலின் கண் வகுத்துள்ள அன்பையும், அதனால் இந்நூலை இத்தமிழ்நாடு முழுதும், எல்லா மக்களும், பண்டித பாமரருட்பட வாங்கிப் படித்துப்பேறடைவு படைக்கவேண்டும் என்று கருதி, அருள்பற்றி இவர் செய்த அரும் பெரும்முயற்சியையும்நாம்எண்ணுந்தோறும், இவரைப் பாராட்டாமல் இருப்பது எங்ஙனம்?

இந்நூல் மிக அழகாக, மிகமிகத் தெளிவாக அச்சிடப்பெற்று, வலிமையாகக் கட்டவும் பெற்றுள்ளது.

கிடைக்கு மிடம்:—

தமிழ் நூற் பதிப்புக்கழகம்,
காஞ்சிபுரம்.

குடியரசு பதிப்பகத்திலும் கிடைக்கும். விலை 0—8—0

---


ஒரே மணி நேரத்தில்
ஆச்சரிய குணமுண்டு.
மன்மத ஸ்தம்பன குளிகை.

இந்த குளிகையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப் போன்ற பலமும், முக தேஜஸும் அழகும், தைரியமும் உண்டாகும். நீற்றுப்போன இந்திரியத்தைக் கெட்டிப்படுத்தும். ஒரு குளிகையை அருந்தி மனைவாழ்க்கையில் புகுந்தால் சீஷித்த இன்பம் உண்டாகும்.

டப்பி 1 ரூபாய் 2—0—0

ஸ்ரீநிவாஸ் அண்டு கம்பனி
(3) தபால்பெட்டி 119, மதராஸ்.

# நமது மூபெருந்தலைவர்களின் உருவப்படத் திறப்புவிழா

## தியாகராயர் ஞாபகக் கட்டிடத்தில் பெருங் கூட்டம்

### கனம் சுப்பராயன், திரு. ஈ. வே. இராமசாமிப் திரு. பி. முனிசாமி நாயுடு இவர்கள் திறந்து வைத்தனர்

—————0—————

24-9-29-ந்தேதி மாலை 6 மணிக்கு தியாகராயர் ஞாபகக் கட்டிடத்தில் முப்பெருந் தலைவர்களாகிய திருவாளர்கள் தியாகராயர், பானகல் அரசர், நாயர்பெருமான் ஆகியவர்களின் உருவப்படங்களைத் திறந்துவைக்கும் விழா கொண்டாடப்பட்டது. சட்டசபை அங்கத்தினர்களும், முனிசிபல் சபை அங்கத்தினர்களும் இதர பிரபலஸ்தர்களும் ஏராளமாக வந்திருந்தனர். அவர்களில் முதன் மந்திரி கனம் டாக்டர் பி. சுப்பராயன், சுகாதார மந்திரி கனம் எஸ். முத்தையா முதலியார், சென்னை சட்ட கலாசாலை புரோபஸர் எம். ரத்தினசாமி, ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார், அமர்குமாரர் ராஜா முத்தையா செட்டியார், திரு. ஈ. வே. ராமசாமி, சர் ஏ. பி. பாத்ரோ, திவான்பகதூர் ஜே. வெங்கடநாராயணா, ராவ்பகதூர் சி. எஸ். ரத்தின சபாபதி முதலியார், சட்டசபைத்தலைவர் ராவ்பகதூர் ஸி. வி. எஸ். நரசிம்மராஜு, வெங்கடகிரி குமார ராஜா, பி. டி. ராஜன், திவான்பகதூர் பி. முனிசாமி நாயுடு, ராவ்பகதூர் டாக்டர் ஏ. லக்ஷ்மணசாமி முதலியார் எம். டி., ஜஸ்டிஸ் பண்டாலே, ஜஸ்டிஸ் வெங்கடசுப்பராவ், ராவ்பகதூர் பி. டி. குமாரசாமி செட்டியார், ராவ்சாஹிப் பி. ராமச்சந்திர ரெட்டி, திருவாளர்கள் ஜே. எஸ். கண்ணப்பர், கனகசபை நாடார், டபிள்யூ பி. ஏ. சௌந்திரபாண்டியம், எஸ். சிவராஜ், எஸ். பி. ஒய். ஆரியா, கே. வி. மேனன், குருசாமிநாயுடு, ஜார்ஜ் ஜோசப், பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம், பி. வி. நடராஜ முதலியார், சுந்தரராவ் நாயுடு, ஜே. என். ராமனுதன், காரைக்குடி ஆர் சின்னையா, மணி திருநாவுக்கரசு முதலியார், டாக்டர் பெருமாள், ஆர் வி. சொக்கலிங்கம், எஸ். வி. பாலகுருசிவம், எம். சுந்தரம் நாயுடு, என். தண்டபாணி வி. எஸ். ராஜகோபால் முதலியார், எஸ். வி. லிங்கம், அ. பொன்னம்பலனார் முதலிய சுமார் 1,000 கனவான்கள் விஜயம் செய்தார்கள்.

### ஸர் ஏ. பி. பாத்ரோ

திரு. பி. எஸ். குருசாமி நாயுடுவர்கள் கேட்டுக்கொண்டபடி ஸர். ஏ. பி. பாத்ரோ அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில் கூறியதன் சாரம் வருமாறு:—காலஞ்சென்ற மூன்று பெரும் தலைவர்களின் ஞாபகார்த்தமாக அவர்களின் உருவப்படங்களைத் திறந்து வைக்க இங்கு நாம் கூடியுள்ளோம். இவர்கள் மூவரும் தேசிய விஷயத்திலும், சமூக விஷயத்திலும் தென்னிந்தியாவிலேயே பெருந்தலைவர்களாக விருந்தனர். நம் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை ஆரம்பித்து தென்னிந்தியா முழுவதும் பரவ வைத்த வீரர்கள் அவர்களேயாவர். டாக்டர் டி. எம். நாயர் அவர்கள் இந்த பார்ப்பனரல்லாதாரியக்கத்தை முன்னுக்குக் கொண்டு வர பல எதிர்ப்புகளுக்குட்பட வேண்டியிருந்தது. அவர் நண்பர்களுடனும் எதிரிகளுடனும் தக்கபடி நடந்து இவ்வியக்கத்தை முன்னேற்றினர். சர். தியாகராயர் மக்களின் பொது நன்மைக்கெனவும், தேசப் பாதுகாப்புக்காகவும் அரசாங்கத்தோடும் போராடியவர். அவர் இவ்வியக்கத்துக்கென செய்துள்ள தியாகம் தொண்டுகளை உங்கட்கு நான் எடுத்துக் கூறவேண்டுவதில்லை. பானகலரசரின் ஒப்பற்ற ராஜதந்திரம் எவரும் அறியாததல்ல. ராஜிய எதிர்கால மாறுதலுக்கேற்றவாறு இவ்வியக்கத்தை நிர்ணயிப்பதில் அவரைப் போன்றவர்கள் தென்னிந்தியாவில் கிடையாதென்றே சொல்லுவேன். நான் திவான் பகதூர் பி. முனிசாமி நாயுடு அவர்களை பானகல் அரசரின் படத்தைத் திறந்து வைக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

### திவான் பகதூர் பி. முனிசாமி நாயுடு

தலைவரவர்களே! சகோதரர்களே! எனக்கு இத் தொண்டளித்தமை குறித்து சந்தோஷமுறுகின்றேன். பானகலரசரைப் பற்றி எனக்குத் தெரிந்ததை விட இங்குள்ள உங்கட்கு அதிகம் தெரியுமென்றே நினைக்கிறேன். அவரைப் போன்ற போற்றல் வாய்ந்த மற்றொரு தலைவரை நம்மியக்கத்துக்குக் கண்டு பிடிப்பது வெகு கஷ்டமானதாகும். சட்டசபையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்ட நெருக்கடியான சமயத்திலுங் கூட அவர் சிறிதும் அதைக் குறித்துக் கவலைப்படாமல் தைரியத்துடன் ஆக வேண்டுவன செய்தார். பலர் அவரை எவ்வளவு இழிவாகப் பேசிய போதிலும், அவர் கோபங் கொள்ளாது பொறுமையை அணிகலனாகப் பூண்டிருந்தார். செய்ய வியலாத காரியம் என நாங்கள் நினைப்பதை அவர் எவ்விதக் கஷ்டமுமின்றி செய்து முடிக்குந் திறன் வாய்ந்தவர். தாம் இத்திறப்பு விழா வாற்றத் தகுதியுடையவரல்லவாயினும் தலைவருரைப்படி செய்வதாகக் கூறி பானகல் அரசரின் படத்தைத் திறந்து வைத்தார்.

### திரு. ஈ. வே. ராமசாமி

சர். தியாகராயரை திரு. ஈ. வே. ராமசாமியாரே தியாகராயரின் உருவப்படத்தைத் திறந்து வைக்கத்தக்கவரென்று தலைவர் கேட்டுக்கொண்டபடி திரு. ஈ. வே. ராமசாமி அவர்கள் பேசுகையில் கூறியதாவது:—

தலைவரவர்களே! சகோதரர்களே! பெரியோர்களின் கட்டளையை ஏற்று கௌரவமடைய மனம் ஆசைப்படுகிறது. சர். தியாகராயருடன் நான் நட்புப் பாராட்டியிருக்கவில்லையாயினும் அவரையே தக்க பெரியாரெனக் கொண்டு அவர்பால் பக்தி கொண்டுள்ளேன். அவரை உண்மை தியாகி, வீரர் என்றே கூறுதல் பொருந்தும். உண்மையான தலைவர் என்று ஒருவரைக் குறிக்கவேண்டுமானால் அது செட்டியாரையே குறிக்கும் என்று நான் சொல்லுவேன். உண்மைத் தியாகி, தேசத்தொண்டர், தலைவர் என்று கூறுவதற்கு என்ன அடையாளமென்றால், சாபங்களையும், வைதல்களையும் இழிவுரைகளையும் பார்த்து பயப்படாமலும் தங்கள் கொள்கைகளை வாபஸ் வாங்காமலும் தைரியத்துடன் தங்கள் காரியங்களை நடத்துபவர்களே உண்மைத்தலைவர்கள். ஸர். தியாகராயரை இங்கு தமிழ் நாட்டு 'டயர்' என்று கூட எதிரிகளால் கூறப்பட்டது. அவரை தேசத்துரோகி என்றெல்லாம் கூறினர். அவரின் வீடு புகுந்தும் அடிக்கத் தலைப்பட்டனர். இவ்வளவு கஷ்டங்களையும் அவர் நேரில் அனுபவித்தனர். தேசத்துரோகி, டயர் என்ற இழிவுரைகட்கும், அடித்தல் போன்றவைகட்கும் ஸர். தியாகராயர் பயப்படாமல், பின் வாங்காமல் சிரித்துக் கொண்டே தம் காரியாதிகளை நடத்திக்கொண்டு போனார். இவ்விதத் தலைவர்கள் தோன்றுவது அரிது. ஆனால், இப்படியில்லாமல் சமயத்துக் கேற்றபடி நடக்கும் தலைவர்களும் உண்டு. அவர்கள் தோன்றுவது சாதாரண இயற்கை. அவர்கள் வசவு வந்த காலத்தில் ஒளிவதும், புகழுரை வந்த காலத்து தலையை யசைத்தசைத்து அநுபவிப்பதும் சாதாரண இயற்கையே. இவர்களின் பேர் இவர்கள் காலமாவதற்குள் காற்றோடு காற்றாகி விடும். ஆனால், மேற்கண்டபடி எதற்கும் பயப்படாமல் தாம் கொண்ட கருமத்தை முடிக்கும் செயலானது இறந்த பின்னர்கூட இத்தகைய திறப்புவிழா போன்றனுபவ கார்த்தக் காரியங்களைச் செய்யத் தூண்டுகிறது. மக்களின் முன்னேற்றத்திலும், நாட்டின் நலனிலுமே அவர் தம் காலத்தைக் கடத்தினர். எவரும் தமக்குவரும் பிரதியுபகாரங்களை ஒதுக்கித் தள்ளுவது வெகு கடினம்; ஆனால், அவர் அத்தகைய பிரதியுபகாரங்களைத் தள்ளி அதையும் தம் நண்பர்கட்கே அளித்துவந்தார். பிரதியுபகாரங்களை அலட்சியம் செய்வதும் தியாகபுத்தியேயாகும். தென்னாட்டு மக்களுக்கென எடுத்த முயற்சியில் அவரைப் போன்றவர்கள் எவருமேயில்லை. அத்தகைய பெரியாரின் உருவப் படத்தைத் திறந்துவைக்கக் காரணம் என்ன? கற்பூர தீபம் காட்டி பூஜை செய்வதற்காகவாகவோ, அவரின் நன்மைக்கென பிரார்த்தனைகள் செய்வதற்காகவாவோ அன்று. அதையும் மூடப்பழக்கவழக்கம் என்றே நான் கருதுகிறேன். அப்படியிருக்க இவ்விழா ஏன்? அவரை நினைப்பதற்கும், அவரைப் பார்த்து நாம் முன்னேறவும், அவரின் பெருந்தொண்டுகளை ஞாபகத்திற்குக் கொணர்ந்து அவரைப்பின்பற்றி அவர் பாக்கிவிட்ட வேலைகளைச் செய்வதற்குமேயாகும். எனவே, அத்தகைய பெருந்தியாகியின் படத்தைத் திறந்துவைக்கின்றேன் என்று கூறி சர். தியாகராயரின் உருவப்படத்தைத் திறந்து வைத்தார்.

### டாக்டர் பி. சுப்பராயன்

தலைவரின் வேண்டுகோளின்படி கல்வி இலாகா மந்திரி கனம் டாக்டர் பி. சுப்பராயன் அவர்கள் டாக்டர் நாயர் அவர்களின் உருவப்படத்தைத் திறந்துவைக்குமுகத்தான் பேசுகையில், இவ்விழாவாற்ற நான் ஒரு சாதாரணமானவன் என்றே கூறுவேன். டாக்டர் நாயர் மிண்டோ மார்லி சீர்திருத்தத்திற்கு முன்னரேயே தாழ்த்தப்பட்டாருக்கும், ஏழைமக்களுக்கும் தக்க தொண்டாற்றி வந்தார். ஏழைகளை முன்னேற்றுவதற்காக முதன்மையானதும் முக்கியமானதுமான அரிய வேலைகளை அவர் செய்துவந்தார். இம்மாகாணத்திலுள்ள ஒவ்வொருவரும் டாக்டர் நாயரே பிராமணரல்லாதார் இயக்க ஆரம்பத்துக்கு மூலகாரணராயிருந்தார் என்பதை யறிவர். அரசியல் அறிவு முதிர்ச்சியிலும் மக்கட்குத் தொண்டாற்றுவதிலும் இதைப்போன்று எந்த அரசியல் கட்சியும் கிடையாது. இதனின் வளர்ச்சிக்கு டாக்டர் நாயரின் பெருந்தன்மையும் பெரும் தொண்டுமே காரணமாகும்.

நகர முனிசிபல் சட்டத்தைப்பற்றி கவுன்சிலில் இருக்கும் பொழுதே அவர் நன்கு மதிந்திருந்தார். இச் சட்ட சம்பந்தமாக அரசாங்கத்திற்கு ஒத்தாசை செய்வதில் டாக்டர் நாயர் சிறந்தவரென சர். பி. ராஜகோபாலாசாரியார் சொல்லியுள்ளார்.

அத்தகைய பெரியாரின் உருவப் படத்தை உங்கள் முன்னிலையில் திறந்துவைக்கின்றேன் எனக்கூறி டாக்டர் நாயர் பெருமானின் உருவப்படத்தைத் திறந்துவைத்தார்.

பின்னர் படங்களைத் திறந்து வைத்தவர்கட்கும் தலைவர்க்கும் மாலையிடப்பட்டன.


தலைவர் முடிவுரை கூறுகையில் இந்த இயக்கத்தை ஒழுங்குபெற நடத்திக்கொண்டு போக காலஞ்சென்ற முப்பெரும் தலைவர்களின் ஆன்மாக்கள் உதவிசெய்யவேண்டுமென்றும், இவ்வியக்கத்துக்கென மேற்கண்ட உருவப்படங்களைக் கொடுத்துதவிய

(தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க)

## அறிக்கை

பட்டுக்கோட்டையில் சின்னக் கடைத்தெருவில் உள்ள திரு: என். மருதமுத்து அவர்கள் கடையில் குடியரசு, திராவிடன் பத்திரிகைகள் விற்கப்படும்.

மானேஜர்.



"அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே"

# குடி அரசு

சென்னை 1929 செப்டம்பர் 29உ

## சர்க்காருக்கு ஜே!

——0——

### சீர்திருத்தம் வாழ்க!

### பார்ப்பனீயம் வீழ்க!

இந்திய நாட்டில் சற்றேறக் குறைய ஐம்பது வருடகாலமாக சீர்திருத்தக்காரர்கள் உள்ளத்தில் கொதித்துக் கொண்டிருந்ததும், அந்நிய நாட்டு மக்களால் இந்திய சமூகத்தையே ஏளனம் செய்துகொண்டிருக்க இடம் தந்து கொண்டிருந்ததுமான 'குழந்தை மணம்' என்னும் நகரும் பொம்மைக் கலியாணக் கொடுமையானது கடைசியாக இந்தியாவை "ஏகபோகமாய் ஆட்சி புரியும் அந்நிய அரசாங்க"மாகிய பிரிட்டிஷ் அரசாங்க உதவியாலேயே அதுவும் சட்டத்தின்மூலம் நிறுத்தப்பட்டு விட்டதற்கு பிரிட்டிஷ் சர்க்காருக்கு சந்தோஷத்தோடு மனப்பூர்வமாய் 'ஜே!' சொல்லித் தீரவேண்டிய நிலைமையில் இருக்கின்றோம். எனவே, இந்திய சர்க்கார் நீடூழி வாழ விரும்புகின்றோம். சர்க்காரின் ஒத்துழைப்பும் அவர்களது மனப்பூர்வமான ஆதரவும் உதவியும் இல்லாதிருந்திருக்குமானால் சாரதா மசோதாவானது கனவிற்குள் சட்டப்பாய் நிறைவேறி இருக்காது என்று உறுதியாய்ச் சொல்லுவோம். ஆனால் சிலர் தேசியம் சுயராச்சியம் என்பவைகளின் பேரால் சர்க்காருடன் ஒத்துழைக்கக்கூடாது என்றும்; சர்க்கார் தயவை எதிர்பார்க்கக் கூடாது என்றும்; சீர்திருத்தங்களுக்கு சட்டம்செய்யக்கூடாது என்றும் வெகு சுலபமாய்ப்பேசி மக்களை ஏமாற்றி வீரர்கள் ஆகி விடலாம். ஆனால் இந்த சாரதா மசோதா விஷயத்தில் சர்க்கார் தயவு, சர்க்கார் ஒத்துழைப்பு, சர்க்காரால் கையாளப்பட வேண்டிய சட்டம் ஆகியவைகள் இல்லாமல் ஏதாவது ஒரு சிறிய விஷயத்தையாவது அமுலுக்குக் கொண்டுவரச் செய்ய முடியுமா என்றுகேட்கின்றோம்.

சுயராச்சியம் பெற்ற பிறகு நமக்கு வேண்டிய சீர்திருத்தங்களையெல்லாம் செய்து கொள்ளலாமென்றும், இப்போது இந்த சர்க்காருடன் ஒத்துழைத்து சீர்திருத்தம் பெறுவது அவமானமென்றும் சொல்லும் காங்கிரஸ் தலைவர்கள் இந்த மசோதா விஷயத்தில் எப்படி நடந்து கொண்டார்களென்பதை யோசித்துப் பார்த்தால் இந்த சர்க்கார் இருக்கும்போது சீர்திருத்தமடைய முடியுமா? அல்லது இது "ஒழிந்த" பிறகு அடையமுடியுமா? என்பது விளங்காமற் போகாது. உதாரணமாக இந்தக் குழந்தை மணத் தடுப்பு விஷயமானது சுமார் 20 வருடத்திற்கு முன்பிருந்து சட்டசபைகளில் பிரஸ்தாபித்து வந்திருப்பது யாவருக்கும் தெரியும். ஆனால், ஒவ்வொரு சமயத்திலும் வைதிகர்கள் என்பவர்களும், இந்து மதத்தைப் பின்பற்றுகின்றவர்கள் என்பவர்களும், தேசியவாதிகள் என்பவர்களும் ஆட்சேபனை செய்து கொண்டேதான் வந்திருக்கின்றார்கள். இந்தசமயத்திலும் தேசியவாதிகளே பெரும் முட்டுக்கட்டையாய் நின்று எவ்வளவோ சூட்சிகளுடன் ஆட்சேபித்துப் பார்த்திருக்கின்றார்கள்.

"மூத்த தேசாபிமானிகளும் பிரபலதேசியத் தலைவர்களு"மாகிய திருவாளர்கள் மாளவியா, கேல்கார், மூஞ்சி, எம். கே. ஆச்சாரியார், கே. வி. ரங்கசாமி ஐயங்கார், எ. ரெங்கசாமி ஐயங்கார், மோதிலால் நேரு ஆகியவர்கள் எல்லோருமே இந்த இருபதாவது நூற்றாண்டில் இடையூறாயிருந்திருக்கின்றார்கள் என்றால், இனி எந்த தேசியவாதியின் ஆதரவை எந்தக் காலத்திலாவது எதிர் பார்க்கக்கூடுமா என்பதுதான் கேள்வி. இதில் மற்றொரு விஷயமென்னவென்றால், மேல் கூறிய எல்லா தேசியவாதிகளும் மசோதாவின் தத்துவத்தை ஒப்புக்கொள்வதாகச் சொல்லிக்கொண்டே ஆட்சேபித்திருக்கின்றார்களென்றால் இனி ஒப்புக்கொள்ள முடியாத விஷயத்தில் இவர்கள் ஆட்சேபனை எப்படியிருக்கும் என்பதை யோசித்துப் பார்த்தால் விளங்காமல் போகாது.

திரு. மாளவியா அவர்கள் தனது ஆட்சேபனைக்கு சொல்லப்பட்ட காரணமென்னவென்றால் "14 வயதுக்கு மேற்பட்டு கலியாணம் செய்வது நல்லதுதான். ஆனாலும், ராஜியை முன்னிட்டு 12 வயதாக இருக்க வேண்டும்" என்றார். திரு: மூஞ்சே சொன்ன ஆட்சேபனையைக் கவனிப்போம். இவர் பார்ப்பனர்- பார்ப்பன மாணவர்களை மாமிசம் சாப்பிட வேண்டுமென்று சொல்பவர்— வைத்தியர்— இத்துடன் வைத்திய சாஸ்திரப்படியும், உடற்கூறு சாஸ்திரப்படியும் பெண்களுக்கு 18வயதுக்கு முன் விவாகம் செய்வது கெடுதி என்கின்ற அபிப்பிராயம்கொண்டவர். அப்படி இருந்தும் இந்த மசோதா விஷயத்தில் 12 வயதுக்கு மேல் கலியாண வயது இருக்கக்கூடாது என்று வாதம் செய்தவர். திரு. மோதிலால் நேரு எந்த மாம்சமும் சாப்பிடுவார், எந்தப்பானமும் செய்வார், 20 வயதுக்கு முன்னால் தங்கள் குழந்தைகளுக்கு கல்யாணம் செய்வதில்லை என்றும் சொன்னார். அப்படி இருந்தும் அந்த மசோதாவின் ஜீவநாடியை பிடுங்கிவிடக்கருதி சூட்சி செய்தவர். அதாவது அவசியமிருக்கின்றவர்கள் 14 வயதுக்குள்ளாகவும் கல்யாணம் செய்ய அனுமதிக்க வேண்டும் என்னும் ஒரு திருத்தம் கொண்டுவந்து மசோதாவை அடியோடுவிழ்த்துவிட பார்த்தார். திரு. கேல்கர் திரு. திலகரின் ஸ்தானத்துக்கு வந்தவர். அவரோ மசோதாவின் தத்துவத்தை ஒப்புக்கொள்ளுவதாய்ச் சொல்லி, ஆனால் வைதீகர்கள் இஷ்டத்திற்கு விரோதமாய் சட்டம் செய்யக்கூடாதுஎன்றனர். இனி சென்னைத் "தலைவர்களை"ப்பற்றி நாம் சொல்லவேண்டிய அவசியமிருக்காதென்றே நினைக்கின்றோம். எனினும் திருவாளர்கள் சேஷய்யங்கார் கே. வி. ரங்கசாமி அய்யங்கார் எம். கே. ஆச்சாரியார், எ. ரங்கசாமி ஐயங்கார் போன்ற "பாம்பரை தேசியவாதி"களின்யோக்கியதை இம்மசோதா விஷயத்தில் எப்படி நடந்துகொண்டார்கள் என்பதைக் கூர்மையாய் கவனித்துவந்தவர்களுக்கு விளங்காமல் போகாது. எனவே, நமது நாட்டிற்கென்றோ சமூகத்திற்கென்றோ எவ்வித திருத்தம் கொண்டுவந்தாலும் இந்தக் கூட்டத்தவர்களே அதாவது பார்ப்பனர்களே ஒருபுறம் தேசியத்தின் பேராலும், மற்றொருபுறம் மதத்தின்பேராலும், மற்றொருபுரம் சாஸ்திரத்தின் பேராலும், மற்றொருபுரம் மனச்சாட்சியின் பேராலும் தொல்லை விளைவித்துவருவதை வெகுகாலமாக பார்த்து வருகின்றோம். சாதாரணமாய் விவரமறியாக் குழந்தைகளை கடவுள் பேரால் பொட்டுக்கட்டி விபசாரிகளாக்குவதையும், மக்களை விபசாரத் தொழிலால் ஜீவனம் செய்யக் கூடாதென்னும் கருதி கொண்டு வரப்பட்ட சட்டங்கள் கூட மதத்தின் பேராலும், சாஸ்திரங்களின் பேராலும், சாமிகளின் பேராலும் ஆட்சேபிக்கப்படுமானால், அதுவும் பூரண சுயேச்சை விரும்பும் சங்கக் காரியதரிசியும் கற்ற பண்டிதர்களால் தெரிந்தெடுக்கப்பட்ட வருமான திரு. சத்தியமூர்த்திப் பார்ப்பனராலேயே எதிர்க்கப்படுமானால், இனி சாதாரண பார்ப்பனர்களாலும் அவர்கள் கலந்த இயக்கங்களாலும் நாம் எந்தவிதமான சீர்திருத்தத்தை சுயராஜ்யத்தில்-ராம ராச்சியத்தில் எதிர்பார்க்கக்கூடுமென்பது நமக்கு விளங்கவில்லை. பொதுவாக இந்தப் பார்ப்பனர்கள் சர்க்காருக்கு விரோதமாகவும் சர்க்காருடன் ஒத்துழைக்கக் கூடாத, சர்க்காரை ஒழிக்க வேண்டுமென்று சொல்லுவதின் இரகசியம் எல்லாம், எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்த சர்க்கார் பார்ப்பனரல்லாத மக்களுக்கு வசமாகக் கூடாதென்றும், பார்ப்பனரல்லாத மக்களுக்கு அனுகூலமாக ஏதாவது நன்மையோ சீர்திருத்தமோ செய்ய இடம் கொடுத்துவிடக் கூடாது என்பதுமான கெட்ட எண்ணமே தவிர மற்றபடி சர்க்காரோடு ஒத்துழைக்கக் கூடாது என்பதில் ஏதாவது யோக்கியப் பொறுப்போ, தேசியமோ, நாணயமோ இருக்கின்றதா? என்று கேட்கின்றோம்.

ஒத்துழையாமை என்பதற்கும், சர்க்கார் தயவு என்பதற்கும் ஏதாவது ஒரு குறிப்பிட்டதும் நிலையானதுமான கொள்கைகளை ஏற்படுத்திக் கொண்டு பிறகு அதை யோக்கிய

மாய் அனுஷ்டானத்துக்குக் கொண்டு வருவதானால், அதைப்பற்றி யோசிக்க வேண்டியது அவசியமாகும். அப்படிக்கில்லாமல் தங்களுக்கு இஷ்டமானதும் தேவையானதுமான காரியமெல்லாம் ஒத்துழையாமையில் சேர்ந்ததென்றும் தேசியத்தில் சேர்ந்ததென்றும் சொல்லுவதும் நமது மக்களுக்கு இஷ்டமானதும் தேவையானதுமான காரியங்கள் எல்லாம் சர்க்கார் தயவானதும் தேசத்துரோகமானதுமான காரியங்கள் என்று சொல்லப்படுவதுமானால் அம்மாதிரி தேசியத்தை நாம் எப்படி ஒப்புக்கொள்ளமுடியும்? தேசியத்திற்கும் ஒத்துழையாமைக்கும் சர்க்கார் தயவுக்கும் இந்த உலகத்தில் பார்ப்பனர்கள் மாத்திரம்தான் பாஷ்ய கர்த்தாக்களா, மற்றொருவருக்கும் இவற்றில் உரிமை இல்லையா என்றுதான் கேட்கின்றோம்.

முன்காலத்தில் அதாவது 'இந்து' (மூட)ராஜாக்கள் அரசாங்கத்திலும் இப்படியே செய்துவிட்டு இப்பொழுது வெள்ளைக்கார (அறிவாளிகள்) அரசாங்கத்திலும் இப்படியேசெய்து நமது சமூகத்தை மிதித்துவைத்துக் கொண்டிருக்க கருதுவதை இனி அரை நிமிஷமும் நம்மால் சகித்திருக்க முடியாது என்பதை வெளிப்படையாயும் உறுதியாயும் சொல்லித் தீரவேண்டி இருக்கின்றது. அதற்காகவே சர்க்காருக்கு ஜே, என்றும், பார்ப்பனீயம் வீழ்க! என்றும் சொல்லுகின்றோம்.

எந்தவிதமான அரசியல் கஷ்டங்களை பொறுத்துக் கொண்டாலும் நமது நாட்டில் பார்ப்பனீயம் அடியோடு ஒழியுமட்டும் இந்த பிரிட்டிஷ் சர்க்காருக்கு, "அன்னிய" சர்க்காருக்கு, பகுத்தறிவு வளர்ச்சியும், ஆராய்ச்சி அறிவு வளர்ச்சியும் பெற்ற "நாஸ்திக" சர்க்காருக்கு 'ஜே' சொல்லித் திருவோம். இதனால் நாம் தேசத்துரோகியானாலும் சரி: சிறையிலும் அடைபட்டாலும் சரி; கழுவில் ஏற்றப்பட்டாலும் சரி; அவற்றிற்கு சிறிதும் கலங்கமாட்டோம் என்பதையும் தைரியமாய்ச் சொல்லுறோம். அஃதோடு இந்த சர்க்கார் எந்த நிலைமையில் எந்தக் காலத்தில் எப்படியானால் எந்த முறையில் எதிர்ப்பது என்பதுவும் நமக்கே தெரியும் என்று உறுதி கூறுவோம். நிற்க;

சாரதா மசோதாவானது இப்போது இந்திய சட்டசபையில் நிறைவேறிவிட்டதாலேயே இந்தியாவுக்கு வேண்டிய சீர்திருத்தங்கள் எல்லாம் முடிந்துவிட்டது என்பதாகக் கருதி நாம் மகிழ்ச்சிப் பெருக்கடைவதாக யாரும் நினைத்துவிடக் கூடாது என்றும் கேட்டுக் கொள்ளுகிறோம். மற்றென்னவென்றால் எந்த விதமான சீர்திருத்தத்திற்கும் வழக்கமாய் முட்டுக்கட்டையாய் உபயோகித்துவந்த மதம், சாஸ்திரம், கடவுள் கோபம் என்கின்ற புரட்டுகளும் பூச்சாண்டிகளும் இம்மசோதா விஷயத்தில் குப்பைத்தொட்டிக்குப்போக நேர்ந்ததையே எண்ணி எண்ணி மகிழ்ச்சிப் பெருக்கடைகின்றோம். ஏனெனில் இதன் மூலம் இந்தப் பார்ப்பனர்கள் மேற்கண்ட மதப் பூச்சாண்டிக்கும் சாஸ்திரப்புரட்டுக்கும் எவ்வளவு மரியாதை வைத்திருக்கின்றார்கள் என்பதையும், இவைகளைக் காப்பாற்ற என்ன தியாகமோ வீரமோ காட்டப்போகின்றார்கள் என்பதையும் பார்க்கப் போகின்றோம்.

தவிர, சில பார்ப்பனர்கள் இந்த சட்டம் நிறைவேறிவிட்டால் சத்தியாக்கிரகம் செய்து சட்டத்தை மீறி தண்டனை அடைந்து இந்த சட்டத்தை ஒழிக்கப்போகின்றார்களாம். இந்த செய்தியைக்கேட்ட மாத்திரத்தில், இந்த சட்டம் நிறைவேறிய சேதியைக்கேட்ட மாத்திரத்தில் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்தோமோ அதைவிட எண்மடங்கு அதிகமான மகிழ்ச்சியை அடைந்தோம்.

ஏனென்றால் அவர்களது சத்தியாக்கிரகத்தையும் தியாகத்தையும் பார்த்து அவை வெற்றிபெற்றால் நம்முடைய தேவைகளுக்காக நாமும் அதுபோலவே நடந்து வெற்றிபெறலாம் என்றும், அந்தப்படி அவர்கள் வெற்றி பெறாவிட்டால் இப்போதைப்போலவே சர்க்காருக்கு 'ஜே' போட்டு அதன் மூலம் வெற்றிபெறலாம் என்றும் கருதியே மகிழ்ச்சியடைகின்றோம்.

நிற்க; இனி சம்மத வயதைப்பற்றிய விஷயம் ஒன்றுண்டு. ஆனால் நமக்கு அதைப்பற்றி அவ்வளவு கவலையில்லை; அது வயித்தியர்களுடைய விஷயமும் அவர்களது கடமையுமாகும். ஆனால் குழந்தைமணமே சுயமரியாதையை பொறுத்ததாகும் தவிர, பார்ப்பனர்களும் சம்மத வயதைப்பற்றி தங்களுக்கு அதிக கவலை இல்லையென்று சொல்லிவிட்டார்களாதலால் அது எக்கதியையேண்டுமானாலும் அடையட்டுமென்றே சொல்லுவோம். அன்றியும் அது ஒரு இயற்கை உணர்ச்சியாகும். அதை எப்படி நடத்துவதென்பது மனோதத்துவ ஆராய்ச்சியை சேர்ந்த விஷயமுமாகும். அதை வைத்தியர்களும் அரசாங்கமும் கவனித்து ஒழுக்கத்திற்கும் சுயமரியாதைக்கும் உண்மையான சுதந்திரத்திற்கும் மாறுபாடில்லாத வகையில் எப்படிச் செய்து கொண்டாலும் நமக்கு ஆட்சேபனை இல்லை.

இனி அடுத்தாற்போல் சட்டம் செய்ய வேண்டிய விஷயம் பிறவியில் ஆண் பெண் ஆகிய பல வித்தியாசம், உயர்வு தாழ்வு ஆகிய ஜாதி வித்தியாசங்களையும் ஒழிப்பதற்கு வேண்டிய சட்டமேற்படுத்த வேண்டியதேயாகும். இதை எல்லாவற்றிற்கும் முன்பாகவே செய்திருக்க வேண்டியதானாலும், இதற்கும்மதமும் சாஸ்திரமும, கடவுளுமே முட்டுக்கட்டையாய் இருந்துவருவதால் ஏதாவது ஒருவகையில் மேற்கண்ட முட்டுக்கட்டை ஒழிந்தால் மற்றவைகளுக்கும் அவைகளை ஒழிப்பது சுலபமாகிவிடுமாதலால், அதையும் ஒருவிதத்தில் நன்மையாகவே கொள்ளலாம்.

## சுயமரியாதை

ராமனாதபுரம் ஜில்லா அருப்புக்கோட்டையில் நாடார் சகோதரர்களின் நிர்வாகத்திலும் அவர்களது பொதுப்பணத்திலும், வெகு காலமாக ஒரு உயர்தர பாடசாலை நடந்து வரும் விபரம் அனேகருக்குத் தெரிந்திருக்கலாம். ஆனால் அப்பள்ளியில் இதுவரை ஆதிதிராவிடப் பிள்ளைகளைச் சேர்ப்பதில்லை என்ற நிர்ப்பந்தம் இருந்து வந்ததுடன் அந்தப்படிக்கே சேர்க்காமலும் இருந்து வந்தார்கள். சில மாதங்களுக்கு முன்பு திரு சௌந்திரபாண்டியன் அவர்களுக்கு ஜில்லா போர்ட் தலைவர் பதவி கிடைத்ததற்காக அருப்புக்கோட்டை மகாஜனங்களும் மற்றும் பல தனித் தனி வகுப்பாரும் அவரை பாராட்டுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததில் அருப்புக்கோட்டை நாடார் சமூகத்தாரும் ஒரு தனியான விருந்தும் பாராட்டு கூட்டமும் செய்து உபசாரப் பத்திரங்கள் வாசித்து கொடுத்தார்கள். அவ் வுபசாரப் பத்திரங்களுக்கு திரு. சௌந்திரபாண்டியன் பதிலளிக்கையில் மனித சமூகத்தில் சில வகுப்பாரை தாழ்த்தி கொடுமைப் படுத்தி வரப்படுவதை அடியோடு ஒழிக்க வேண்டியதே இது சமயம் மனிதனின் முதல் கடமை என்றும் அந்த வேலைக்கே பெரிதும் தனது எல்லாப் பதவிகளையும் உபயோகிக்கப் போவதாயும், ஆனால் அதில் தனக்கு சில கஷ்டங்கள் நாடார் சமூகத்தாராலேயே இருப்பதாகவும் சொல்லி, உதாரணமாக அருப்புக்கோட்டையில் உள்ள நாடார் ஹைஸ்கூலில் ஆதிதிராவிடப் பிள்ளைகளை சேர்த்துக்கொள்ளுவதில்லை என்கின்ற நிர்ப்பந்தமிருப்பதேதான் முக்கியமான தடையென்றும் கூறி, அதனால் தான் மிகுதியும் வெட்கமடைவதாயும் தன்னுடைய சமூகத்திலேயே இவ்வித கொடுமையிருந்தால் தன்னுடைய உத்தியோக ஒதாவில் மற்ற சமூகத்தாருக்குள் இருக்கும் கொடுமைகளை நீக்கும்படி சொல்ல தனக்கு எப்படி தைரியமுண்டாகுமென்றும், ஆகவே எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரத்தில் இவ்வருப்புக்கோட்டை பள்ளிக்கூடத்தில் இக்கொடுமை நீக்கப்படுகின்றதோ அவ்வளவுக்கு அவ்வளவு தனது வேலை சுலபமாகுமென்றும் அவசியம் செய்யவேண்டும் என்று தனது சமூகத்தலைவரை அடிபணிந்து கேட்டுக்கொள்ளுவதாகவும் சொன்னார். அதற்கிசைய அன்று அப்பள்ளிக்கூட நிர்வாகிகள் அவ்வித நிர்ப்பந்தத்தை நீக்கிவிட்டு ஆதிதிராவிட மக்களை அந்தப் பள்ளிக்கூடத்தில் சேர்த்துக்கொண்டார்கள். இது நமது நாட்டில் உள்ள தீண்டாமையும் உயர்வுதாழ்வும் ஒழிய ஒரு பெரிய அறிகுறியாகும் என்றே சொல்ல வேண்டும். இவ்வித அரிய காரியத்தைச் செய்த அருப்புக்கோட்டை நாடார் தலைவர்களை மனமாரப் பாராட்டுகிறோம்.

---

பெண்களுக்கு வாழ்க்கையிலும் சொத்துக்களை அனுபவத்திலும் சம உரிமை வழங்கப்பட வேண்டியது அறிவும் மனிதத்தன்மையுமுள்ள மக்களுக்கு மிகவும் யோக்கியமான காரியமாகும். ஆகையால் அதை உடனே கவனிக்க வேண்டுமாயும், தீண்டாமையைப்பற்றி கவனிக்க வேண்டுமாயும், இந்திய சட்டசபை அங்கத்தினர்களைக் கேட்டுக் கொள்வதுடன் சர்க்காரையும் சாரதா மசோதாவுக்கு அனுகூலம் செய்தது போலவே அனுகூலம் செய்து நல்ல பெயர் வாங்க வேண்டுமாகவும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

—0—

## குறிப்பு

சென்னை, தியாகராய மண்டப காலிபீடத்தில் 26-9-29ந் தேதி மாலை நெல்லூர் மகா நாட்டைப் பற்றி பேச ஒரு கூட்டம் ஏற்பாடு செய்திருந்தபடி திரு: சக்கரைச் செட்டியார் தலைமையில் கூடிற்று.

பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்ளுவதா என்னும் விஷயமும் தலைவர் தேர்தல் விஷயமும் பற்றி திருவாளர்கள் கண்ணப்பர், ஈ. வே. ராமசாமி, ஏ, ராமசாமி முதலியார், கார்குடி ஆர் சின்னையா முதலியவர்கள் பேசினார்கள். தென் இந்திய நல உரிமைச் சங்கத்தில் பார்ப்பனர்களை சேர்க்கக் கூடாதென்றும் தலைவர் தேர்ந்தெடுப்பதைவிட இயக்கக் கொள்கைகள் நடத்தி வைக்க முக்கியமானவர்களைக் கொண்டு ஒரு காரியக் கமிட்டி நியமிப்பது நலம் என்றும் பேசினார்கள்.

*   *   *

மைசூர் திவான் சாஹேப் சென்னைக்கு விஜயமானதும், அவர்கட்கு பட்டினமெங்கும் வரவேற்புகளும், விருந்துகளும் நிகழ்ந்தன. இவர்கட்கு 26-ந்தேதி வியாழனன்று மாலை 5 மணிக்கு சென்னை முனிசிபல் கார்ப்பொரேஷன் சபையார் வரவேற்புப் பத்திரம் வாசித்துக்கொடுத்தனர். பின்னர் கார்ப்பொரேஷன் தலைவர் ஏ. இராமசாமி முதலியார் அவர்களால் 26-ந்தேதி வியாழனன்று மாலை 5-45-மணிக்கு ஒரு விருந்தும் விக்டோரியா பப்ளிக் ஹாலில் நடைபெற்றது.

மௌண்டுரோட்டு பசோட்டா ஓட்டலில் சென்னை பிரபல வியாபாரியும் கோடீஸ்வரருமான ஜனாப் ஜமால் மொஹிதீன் அவர்களால் 27ந் தேதியன்று வெள்ளிக்கிழமை மாலை ஒரு பிரபலமான விருந்தளிக்கப்பட்டது. சென்னை காஸ்மாபாலிட்டன் கிளப்பில் முஸ்லிம் வரவேற்புக் கமிட்டியினரால் மற்றுமொரு சிறந்த விருந்தும் 28ந் தேதியன்று சனிக்கிழமை மாலை அளிக்கப்பட்டது.

## ராஜன் ராமசாமி சுற்றுப் பிரயாணம்

திருவாளர்கள் ஈ. வெ. ராமசாமி, பி.டி.ராஜன் ஆகியவர்கள் 19-9-29 ந் தேதி மாலை 5-மணிக்கு திருநெல்வேலி ஜங்ஷனுக்கு போட்மெயில் வந்து சேர்ந்ததும், திருவாளர்கள் டி. கே. சிதம்பரநாத முதலியார் எம். எல். சி., டாக்டர் செட்டோ, ஏ. ராமனுதன், குற்றாலலிங்கம் முதலாகிய பல கனவான்கள் ரயிலில் வரவேற்று சிற்றுண்டி அளித்து திரு. குமாரசாமி ரெட்டியார் அவர்கள் வீட்டிற்கு அழைத்துச் செல்லப் பட்டார்கள். பிறகு அங்கு பல கனவான்கள் முன்னிலையில் வரப் போகும் மாகாண மகாநாட்டிற்கு பார்ப்பனர்களை இயக்கத்தில் சேர்த்துக் கொள்ளும் விஷயத்தைப் பற்றி பேசப்பட்டதில், பெரும் பான்மையோருக்கு சேர்த்துக் கொள்ள இஷ்டமில்லை என்பதான முடிவுக்கேவரப்பட்டது. நாகர்கோயிலிலிருந்து பல கனவான்கள் வந்திருந்தார்கள். பிறகு திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார் வீட்டில் ஒரு பெரிய விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததில் அவ்விருந்துக்கு திருவாளர்கள் குமாரசாமிரெட்டியார், டாக்டர் சுப்பிரமணிய பிள்ளை, வக்கீல் ஆவுடயப்ப பிள்ளை, நாகர் கோயில் பி. சிதம்பரம் பிள்ளை, டாக்டர் செட்டோ, மற்றும் சுமார் 20, 30 கனவான்கள் வரை வந்திருந்தார்கள். விருந்து முடிந்தவுடன் நேரே ரயிலுக்கு வந்து மறுநாள் காலையில் திருச்சிக்குப்புறப்பட்டுவிட்டார்கள். வழியில் விருதுநகர், சாத்தூர், திருமங்கலம் முதலிய ஸ்டேஷன்களுக்கு ஏராளமான ஜனங்கள் வந்து மாலை இட்டு தங்கள் அபிப்பிராயங்களைத்தெரிவித்தார்கள். 20-ந் தேதி மாலை 5-மணிக்கு திருவனந்தபுரம் எக்ஸ்பிரசில் திருவாளர்கள் ராஜன், ராமசாமி, பொன்னம்பலம முதலியவர்கள் திருச்சி ஜங்ஷனுக்கு வந்தவுடன் திருவாளர்கள் டி. எம். நாராயணசாமி பிள்ளை எம். எல் சி., கி. ஆ. பெ. விஸ்வநாதம், வேதாசலம், வக்கீல்தம்புசாமிபிள்ளை, அருணாசலம் செட்டியார், வேணுகோபால் நாயுடு, டி. கே. வி. நாயுடு, ஆகிய சுமார் நூறு பேர்கள் வரை ரயிலில் வரவேற்று மாலையிட்டு தென்னூர் திரு. வேதாசலம் அவர்கள் வீட்டுக்கு அழைத்துச்சொல்லப் பட்டார்கள். அங்கும் மற்றும் அநேக பிரமுகர்கள்வந்திருந்து அவர்களுடன் சுமார் 2-மணி நேரம் மகாநாட்டுக்கு வரும் பிரச்சினை விஷயமாய் பேசிக் கடைசியாக பார்ப்பனர்களை சேர்த்துக் கொள்ளக்கூடாது என்கின்ற முடிவுக்கே வரப்பட்டது. பிறகு திரு. வேதாசலம் அவர்களால் இரவு ஒருபெரிய விருந்து நடந்தது. விருந்து நடந்தவுடன் அந்த இரவே ஈரோடு மார்க்கம் தலைவர்கள் சேலத்திற்குப் புறப்பட்டு விட்டார்கள். மறுநாள் காலை எட்டு மணிக்கு சேலம் வந்து சேர்ந்ததும், அங்கும் திருவாளர்கள் ராவ்பகதூர் எல்லப்ப செட்டியார் எம். எல். சி., தம்மண்ணசெட்டியார் சேர்மென், அர்த்தநாரி செட்டியார், வக்கீல் பெரியசாமி பிள்ளை, மல்லையா, திருமலை செட்டியார், முனிசாமிமுதலியார்முதலியபலகனவான்கள் வரவேற்று மாலையிட்டுசெவ்வாப் பேட்டை திரு. எம். முனிசாமி முதலியார் ஜாகைக்கு அழைத்துச்சென்றார்கள். அங்கு காலை சிற்றுண்டி நடந்தது. முனிசிபல் ஆபீசில் ஏற்பாடு செய்திருந்த மாகாண புரோசல்சர்வர்கள் மத்திய கமிட்டியில் திரு. சின்னையா பிள்ளை தலைமையில் திரு. ராஜன் அவர்களுக்கு ஒரு உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது. அந்த வைபவத்திற்கு சேலம் பிரமுகர்கள் அநேகர்கள் விஜயம் செய்திருந்தார்கள். பிறகு பகல் சாப்பாடு நடந்ததும் நெல்லூர் மகாநாட்டுப் பிரச்சினையைப்பற்றி பேச உள்ளூர் பிரமுகர்கள் அநேகர் அழைக்கப்பட்டிருந்தபடி வந்து சேர்ந்தார்கள். அங்கும் மற்ற இடங்களைப் போலவே பார்ப்பனர்களை சேர்த்துக்கொள்ளக்கூடாது என்கின்ற முடிவுக்கே வரப்பட்டது. பிறகு தலைவர்களை பாண்டுவாத்தியங்களுடன் செவ்வாப்பேட்டை பி. கிளாஸ்ரோட்டிற்கு அழைத்துச்செல்லப்பட்டு அங்கு அமைக்கப்பட்டிருந்த பெரியகொட்டகையில் திரு: ராஜன் தலைமையில் திரு. ஈ. வெ. ராமசாமியால் சுயமரியாதை வாலிபர் சங்கம் திறந்துவைக்கப்பட்டது.

பிறகு அங்கிருந்து அம்மாபேட்டை முனிசிபல் பாடசாலைக் கட்டிடத்திற்கு பாண்டு வாத்தியங்களுடன் அழைத்துச் செல்லப்பட்டு அங்கு திரு. ஈ. வெ. ராமசாமி தலைமையில் திரு. ராஜன் அவர்களால் சேலம் வாலிபர் சங்கம் திறந்து வைக்கப்பட்டது. பிறகு மாலையில் சேலம் மார்க்கட்டு மைதானத்தில் திரு. ராஜன் தலைமையில் ஒரு பெரிய பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தபடி பல ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடி இருந்தார்கள். திரு. ஈ. வெ. ராமசாமி தற்கால நிலமை என்பதுபற்றி இரண்டு மணி நேரம் பேசினர். பிறகு இரவு சாப்பாடு ஆனதும் பிளூமவுண்டன் எக்ஸ்பிரசில் வேலூருக்கு புறப்பட்டுவிட்டார்கள். அங்கும் பல உள்ளூர் பிரமுகர்கள் ரயிலில்வரவேற்று மாலையிட்டு முனிசிபல் சேர்மென் திரு. பத்மநாப முதலியார் வீட்டிற்கு அழைத்துச்செல்லப்பட்டார்கள். பகல் சாப்பாட்டிற்கு மேல் ராவ்பகதூர் முருகேச முதலியார் அவர்கள் வீட்டில் அனேக பிரமுகர்கள் வந்து நெல்லூர் மகாநாட்டுப்பிரச்சினையைப்பற்றிப் பேசி அங்கும் பார்ப்பனர்களைச் சேர்த்துக்கொள்ளக் கூடாது என்கின்ற முடிவுக்கு வந்தார்கள் பிறகு சுயமரியாதைச் (சமபந்தி) சாப்பாட்டு விடுதியில் திரு. முருகேச முதலியார் தலைமையில் தலைவர்களுக்கு உபசாரப் பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்பட்டன. பிறகு வாத்தியங்களுடன் அழைத்துச்சென்று டவுன் ஹாலில் திரு. கிருஷ்ணரெட்டி அவர்கள்தலைமையில் திராவிடசங்கத்தாரால் தலைவர்களுக்கு உபசாரப் பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப் பட்டார்கள். கூட்டம் ஏராளமாய் இருந்தபடியால் திரு. ஈ. வெ. இராமசாமி உபசாரப் பத்திரத்திற்கு பதில் சொல்லும் முறையில் ஆத்திகப்புரட்டு என்பதுதற்றி சுமார் ஒன்றரைமணி நேரம் பேசினர். அன்றுஇரவுதிரு. பத்மநாபமுதலியார் அவர்கள் வீட்டில் விருந்து நடந்தது. இவ்விருந்துக்கு பல அதிகாரிகளும் பிரபல வர்த்தகர்களும் வந்திருந்தார்கள். மறுநாள் காலை வண்டியில் தலைவர்கள் அங்கிருந்து கூடலூருக்குப் புறப்பட்டு விட்டார்கள். வழியில் திருவண்ணமலையில் சேர்மென் முத்துக்குமாரசாமி முதலியார் அவர்களும், மற்றும் சுமார் 40, 50 கனவான்களும் ஸ்டேஷனுக்கு வந்து மாலையிட்டு வரவேற்று உபசரித்து சிற்றுண்டி வழங்கினர்கள் பிறகு நேரே கூடலூருக்கு மாலை 4 மணிக்கு வந்து சேர்ந்ததும் அங்கும் திரு. முத்துக்குமாரசாமி செட்டியார், சிதம்பரம் வேணுகோபால் பிள்ளை, ராமலிங்கம் பிள்ளை ஆகியவர்களால் வரவேற்று செட்டியார் அவர்களது வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். பிறகு கூடலூர் ஜில்லா போர்ட் கட்டிடத்தில் திரு. சீதாராம ரெட்டியார் எம். எல். சி., அவர்கள் தலைமையில் ஒரு சிறு கூட்டம் ஏற்பாடு செய்திருந்தது. அங்கும் மேல் கண்ட விஷயத்தைப்பற்றி பேசியதில் பிராமணரைச்சேர்த்துக்கொள்ள வேண்டியதில்லை என்கின்ற முடிவுக்கே வரப்பட்டது. பிறகு செட்டியார் வீட்டில் இரவு விருந்து முடிந்ததும் திருவனந்தபுரம் எக்ஸ்பிரசில் 24-ந் தேதி காலை சென்னைக்கு வந்து சேர்ந்தார்கள்.

(9-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

திரு. கோவிந்தராஜலு முதலியார் அவர்கட்கு வந்தனம் செய்வதாகவும் கூறினர்.

கடைசியில், வந்திருந்த பிரமுகர்கட்கும் தலைவர்கட்கும் ராவ்பகதூர் டாக்டர் ஏ. லக்ஷ்மணசாமி முதலியார் எம். டி., அவர்கள் வந்தனோபசாரம் கூறி அனைவருக்கும் வந்தனம் செலுத்தியபின்னர் கூட்டம் இரவு 8மணிக்குக் கலைந்தது. மேற்கண்ட மூன்று படங்களையும் எழுதியவர் திரு. வைத்தியநாதன் ஆவார் எனத் தெரிகிறது.

## கோட்டயத்தில் இடிவிபத்து

ஜெருஸலேம சர்ச்சுக்கு சேதம்

திருவனந்தபுரம், கோட்டயத்திலுள்ள ஜெருஸலேம் சர்ச்சு மிகுந்த மழையினலும் மின்னலிடியினலும் சேதமடைந்துள்ளது. அந்த சர்ச்சின் மேல் பாகமும் சிலுவையும் துண்டு துண்டாகப்போய் விட்டனவென்றும் தெரிகிறது. இந்த சர்ச் வெகுகாலத்திற்கு முன்னர் கட்டப்பட்டதாம்.

## மாரியம்மன் கோயிலில் விபசாரம்

### அர்ச்சகனின் அடாத செயல்

தர்மகர்த்தாவின் பராமுகம்

திருச்சிராப்பள்ளி பீமநகரிலுள்ள மாரியம்மன் கோயிலுக்கு அர்ச்சகனை ஒரு பட்டர் சென்ற 11-9-29 புதன்கிழமை யன்று இரவு சுமார் 9-மணிக்கு மாரியம்மன் தரிசனத்துக்கென வந்திருந்த ஒரு பெண்ணை பலாத்காரப்படுத்தி அம்மன் சந்நிதியிலே ஒரு இருட்டுநிறைந்த இடத்தில் சோரம் புரிந்து கொண்டிருந்தான். அச்சமயம் கோயிலுக்கு அம்மன் தரிசனத்துக்கென வேறு சிலர் வரவும், இவர்களிருவரும் மடப்பள்ளிக்குள் ஓடி ஒளிந்தனர். இவர்கள் ஒளிவதைக்கண்டு சந்தேகமுற்று தரிசனத்துக்கு வந்திருந்தவர்கள், இவர்களைப் பிடித்து விசாரிக்கையில், தனது அறியாமையினல் செய்த குற்றத்திற்காக மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டதின் பேரில் அப்பட்டனிடமிருந்த கோயில் சாமி சாமான்கள்முதலானவைகளைப்பிடுங்கிக்கொண்டு அவனைத் துரத்திவிட்டனர். இந்தப் பார்ப்பனன் இதற்கு முன்னும் பல அடாத செய்கைகளை செய்து வந்ததைக் குறித்து பல பார்பனரல்லாத பிரமுகர்கள் தர்மகர்த்தாவிடம் முறையிட்டுக் கொண்டும் அவர் இதைக் கவனிக்காமல் அசட்டையாயிருந்து விட்டாராம்.

## இறந்தவர் பேசுவார்களா?

### மறு உலக வாழ்க்கையின் மர்மம்

காந்தியார் கூறுவது

இறந்துபோனவர்கள் என்னிடம் பேசவதுண்டா என்றும், அல்லது அவ்வாறு சம்பாஷிப்பது இயலுமா என்றும், எனக்கு அதில் நம்பிக்கை உள்ளதா என்றும் பலர் என்னை வினவுகின்றார்கள்.

இது ஒரு ஒழுங்கீனமான முயற்சி என்றே கூறுவேன்.

இது முடியுமென்று கூறுவதற்கு எனக்கு பிரத்தியட்ச அநுபவமில்லை. ஆனல் இவ்வாறு இறந்து போனவர்களுடன் பேச முயற்சிப்பதை நான் மிகவும் வன்மையாய்க் கண்டிக்கிறேன். இவைகள் எல்லாம் பெரும்பாலும் ஏமாற்றமாம். இத்தகைய முயற்சி மிகவும் கெடுதலையும் பயக்கக்கூடியது.

இத்தகைய முயற்சிக்கு மூளையின் பலவீனமே காரணம்.

நான் அனுபவப்பட்டவரையில் இவ்வாறு மாண்டவர்களுடன் பேச முயற்சி செய்பவர்கள் எல்லோரும் மூளையில்சீர்கேடும்பலவீனமும்படை

## சென்னையில் மைசூர் திவான்

### ஜனாப் ஜமால் முகையதீன் சாயபுவின் பிரபல விருந்து

மைசூர் திவான் சாகேப் கனம் மீர்சா இஸ்மேயில் அவர்கட்கு சென்னை பிரபல வியாபாரியும், கோடீஸ்வரருமான ஜனாப் ஜமால் முகையதீன் அவர்களால் மவுண்டுரோட் பசோட்டா ஓட்டலில் ஒரு பலமான விருந்து அளிக்கப்பட்டது.

குறிப்பிட்ட சில கனவான்கள் அழைக்கப் பட்டிருந்தனர்:—மைசூர் திவான் சாகேப் அவர்கள்; கனம் டாக்டர் பி. சுப்பராயன் முதன் மந்திரியார்; கனம் எஸ். முத்தையா முதலியார் சுகாதார இலாக்கா மந்திரியார்; கனம் எம் கிருஷ்ணன் நாயர் லாமெம்பர்; செட்டி நாட்டரசர் ராஜா சர். அண்ணாமலை செட்டியார்; கனம் சர். டி. இ மாயர், பெருளாதார மெம்பர்; கனம் ஏ. ஒய். ஜி. காம்பல் ரெவினியூ மெம்பர்; கனம் சர். முகமது உஸ்மான் சாகிப் ஹோம் மெம்பர்; கனம் எம். ஆர். சேதுரத்தினம் அய்யர் அபிவிருத்தி இலாக்கா மந்திரியார்; திருவாளர் ஈ. வெ. இராமசாமியார்; திருவாளர் ஏ. இராமசாமி முதலியார் சென்னை கார்ப்பொரேஷன் தலைவர்; சர். ஏ. பி. பத்ரோ; திருவாளர் சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார் எம். எல். சி. கோயம்புத்தூர் ஜில்லாபோர்டு தலைவர்; திருவாளர் சௌந்திரபாண்டிய நாடார்எம். எல். சி. இராமனாதபுரம் ஜில்லாபோர்டு தலைவர்; செட்டிநாட்டுகுமாரராஜா திரு.எம். ஏ. முத்தையா செட்டியார்; திருவாளர் எஸ். வி. இராமசாமி முதலியார்; திருவாளர் ஜே. எஸ். கண்ணப்பர், திராவிடன் ஆசிரியர்; ஜனாப் எம். ஜே. ஜமால் முகையதீன்; திருவாளர் வி. பாண்டியா, இந்துஸ்தான் பாங்கு காரியதரிசி; சென்னை லார்டுபிஷப்; ஜனாப் அப்பால்அலி, சீப் பிரசிடென்சி மாஜிஸ்திரேட்; திருவாளர் பி. வரதராஜுலு நாயுடு தமிழுநாடு ஆசிரியர்; திருவாளர்டாக்டர் நடேச முதலியார் எம். எல். சி; கான்பகதூர் ஜனாப் அப்துல் குதூஸ் பாட்சா சாஹேப்; திரு. சி. எம். கோதாரி; கான்பகதூர் ஹாஜி எம். அப்துல் அசீசுபாட்சாசாகேப்; ஜனாப் சி. அப்துல் ஹகிம்; ஜனப் யாகூப் ஹாசன் சேட்; எம். ஜே. முகமது இபுருகீம்; திரு. இ. கான்ரான்சிமித், கார்ப்பொரேஷன்கமிஷனர்; திவான் சாஹேப் அவர்கள் அந்தரங்கக்காரியதரிசி; திரு. எம். சி. டி. சிதம்பரம் செட்டியார்; திரு. ஏ. ஏ. ஹெய்ல்ஸ், மெயில் பத்திரிகை ஆசிரியர்; மற்றும் சில கனவான்களும் இவ்விருந்துக்கு அழைக்கப்பட்டு விஜயமாயிருந்தனர்.

திவான் அவர்கள் சுமார் அரை மணிநேரம் வரையில் திரு. ஈ. வே. இராமசாமியாருடன் சுயமரியாதை இயக்கத்தை ப்பற்றியும், மற்றும் சென்னையின்பொது வாழ்க்கையைப் பற்றியும் பேசிக்கொண்டிருந்தார்.


### ஓர் அனுதாபம்

விருதுநகர் நாடார் குல திலகரும் சுயமரியாதை வீரரும், பிரபலவர்த்தகரும், முனிசிபல் தலைவருமாயிருந்தவருமான உயர்திரு. எம். எஸ் பி. செந்தில்குமாரனவர்களின் வாழ்க்கைத்துணை நலமாகிய திருமதி மீனாட்சியம்மை அவர்கள் உடல் நீத்தமைக்கு நாம் நமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.


அதி நூதனம்! மிக ஆச்சரியம்!!

மாதம் 100 ரூபா முதல் 500 ரூபா வரை சம்பாதிக்கக்கூடிய

**சிறிய சைஸ் தையல் இயந்திரம்**



இது சாதாரண மெஷின்களைப் போலவே மேஜையின் பேரில் முடுக்கி, தையல் வேலை செய்பவர்களும், பெண்களும், குழந்தைகளும், எல்லா தையல் வேலையும், சட்டைகள், கோட்டுகள், துணிகள் முதலியவை தைக்கலாம் இதைச்சேர்ந்த சாமான்களுடன் இதற்குரிய பெட்டியில் பாக்கிங் செய்தனுப்பப்படும்.

5 வருட காரண்டியுள்ளது.

விலை ரூ. 3—14—0.

பினாங், சிங்கப்பூர் முதலிய மலாய் நாடுகளுக்கு பாக்கிங் ரூ. 5—4—0. உள்பட முன் பணம் அனுப்பவேண்டும்.

லக்ஷ்மி டிரேட்ஸ் கம்பெனி,
தங்கசாலை, மதராஸ்.



# தாதுபுஷ்டிக்கு

## பழநி, சி. எம். சாமி,

## மன்மத கோலாகல குளிகை

அநேக பரிசுகள் பெற்று உலகெங்கும் புகழ்ப்பட்டது. தாது புஷ்டிக்கு நிகாற்றது. ஒரே குளிகையில் பரீட்சிக்கலாம். இழந்த ஆண்மையும், பலமும் திரும்ப வரும். நல்ல ஜீரணம், ரத்தவிர்த்தி, இந்திரியக்கட்டு, போக சக்தி, தாதுபுஷ்டி இவற்றைத் தரவல்லது. எவ்வித பலஹீனம், தாது நஷ்டம், துரிதஸ்கலிதம், இடுப்புவலி, உஷ்ண ரோகங்கள் நீங்கும். ஒருமுறை பரீட்சித்தவர்களுக்கே இதனருங்குணம் விளங்கும். 120 குளிகைக்கு ரூ. 10, 60 குளிகைக்கு ரூபா 5, 30 குளிகைக்கு ரூபா 3.

அந்நிய நாட்டார் முன் பணம் ரூபா 5 அனுப்பவும்.

வைத்திய ஆசிரியர், **சி. மலையப்பசாமி,**
(61 டி) நித்தியானந்த வைத்தியசாலை, பழநி.



நறுமணம் மிகுந்தது! கூந்தலுக்கு கருநிறம் கொடுப்பதில் நிகரற்றது!!

## அரைக்கீரை விதைத் தைலம்

கூந்தலை வளரச் செய்து, பளபளப்பையும், குறையாத மணத்தையும் கொடுப்பதில் நிகரற்ற தைலம்.

சகல வியாதிகளையும் குணப்படுத்தும் தினசரி தடவிக்கொள்ளவும், ஸ்நானத்திற்கும் ஏற்றது.

8 பலம் டின் 1-க்கு ரூ. 1–2—0. வி பி. தபால் பிரத்தியேகம்.

குறிப்பு:-இரண்டு டின் தருவிப்பவர்களுக்கு ரூ 0—4—0 பெறுமானமுள்ள முத்து பற்பொடி இனாமாக அனுப்பப்படும்.

ஸ்ரீ கிருஷ்ண கௌதம பரிமள ஸ்டோர், வலங்கைமான், (Via) கும்பகோணம்.
பிராஞ்சு:— 23, பவழக்காரத் தெரு, சென்னை.



வெளியாகி விட்டது! வெளியாகி விட்டது!

# சாமிகளின் அடிமைகள்

சாமிகளின் அடிமைகள் என்னும் மொழி பெயர்ப்பு நூல் இப்பொழுது விற்பனைக்குத் தயாராய் உள்ளது. இதன் விலை 1-8-0 ரூபாய் என்று நாம் குறிப்பிட்டிருந்தோம். ஆனால் பலர் இவ்விலையைச் சிறிது குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதின் பேரில் நாம் பிரதி ஒன்றை 12 அணாவிற்கே கொடுப்பதாக உத்தேசித்துள்ளோம்.

விலை ரூபாய் 0—12—0.

**திராவிடன் புத்தகாலயம்,**
14, மௌண்ட் ரோட், சென்னை.

தனிப்பிரதி விரும்புவோர் 14-அணா தபால் ஸ்டாம்பு அனுப்பவும்.



வியாபாரத்திற்கு அழகு
விளம்பரம்செய்தல்


த்தவர்களாகவே இருக்கின்றார்கள். இவர்கள் மாண்டவர்களுடன் பேசுவதாக நினைத்துக்கொண்டிருக்கும் காலையில் அறிவற்றவர்களாகவும், பலனளிக்கக்கூடிய ஒரு வேலையைச் செய்ய ஆற்றலற்றவர்களாகவுமே காணப்படுவார்கள்.

மேலும் இத்தகைய முயற்சியில் இறங்கிய எனது நண்பர்களில் ஒருவருமே இதுவரையில் எத்தகைய நிலையிலும் பலனடைந்ததில்லை.

உலகத்தில் நீங்கள் உயர்பதவி படையவேண்டாமா ?

சகலவித வசிய மர்மங்களை நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டாமா ??

**இவை எப்படி அடைவது ???**

**கீழே கவனித்து வாசியுங்கள் !!!**

பூலோகத்தின்கண் புண்ணிய கீர்த்தியாய் விளங்க—உயர்பதவி—சுயமரியாதை—கௌரவம்—மஹத்துவம்—புகழ்ச்சி—ஆதிக்யம்—அதிர்ஷ்டம்—ஜீவசக்தி—காரியசித்தி—ஹிப்னுடிசம்—மேஸ்மரிஸம்—மூலானவைகளை அனுபவிக்கவேண்டிய அபூர்வ ரகஸ்யங்களை சுலபமாக அறிந்து அனுஷ்டிப்பதற்கு—ஸ்வாமி ப்ரேமானந்த யோகீச்வரர் அவர்களினுல் லோகோபகாரமாய் எழுதப்பட்ட

# வசீகரண தந்த்ரம்

என்னும் அதியற்புத கிரந்தத்தை உடனே விலைக்கு வாங்கி வாசித்து லாபம் அடையுங்கள் ! இதில் கோரிய பெண்ணை மணமுடித்தல், மணமகன் மணமகளுடைய காதலை விருத்திசெய்தல், கன்னிகை வசீகரணம், மனமில்லா மணத்தை மகிழ்வுபெறச் செய்தல், ப்ரேமாபி விர்த்தி, நிரந்தரமான நட்பைப்பெறல், மணத்திற்குமுந்தி மணப்பெண்ணின் ப்ரீதியைப் பெறல், ஸ்திரீகளிடத்தில் கௌரவம்பெறுதல், பிரிவுற்ற தம்பதிகள் கூடுதல், வேண்டுமளவு சந்ததி பெறல், கணவனின் கெட்ட நடத்தைகளை திருத்துதல், பெண்களின் துர்நடத்தைகளை நிறுத்துதல், தனவந்தனை தன்வயமாக்கிக்கொள்ளல், உருக்கமற்ற உறவினரின் உருக்கத்தை பெறுதல், பேய் பிசாசுகளை ஓட்டுதல், சூன்யம் திருப்புதல், பைத்தியம் போக்கடித்தல், மானவ வசியம், ஜீவஜந்துக்களின் வசியம், தனாகர்ஷணம், களாகர்ஷணம், ஜனாகர்ஷணம், மோஹனம், ஸ்தம்பனம், உச்சாடனம், வித்வேஷணம், மாரணம், சாந்தி முதலாக 100 ப்ரயோகங்கள், சிறுவர் முதல் பெரியவர் வரை அறிந்துகொள்ளும்படியான சுலபமான நடையில்—இனிய மொழியில் எழுதப்பட்டன.

மேற்சொன்ன விஷயங்களெல்லாம் இப்புத்தகத்தில் இல்லையென்று எவரேனும் நிரூபித்தால் அவருக்கு இப்புத்தகத்திற்கு வாங்கிக்கொண்ட விலையை யாதொரு ஆக்ஷேபனையின்றி திருப்பிக்கொடுத்து விடப்படும். இன்னும் இதைவிட திடமாக வேறு என்ன உறுதி சொல்லலாம்?

இப்படிப்பட்ட புகழ்வதற்குரிய மகோன்னத கிரந்தத்தை வாங்கிப்படித்து அதனுல் பலன் அடைந்தவர்களின் அபிப்பிராயமென்ன ? . . .

"ஒவ்வொரு மனிதனுக்கும் சுதாவாய் ஏற்பட்டிருக்கும் ஒருவித மறைந்த—கண்களுக்கு தென்படாத—அபூர்வ சக்தியால், திடசித்தம், வைராக்கியம், தன் நம்பிக்கை முதலியவற்றை இப்புத்தக உதவியால் வெகு சீக்கிரத்தில் தன் வயமாக்கிக்கொண்டு எல்லாவித சுகபோகங்களை அனுபவிக்கலாமென்றும், உலகத்தையே அடக்கி ஆளமுடியுமென்றும், மனிதனுக்குள் மறைந்திருக்கும் சர்வசக்தியை வெளிப்படுத்த இப்புத்தகம் ஒரு வழி காட்டியென்றும், இப்புத்தகம் எடைக்கு எடை பொன்விலை பெறுமென்றும்," இன்னும் இவைபோன்ற நற்சாட்சிப் பத்திரங்கள்—பொன்போல் போற்றத்தக்க நற்சாட்சிப் பத்திரங்கள்—எமக்கு தினந்தோறும் வந்து குவிந்துகொண்டே யிருக்கின்றன.

அதிர்ஷ்டம் உள்ள வர்கட்கே இப்புத்தகம் கிடைக்கும்! நாளை எழுதலாம் என்று காலம் தள்ளாமல் மறந்துவிடுமுன் இன்றே—இப்பொழுதே—ஒரு புத்தகத்திற்கு—ஆர்டர் செய்து வாங்கிப் படித்து அதிலுள்ள இன்பத்தைக் கண்டு களி கூறுங்கள் !!

இவ்வளவு மகா புதுமையான அற்புத சக்தி—அலங்கார நடை—இனிய மொழி—முதலியவைகளுடன் கூடிய இம்மகோன்னத க்ரந்தத்திற்கு ஏற்பட்டிருக்கும் விலை என்ன ?

இதற்குரிய விலையை எம்மால் மதிப்பிடமுடியாது! செல்வத்தில் மிதந்துகொண்டிருக்கும் வெள்ளைக்கார நாடாகிய மேல் நாட்டினர் இம்மாதிரி போன்ற புத்தகம் ஒன்றை பிரசுரப்படுத்தினுல் அதற்கு மனம் கூசாமல், இருபது அல்லது முப்பது ரூபாய் என்று விலை வைத்துவிடுவார்கள். அப்படி அப்புத்தகம் அதிகமான விலையுள்ளதாயிருந்தாலும், லட்சக்கணக்கான புத்தகங்கள் சில மாதங்களில் விற்பனையாகிவிடும்? ஆனுல், அந்தோ! நம் இந்து தேசத்தில் அம்மாதிரி விற்பனையை கனவிலும் காண்பதரிது. அதனுலன்றோ, எம்முடைய வசீகரண தந்த்ரம் பிரசுரமான ஒருமாத காலத்திற்குள் 3160 பிரதிகள் செலவாய் விட்டனவென்பது ஆச்சரியமே என்கிறோம்! ஏழை முதல் தனவந்தர் வரையில் எல்லோரும் ஜாதிமத வித்தியாசமின்றி வாங்கிப் படித்து மேலான பதவிபடையவேண்டி லோகோபகாரமாய் எழுதிய இப்புத்தகத்திற்கு மிகச் [illegible] ஏற்பட்ட விலை ரூபாய் இரண்டே! (தபால் செலவு 0-5-0.)

குறிப்பு:—இரண்டு புத்தகத்திற்கு ஒரே தடவையில் ஆர்டர் செய்பவர்கட்கு தபாற்செலவு இனும் !

**எம். எஸ். ராமுலு கம்பெனி,** புத்தக வியாபாரிகள், 88, மன்னர்சாமி கோயில் தெரு, ராயபுரம், மதராஸ்.

M. S. Ramulu & Co., Book-sellers, 88, Mannarsamy koil Street, Rayapuram, Madras.

# வே. சாமிநாதையரின் கொடுமையும், திருப்பனந்தாள் காசிமடத் தலைவர் மதி யிழப்பும்.

(குடந்தை கூத்தப்பிரானார்)

சென்ற வாரத்தில் கும்பகோணம் போர்ட்டர் டவுன் ஹாலில் தன்னினும் மிக்க தமிழ் கல்வியாளரில்லையெனத் தருக்கிப் பிறரை ஏமாற்றி வஞ்சப் புகழ்ச்சி செய்து திரியும் வே. சாமிநாதையர் தலைமையின்கீழ்ப் பார்ப்பனக் கூட்டமொன்று கூட்டி நீதியின்றி ஒரு ஆரியனுக்கு மட்டும் ஷை காசிமடத் தலைவராகிய ஸ்ரீலஸ்ரீ சொக்கலிங்கத் தம்பிரானவர்களும் ஸ்ரீலஸ்ரீ சாமிநாத தம்பிரானவர்களும் பார்ப்பனர் யாவரும் கண்டுகேட்டு மகிழுமாறு ஆயிரம் ரூ. பரிசாகக் கொடுத்த செய்தியை சுதேசமித்திரன் முதலிய பத்திரிகை வாயிலாகத் தெரிந்து ஒருபுறம் தமிழ் கல்வி படித்துத் தேர்ந்த ஆரியனுக்குக் கொடுத்தமைக்கு மகிழ்ச்சியும், அவ்வாறே முதன் முதல் சென்னைப் பல்கலைக் கழகத்துத் தமிழ் வித்துவானாக முதல் வகுப்பில் சென்ற வருஷத்தில் தேறிய இரண்டு தமிழர்களுக்குக் கொடுத்தற்குரிய எண்ணமுமின்றி ஏமாற்றிய ஆரியச் சூழ்ச்சியை யுன்னுந்தோறும் அடகாப் பெரு வருத்தமும், உண்மையாகத் தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் உண்டாகாமற் போகாது. ஆரியர் பல நூற்றாண்டுகளாகத் தமிழரை ஏமாற்றிப் பலவகையிலும் வஞ்சகமாகப் பிழைத்து வந்த செய்திகள் ஒன்றின்பின் ஒன்றாக வெளிப்பட்டும் மேலும் தம் சாதிக்கொள்கையை வலிப்படுத்துகின்றனரேயன்றிச் சிறிதும் தளர விட்டாரில்லை. பார்ப்பனர் மந்திரத்தாற் கட்டுண்டு உழலும் நமது காசிமடத் தம்பிரான்கள் போன்ற போலித் தமிழரை நம் நாடு பெற்றிருக்கும் வரையில் ஒருநாளும் முன்னுக்கு வராது.

சென்ற ஆண்டில் வித்துவான் வகுப்பிற் தேறிய முதல் மாணவராகிய தண்டபாணி தேசிகரும், மற்றவர்களாகிய சிவப்பிரகாச தேசிகர், குஞ்சிதபாத தேசிகரும், கோதண்டராமையரும் ஆகிய நால்வரையும் கூட்டிக்கொண்டு சென்னையில் ஷை காசிமடத்துச் சின்னத்தம்பிரான் இருக்கும் சாலைக்கு வே. சாமிநாதையரவர்கள் சென்று கண்டபொழுது தற்போது கைவசம் பணமில்லையெனச் சொல்லிக்கொண்டு 10 ரூபாயோ அதற்குக் குறைவாகவோ கொடுத்து அனுப்பிய செய்தி பலருக்கும் தெரியும். சின்னத் தம்பிரானாகிய சாமிநாத தம்பிரானவர்கள் ஒருதந்தி கொடுத்தாவது அல்லது வேறு எவ்விதத்திலாவது தமிழ் கல்வி பயின்றவருக்குப் பணமளித்துப் புகழ் பெறக் கருதியிருந்தால் கொடுத்திருக்கலாமே? முதன்முதல் வித்துவான் பரீட்சையில் தேறியவர்கள் தம்மைப் பார்க்கத் தாம் பரிசளிக்க மனமில்லாமல் வாளாயிருந்த சமயத்தில் மேற்படி சாமிநாதையரவர்கள் இப்போது ஆரியச் சிறுவனுக்குக் கொடுத்ததற்கு அல்லல்பல பட்டும், அடிக்கடி திருப்பனந்தாளுக்குச் சென்று தமது மந்திரத்தால் மயங்கும்படி செய்த முயற்சியைத் தனித் தமிழர்களுக்குச் செய்திருந்தால் அவர் கல்விப் பெருமைக்கு ஏற்றதாகும். என்ன செய்தும் நாய் வாலை நிமிர்க்க முடியுமா? என்ற பழமொழிப்படி பற்பல பிறப்புகளால் ஏறிய ஆரியர்களது அடாத செய்கைகளை ஒரே பிறப்பிற் பயின்ற தமிழ் கல்வியால் திருத்த முடியுமா? முடியாது. ஆரியச் சேர்க்கையையே அல்லும் பகலும் விரும்பியுள்ள அம்மடத்துத் தம்பிரான்களைத் தனித்த தமிழ் மக்கட் பகுதியினர் இனிச் சும்மா விடுதல் நன்றாமா? மடங்களில் அவர்கள் செய்யும் ஒவ்வொரு நீதியற்ற செயலையும் வெளிப்படுத்தி அவர்களுக்கு நல்ல நீதி புகட்டுவதன்றோ தமிழராகிய நம்மனோர்க்குக் கடனாகும். இவ்வாறு கூறி, அவர்களைத் திருந்தச் செய்தலால் புண்ணியமும் புகழும் ஒருங்கே கைகூடுமேயன்றிப் பாவம் என்பது ஒருபொழுதும் நம்மிடத் தணுகாதெனத் துணிந்தே கூறலாம்.

தனித் தமிழருடைய உணவும், உடையும், அறிவும், பொருளும் பெற்று; தமிழராகிய நம்மனோரை முன்னுக்கு வரவொட்டாது செய்து வருகின்ற இவ்வாரியர் குழுவை அடியோடு வேரறுத்தற்குரிய காலம் என்று வாய்க்குமோ? ஆரியரது மந்திரத்தால் மயங்கிய தமிழருக்கு வீரமென்பது சிறிதேனு முண்டா? தாய் நாடாகிய தமிழ்நாட்டில் தமிழ்மொழி பயிலும் தாய்க்கும், தமிழ்மொழி பயிலும் தகப்பனுக்கும் உண்மையாக பிறந்த தமிழர்களாயிருப்பின் இவ்வாரியர் சூழ்ச்சிக்கு உடன்பட்டு நடந்து வருவார்களா? தமிழ் வளர்ச்சி கருதியும், சமய வளர்ச்சி கருதியும், தனித் தமிழ் மக்கள் தமது உண்மை யுழைப்பினால் பெற்ற செல்வம், அறநெறியான் ஈட்டப்பெற்ற செல்வம் இவ்வாறு பாழாக ஆரியர் வஞ்சகமாய்க்கொண்டுண்டு உடுத்து மகிழ்ந்திருக்கத் தமிழ் மக்களிற் பெரும்பாலோர் வருந்துவது அறமாகுமா? இப்போது தமிழகத்திலுள்ள மடாதிபதிகள் யாவரும் தன் அப்பன் தேடிவைத்த செல்வத்தைப்போல மதித்துத் தத்தம் மனம்போனவாறு பயனற்ற வழியில் அழித்தல் நன்றாகுமா? தம் மடத்திற் சென்று ஆதின கர்த்தராகவோ, தம்பிரான்களாகவோ மாறுவதற்குமுன் தானும், தன் தகப்பனும், பாட்டனும் ஆகிய இவர்கள் முழங்கால் தேயப் பிடி அரிசிக்குப் பலவீடுகளில் யாசித்து வாங்கியதைச் சிறிது நினைத்தால் இவ்வாறு அடாத நெறியில் மடாதிபதிகள் நடக்கத் துணிவார்களா? 'அற்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியில் குடைபிடிப்பான்' என்ற பழமொழிப்படியும், 'முந்திரிமேற் காணி மிகுமேல் கீழ்தன்னை இந்திரனா யெண்ணிவிடும்' என்ற பழமொழிப் படியும் முன்னிருந்த நிலையை எண்ணாது தற்போது வந்த அற்ப வாழ்வினால் மகிழும் ஆதின கர்த்தர்களையும் தம்பிரான்களையும் அடக்குவாரொருவரும் தமிழகத்தில்லையா!

பார்ப்பனச் சேர்க்கை தமக்கு வேண்டுமானால் அதற்காக எந்த அப்பன் வீட்டுச் சொத்து கிடக்கிறதென வாரி யிறைப்பது? தமிழ் கல்வி வளர்ச்சிக்கென வைத்த பொருள் முழுவதும் அந்தோ ஒரு முயற்சியுமின்றி வெள்ளை கட்டித் துள்ளித் திரியும் பார்ப்பனருக்கும் கல்விக்கென உலவி வரும் கவின் மங்கைகளிலும் அள்ளியள்ளித் தருதல் அடக்குவாரின்றி அட்டகாசஞ்செய்யும் தம்பிரான்களுக்கும் மடாதிபதிகளுக்கும் ஏற்றதாகுமா? 1,500 வேலி நிலம் காசிமடத்துக்கு முன்னோர் தேடி வைத்திருக்க அதன் வரும்படி முழுவதையும் மதன் செயும் வழியில் செலவழிப்பது தவிர கல்வி வளர்ச்சியேதேனுமுண்டா? கலவிக்குப் பாதியும், கல்விக்குப் பாதியுமாவது செலவிடலாகாதா?

எவ்வகையிலும் தமிழ்ப் பெருமக்களை முன்னுக்கு வரவொட்டாத ஆரியர் கட்டுரைகள் ஆங்கிலமும், தமிழும், ஆரியமும், பிறமொழிகளும் ஒருங்கே கற்று ஆராய்ச்சி செய்து வரும் தமிழ்ப் பெருமக்களால் வெற்றுரைகளாயின. ஆகின்றன. இனி ஆகும். இவற்றை மறுத்துரைக்க எந்த ஆரியனுக்காவது திறனுண்டா? வேதம், இதிகாசம், புராணம், தர்ம சாஸ்திரம் முதலிய நூல்களில் ஆரியராகிய பார்ப்பனர் செய்த பாவத்துக்குக் கழுவாயொன்றும் தமிழ் மக்கள் செய்யும் பாவத்துக்குக் கழுவாயொன்றுமாகக் கட்டிப் புரளிசெய்து அரசரையும் ஏமாற்றி வயிறு வளர்த்த ஆரியர் குட்டுக்களெல்லாம் ஆங்கிலங் கற்ற தனித் தமிழ் வீரர்களால் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றிற்கெல்லாம் தமிழர் தாம் படிக்காமல் காலத்தை வீணாக்கி ஆரியர் சூழ்ச்சியிற் பட்டுழல்வதே யாகும். இனியாவது தமிழ்ப் பெருமக்கள் யாவரும் தாம் தம் மக்களைத் தனித் தமிழ் நூல்களை முற்றக் கற்கும்படி செய்தால் நமது தமிழ் நாட்டில் முன்னோர் ஆரியர் சூழ்ச்சியிலகப்படாமல் தனித் தமிழரசு நடத்திய செய்திகள் வெளியாகும். புறநானூறு முதலிய தமிழ் நூல்களில் ஆராயப்புகின், இப் பார்ப்பனர்கள் புலாலுண்டமையும், கள்ளுண்டு களித்தமையும் புலனாகும். தமிழர்கள் வேள்வி செய்யலாகாதென ஆரியர் கூறி நூல்களிலும் ஏற்றிய அடாத மொழிகளெல்லாம் அவர்கள் தமிழ் மக்களது பொருளை வஞ்சகமாகப் பெற்று யாகங்களைச் செய்து தாம் சுவர்க்காதி போகங்களை யனுபவித்தற்கேயாகும். தமிழ் மூவேந்தரும் வேள்வி யியற்றிய செய்தி பண்டைத் தண்டமிழ் நூல்களைப் படிப்பார் யாவரும் எளிதினுணரத்தக்கதாகும். சங்கராச்சாரியார் என்னும் ஆரியர்களுக்குக் குருவானவர் லோக குரு எனத் தமிழரை ஏமாற்றிப் பணத்தைப் பிடுங்கி ஆரியருக்குச் சோறு போடுவதைத் தவிரத் தமிழருக்குச் செய்த நன்மைகள் ஏதேனுமுண்டா? வேதத்தைத் தமிழ் மக்கள் படித்தலாகாதென ஆரியர் கட்டியபோது ஆரிய மொழியில் வல்லுநர்களாகிய தமிழர்கள் ஆகமங்களைத் தொகுத்து வேதநெறி யொன்றுமட்டும் உள்ளவர் தாழ்ந்தவரென்றும் ஆகம நெறியைக் கைக் கொண்டவர்களும் தீட்சை முதலிய சடங்குகளும் செய்யப் பெற்றவர்களுமாகிய தமிழர்கள் வேத நெறியைக் கைக்கொண்ட அத் தாழ்ந்தவராகிய ஆரியரிடத்து உண்பதுங் கூடாதென விலக்கியுள்ளார்கள். வேதத்தில் கூறிய வேள்வி செய்யும் பார்ப்பனர்கள் வேள்வியில் மாமிசங்களையேபோட்டு எஞ்சியதைத் தாம்புசித்து வருகின்றனர். புறநானூற்றில் ஆராயப்புகுந்தால் பார்ப்பனர் மாமிசபுசித்த செய்தியும், தமிழர்கள் மாமிசம் பெய்யாது நெய் பெய்து வேள்வி செய்தமையும், வேள்வி முடிந்த விடத்தில் கல் நாட்டுவதையும் அறியலாம். யாக பசுவைக் கொல்லுவதற்காக முதலில் நாட்டப்படும் தூண் தனித்த தமிழ் நூல்களில் சொல்லப்படவில்லை. ஆகமங்களில் கூறப்படும் வேள்விகளெல்லாம் தமிழர் செய்யும் நெய் பெய்வேள்வியேயன்றி வேறல்ல. ஆகமம் தனித் தமிழருக்குரியதே. அவைகளில் சில ஆரியர்களால் கட்டியவை யுளவேல் அறிஞரால் ஆராய்ந்து ஒதுக்கத் தகுந்தனவே. இனிப் 'பார்ப்பனர்' என்ற சொல் சிறந்த அறிஞர்களைக் குறிப்பதாகும் ஆதலால் ஒழுக்கங் கெட்ட ஆரியனைப் பார்ப்பனன் என்ற சொல்லால் தமிழர்கள் அழையாமலிருப்பாராக; ஆரியன் என்றே கூறுக. ஆரியன் என்றதன் பொருள் மிலெச்சன் என்பது. இச் சொல்லை மிலேச்சர் என்ற பொருளில் பண்டைத் தண்டமிழ் நூல்கள் கூறுதல் குறிப்பிடத்தக்கதாகும். தனித்த தமிழருக்குப் பழந்தமிழ்க் கடலாகவுள்ளதும், அக்காலத்து ஆரியமொழிக்க தமிழரது தனித்த நாகரிகத்தைத் திறம்பட மொழிவதுமாகிய "ஒல்காப் பெருமைத் தொல்காப்பியத்திலும்" ஆரியர் குழுவினுள் ஒருவராகிய உச்சிமேற்புலவர் கொள் நச்சினார்க்கினியர் தமது ஆரியக்கொள்கைக்கேற்ப ஆரியப்பார்ப்பனர் முதலிய நால்வகைச் சாதிகளெனக் கொண்டு உரையெழுதித் தமிழரை மயக்கியிருக்கின்றனர். வலிந்துபொருள்கொண்ட இடங்கள்பல, ஆரியரால் சில சூத்திரங்கள் செருகப்பட்டுளதோ என ஐயுறுதற்குரிய இடங்களுமுண்டு. தனித்த தமிழ்ப் பெருமகனாகிய திருவள்ளுவரது நூலிலும் பரிமேலழகர்

உரை செய்யப் புகுந்து பல இடங்களில் ஆரியர் சூழ்ச்சியைப் புகவிட்டனர். இவைகளையெல்லாம் தமிழர் அறிய வேண்டுமாயின் தமிழ் நூல்களைப் பார்ப்பனரல்லாத தமிழரிடத்து முறையாகக் கற்றுணர்தல் இன்றியமையாததாகும். பிற்காலத்துப் பொருளிலக்கணங்களாகிய நம்பி அகப்பொருளிலும், புறப்பொருள் வெண்பாமாலை முதலிய வற்றிலும் ஆரியக் கொள்கையிலுள்ள சாதி வேற்றுமைகளைப் புகுத்தி விட்டனர். தமிழ் நாட்டிலுள்ள மூவேந்தரது குடிமைகளுக்கும் சூரிய குலம், சந்திர குலம், வன்னி குலம், எனத்தேவரொடு குடியைத்தொடுத்துவிட்டனர். தமிழகத்திலுள்ள அறிவர்களுக்குள்ள ஐயர், பார்ப்பனர் என்ற பட்டங்களுக்கியையத் தாமும் அவர் வேடந்தாங்கி (இப்போது 'சங்கரா' லோக குருவெனத் திருநீறு தரித்துச் சைவரையும், வைணவ மந்திரங்களைக் கூறி வைணவரையும் ஏமாற்றிப் பணம் பறிப்பதுபோல) அப்பட்டப் பெயர்களை நாளாவட்டத்தில் தாங்கொண்டு தமிழ் மக்களுக்குச் 'சூத்திரர்' என்பது ஒரு பட்டம் என வழங்கி ஏமாற்றினர். இவ்வாரியர், ஆரிய நாட்டிலிருந்து வந்த இவ்வாரியர் தம் குழுவிற்குள் அதாவது ஆரியருக்குள் பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரன் எனவிருந்த வகுப்புகளையெல்லாம் தமிழரிடத்தும் ஏற்றி இடையிலிருக்கும் இரண்டையும் ஒழித்த பிராமணன், சூத்திரன் என்ற இரண்டு பட்டங்களையே தமக்கும் தமிழருக்கும் முறையே வைத்து வழங்குவராயினர் தமிழகத்துள்ள கற்றறிந்த அறிஞர்கள் தவிர மற்றவரெல்லாம் அவர் மயக்கிற்களாகி வந்தனர். மற்றும், தமிழருட் சிலர், ஆரியக் கொள்கைப்படியேற்படுத்தப்பட்ட சத்திரிய வகுப்பினர் எனத் தம்மைச் சொல்லிக் கொண்டு பூசலிடுகின்றனர். சிலர், தம்மை வைசியரில் அடக்குவர். சில பகுப்பினர் தம்மைப் பிராமணன் என்னும் பகுப்பில் அடக்கிக்கொள்வர். இம்மூவரையும் அவ்வாரியர் தம் குறும்பின்படி சூத்திரர் எனவே அழைக்கக் காண்கிறோம். தமிழ்நாட்டுக் குடிகளைத் தமிழர் என்பது தவிர வேறு பகுப்பு ஆரியர்போல ஏற்றுக் கொள்ளுதல் சாலாது. பிராமணர், பிராமணரல்லாதார் என எந்த ஆரியன் சொன்னாலும் அவனைத் தக்க விடை சொல்லாதவரையில் சும்மா விடுதல் கூடாது. பிராமணர் என்பவர் வேள்வி செய்தவராயும், வேதமோதியவராயும் நல்லொழுக்கமுடையவராயுமுள்ளவர் என வேதங் கூறுகிறது. அவ்விதச் செயல் இல்லாதவர் சூத்திரர் எனக் காணப்படுகிறது.

பெரும்பாலும் பிராமணன் என்று சொல்லிக் கொள்பவரெல்லாரும் தமிழ் மக்களிடத்தில் ஊழியஞ் செய்து கூலி பெற்றுப் பிழைப்பவரேயாவர். இத்தகையவர் சூத்திரரா? அல்லது உழவு தொழில் செய்து உத்தமமாயொழுகும் வேளாளர் சூத்திரரா? வேதம் ஓதியிருக்கின்றீரா? வேள்வி செய்திருக்கிறீரா? என்பன போன்ற கேள்விகளையெல்லாம் கேட்டு அவர் வாயையடக்குதலே தமிழர் கடனாகும். தமிழரும் நல்லொழுக்க முடையவராகவும், தமிழ்க்கல்வியை நன்கு பயின்றவராகவு மிருந்தால் ஆரியர் தம்முடையசூழ்ச்சியை யடக்கிக்கொண்டு வந்த வழியைப் பார்த்துக்கொண்டு ஓட்டம் பிடிப்பார்கள். இதுவன்றிச் சும்மா தமிழர் படியாமலிருந்து கொண்டு அவரை யடக்குதல் பெருமிதமல்ல. தமிழகத்திலுள்ள தமிழர் யாவரும் தமிழைக்கற்று வல்லவராக முன் வருவார்களாக. தமிழைப் புறக்கணித்தால் தமிழ் நூல்களில் கூறியுள்ள தனித்தமிழரது நாகரீகத்தை யறியமுடியாது பின்னும் ஆரியரால் ஏமாற்றப்படுவோம். தமிழ் மக்கள் யாவரும் தளர்ச்சியின்றித்தமிழ் பயில்வாராக. மற்றும், கம்பர் ஒரு தனித்த தமிழ் வீரன் என்பதையும் நேயர்கள் மனத்தில் வைப்பாராக. தமிழரது நாகரிகத்தை உலகத்தில் நாட்ட வந்த நமது கம்பநாட்டாரும் ஆரியருடைய கதையாகிய இராமாயணத்தையெடுத்துக் கொண்டு அக்கதைத் தலைவனாகிய இராமனைத் தமிழ் இராமனாகவும், சீதையைத் தமிழ் சீதையாகவும், அனுமானைத் தமிழ் அனுமானாகவும் பிற உறுப்பினர் எல்லோரையும் தமிழராகவே வைத்துத் தமிழ் காவியச்சுவையையேற்றி யாவரும்போற்றுமாறு வைத்தனர் இச்சுவையைத் தமிழ் நூல்களை வரன்முறையிற்கற்ற தமிழறிஞர்களின் வாயிலாகக் கேட்டுணரற்பாலது. அன்றி ஆரியர் மூலமாகவுணர்தலால் தமிழ் வீரம்ததும்பாது. இவ்வாறே ஏனைய நூல்களையும் தமிழர் மூலமாக அறிதல்வேண்டும். தமிழரைத் தலையெடுக்கவொட்டாது ஆரியர் செய்யும் பல சூழ்ச்சிகளில் இரண்டொன்று கூறி இக்கட்டுரையை முடிப்பாம்.

ஆறுமுக நாவலரவர்கள் அச்சிட்டுள்ள திருக்குறட் பரிமேலழகருரையில் 110ம் திருக்குறட்கு "எந்நன்றி கொன்றார்க்கும்" என்ற குறளுரையின்கீழ் எடுத்துக்காட்டிய புறநானூற்றுச் செய்யுளில் "குரவர்த்தப்பிய கொடுமையோர்க்கும்" என்ற பாடம் காட்டப்பட்டுள்ளது, புறநானூறு பதிப்பித்த சாமிநாத ஐயரவர்கள் "பார்ப்பார்த்தப்பிய கொடுமையோர்க்கும்" எனத் திருத்திவிட்டதுடன பாடபேதமுங் காட்டாது விட்டனர். பரிமேலழகர் மேற்கண்ட குறளுக்கு விளக்கஞ்செய்யப்புகுந்து "பார்ப்பாரத்தபுதல்" என்று புகுத்திய ஆரியச் சூழ்ச்சியே இவர் திருத்தியதற்கும் காரணமாகும். இதனைக் "குரவர்த்தப்பிய" எனப் பாடங்கொண்டால் பொருட் சிறப்புண்மை அறிஞர்க்குப் புலனாகும். சிந்தாமணி 252 ஆம் பாட்டில் நச்சினார்க்கினியர் குரவராவார் அரசன், உபாத்தியாயன், தாய், தந்தை, தம்முன் என ஐவர் எனக் குறித்தது ஈண்டுப் பொருத்த முடைத்தாகும். அன்றி நிகண்டில் 'ஆரியர்-மிலேச்சர்' என்றிருப்பதை அச்சிட்டவர் திருத்திவிட்டனரென்றும் 'அநாரியர்-மிலேச்சர்' என்றே இருக்கவேண்டுமெனவும் சென்னையில் செய்த ஒரு விரிவுரையில் கூறினதாகப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்தி தமிழர் யாவரும் அறிந்ததொன்றும். இவ்வாறு ஆரியர் தம்மனம் போனவாறு திருத்துதலைத் தமிழர் அறியாமலிருப்பதற்குக் காரணம் தமது தாய்மொழியாகிய தமிழைக் கைவிட்டு அன்னிய மொழியைப் பயின்று தொழில் முயற்சியிலிருந்து காலங் கழிப்பதேயாகும். தமிழரது பணத்தைக் கொள்ளை கொள்ளையாகக் கொண்டு பழந்தமிழ் நூல்களை அச்சிட்டு ஒன்றிற்கொன்பது மடங்கு விலையுடன் நந்தமிழரிடத்திலேயே விற்று மேலும் பொருளீட்டித் தம்மினத்தவராகிய ஆரியரையே பாதுகாத்தலைக்கண்டும் தமிழர் யாவரும் விழியாது தூங்கிக் கொண்டிருத்தல் வருந்தத் தக்கதாகும். கும்பகோணத்தில் பரிசளித்த மேற்படி தம்பிரானும் ஆரியர் மந்திரத்தால் மயங்கித் தமிழ் கற்றுணர்ந்த தமிழ்ப் பெருவீரர்கள் பலபேரிருக்கும்போது கூட அவ்வையரவர்களையே தலைமையாக இருக்கச் செய்தது வியப்பினும் வியப்பே. இத்தகைய ஐயரவர்களுக்குச்சில ஆண்டுகட்கு முன் மதுரைத் தமிழ் சங்கத்தார் பொற்கிழியொன்று வழங்கினர். அவ்வமையத்து இவ்வையரவர்கள் தம்மினும் படித்த பெரியார் பலரிருக்கின்றனரெனச் சுட்டி ஆறேழு ஆரியர் பெயரையே கூறினர் இவ்வாறு கூறியதன் கருத்து பிறகு வழங்கும் பொற்கிழிகளையும் அவ்வாரியருக்கே கொடுக்கவேண்டுமென்பதேயாகும். நிற்க, மதுரைத் தமிழ் சங்கத்திலிருந்து பதவிபெற்றவர் யாவரும் ஆரியரேயாவார். இவரால் தமிழ் வளருமா? பொற்கிழிக்குதவியவர்யாவரும்நமது தமிழ் மக்களேயாவர். ஆரியர் காசு அதில் அரைக் காசேனுமுண்டா?

மற்றும், சில வருடங்களுக்குமுன் காலஞ்சென்ற தமிழறிஞரொருவராகிய அரசஞ் சண்முகனாரைப் பாண்டித்துரைத்தேவரவர்கள் அச்சங்கத்துத் தலைவராக விருத்துதற்குஆலோசித்த போது திரு.நாராயணையங்கார், ரா. ராகவையங்கார், மு.ராகவையங்கார், சுந்தரேசையர் முதலிய ஆரியர் குழுவினரிற் பல கூடி அவரைப்பற்றிய சில பொய்மொழிகளைக்கூறிப் பாண்டித்துரையை நம்பும்படி செய்து சண்முகனாராக்கத்தைக்குழித்தனர். கொல்லவும் வழி தேடினர். கொன்றும் விட்டனர். அந்தோ பரிதாபம்! மயூரகிரிக் கோவையை அச்சிட்டுப் பரிசித்த சர்க்கரைப் புலவரவர்கள் பாண்டித்துரையிடம் சென்றிருந்த போது ரூபாய் ஒரு நூற்றுக்கு மேல் தரப் பொக்கிஷதாரரிடம் உத்தரவிடப் பக்கத்திலிருந்த நமது திரு.நாராயணையங்காரவர்கள் தொகைக்காக அவர்கள் வரவில்லையெனக் கூறிக் கொடாமற் றடுத்த செய்தியும் குறிப்பிடத்தக்கதாகும். மற்றும் சேற்றூர் சுப்பிரமணியக் கவிராயரவர்களைப் பாண்டித்துரையவர்கள் தமிழ் சங்கத்தில் வைசனூற் பரிசோதகராக நியமித்தபோது அவர்கள் வேலை ஒப்புக்கொள்ளும் சமயத்தில் ஓய்! நீர் யார்? உமக்கு இங்கு வேலையில்லையென, அவ்வமயம் அங்கு வேலைபார்த்துவந்த நமது ரா. ராகவையங்காரவர்கள் சிறியதைக் கூறக்கேட்ட துரையவர்கள் கடுஞ்சினங்கொண்டு தனித்தமிழ் வீரர்களாகிய சேதுபதியன்னத்தைத் தின்றுகொண்டே எங்களுக்குத் தீங்கிழைத்தனையேயென இன்னோரன்ன பல சீற்றப் பேச்சுக்களுக்காளாயினரென்பதும் தமிழர் பலருக்கும் தெரியும். தமிழ் சங்கத்தில் வேலையிலிருந்த இன்னுஞ் சிலரைப் பொறுமை காரணமாக இவ்வாரியர்கள் அகற்றிய சூழ்ச்சியும் அறியத்தக்கதாகும். சிறுவேலை முதல் பெரிய வேலைவரையிலுள்ள எல்லாவற்றிலும் இவ்வாரியர் மானமிழந்த பல செய்கைகளால் உபகரித்துப் பெரிதும் பயனெய்தி வருவதுடன் தமிழருக்கே பெரிதும் இன்னல் விளைவித்து வருகின்றனர். இவ்வாறு உள்ளூறு செய்தவரும் ஆரியர்களுக்கேதமிழ்ச்செல்வர்கள் பலவழியிலும் 'பாம்புக்குப் பால் வார்ப்பது' போல நன்மை பல செய்வதும் விடமூறுவது போல இவர்கட்குக் கெட்ட எண்ணங்களே விருத்தியாகின்றன. பாம்பு என்பதன் வலித்தல் விகாரமன்றோ இப் 'பாப்பு' என்னும் சாதிப் பெயர்.

இப்பாம்புகளின் விடத்தால் மூர்ச்சித்துள்ள நமது காசிமடத் தலைவரவர்கள் இக்கட்டுரையாகிய மந்திரத்தால் விடந்தெளிந்தெழுந்து சாமிநாதையரவர்கள் சூழ்ச்சியால் இவ்வருஷத்தில் தேறிய சுப்பிரமணிய ஐயருக்குக் கொடுத்த பரிசைபோல் சென்ற வருடத்தில் முதல் முதல் தேறிய முதல் மாணவர்களாகியுள்ள வித்வ சிங்கங்களாகிய சீகாழி அருணாசல தேசிகரவர்களுக்கும், சிதம்பரம் தண்டபாணி தேசிகரவர்களுக்கும் முறையே தனித்தனி ஆயிரம் ரூபாய் பரிசளித்து தமது மறச்செய்கையை அறச்செய்கையாக்குவிக்குமாறு இதனால் நன்கு அறிவிக்கப்படுகிறது. தமிழருக்கு வேண்டும் கடமைகளையெல்லாம இனியாவது அறிஞர்களாயுள்ள தனித்த தமிழருடனிருந்து ஆராய்ந்து செய்வார்களாக. தமிழரது செல்வம் அறநெறியால் ஈட்டப்பட்டதேயாகலின் தமிழருக்கேபயன் படுமாறு செய்க. இவ்விருவருக்கும் பரிசளிக்கும் காலத்தைத் தமிழ் மக்களனைவரும் வெகு விரைவில் எதிர்பார்த்திருக்கிறார்கள். தனித்த தமிழ் சிங்கவேறுகளாகிய தமிழர் தலைமையின் கீழேயே அப்பரிசுகளை வழங்குக.

சாமிநாதையரவர்களும் இப்பொழுது தமது தேகம் தனித்த தமிழரது

(தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அறிஞர் ஆழ்ந்து சிந்திப்பாராக! பின்னர் சுக்கிரீவன் அங்கதனை எதிர் கொண்டழைத்துவா லவி தான் வாச லண்டையில் நின்றான் எனவும், அங்கதன் இலக்குவனை அழைத்துப்போ கிறானென்றும் அவர் புது வரலாறே புனைந்தனர். சுக்கிரீவன் காட்டிய அரியணையில் ஏறாமல் இலக்குவன் தரையிலிருந்தனனென்றும், பின்னர் இராமனிடம் போகும்போதும் நடந்து சென்றனனென்றும்வால்மீகி கூற்றுக்குமாறாகக் கம்பர் கூறினர். சேனைகள் வந்தபின் இலக்குவன் வேண்ட சுக்கிரீவன் இராமனைக் கண்டனனெனவால்மீகி கூறக் கம்பர் இலக்குவனைக் கண்டவுடனே சுக்கிரீவன் அனுமானைப் படைதிரட்ட இருத்தி இராமனைச் சென்று கண்டனன் எனக் கூறுகிறார். இனி மேற்செல்லுதும்.


திருப்பூர் பனியன்கள்


முதல்தரம் கார்டிக்ன் 32 இஞ்ச டஜன் 1-க்கு 6-8-0. வேண்டியவர்கள் உடனே ஆர்டர் செய்யவும்.

The General Knitting Factory,
TIRUPUR

(6)

முந்துங்கள் ! முந்துங்கள்!!

விலை ரூபா 2—12—0 தான்



130 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி

சாமான்கள் விவரம்.

14 காரட் ரோல்டுகோல்டு அழகிய நிப்புள்ள பவுண்டன் பேனா; ரோல்டுகோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; ஷை ஷர்ட்டு பொத்தான்கள் செட் 12; ஷை கல்லிழைத்த புரூச் 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6; நேர்த்தியான முகம் பார்க்கும் கண்ணாடி 1, அழகிய தந்தச் சீப்பு 1, நேர்த்தியான கத்தி 1; காமிரேஷன் நூதனசாவி விளையாடும் செயின் 1; உயர்ந்த பென்சல்கள் 12; பென்சல் ஊசிப்புடன் கூடிய கவர் 1; பலரக பென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த நிப்புகள் 12; மணிபார்ஸ் 1; ஜெர்மன் இங்கிபுட்டி 1; இங்கி மாத்திரைகள் 12; செண்ட் புட்டி 1; தேசிய டிரான்ஸ்பர் படங்கள் 34; அழகிய பலரக சேப்டி பின்கள் 24; ஆக 130 சாமான்கள் அடங்கிய ஜெர்மன்பெட்டி 1-க்கு 2-12-0.

கி. கிருஷ்ணா ஏஜன்ஸி,
தபால்பெட்டி 119, மதராஸ்.

(3)

# மலஹரி

மலச்சிக்கலுக்கு வெறும் மூலிகைகளினாலேயே செய்யப்பட்ட அருமையான இனிய குளிகைகள். மலம் குடலில் சிக்கிக்கொண்டு நாளளவில் உயிருக்கு உயிரான இரத்தத்தைக் கெடுத்து தலைவலி, இடுப்புவலி, கைகால் சோர்தல், அஜீர்ணம், அன்னத்துவேஷம், வாதம், சூலை முதலிய நோய்களை உண்டாக்குகிறது. இந்த குளிகையை 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஷை வியாதிகள் ஒழிந்து தேகபுஷ்டி, வலிமை, உற்சாகம், சுறுசுறுப்பு, முகதேஜஸ், உண்டாகும். நித்தம் சுகமாக மலசுத்தி ஆகும். முதல்நாளே குணமறியலாம்.

30 குளிகைகள் விலை ரூபாய் 1-0-0.

4 அணா ஸ்டாம்புகள் அனுப்பினால் மாதிரிக்குளிகைகள் அனுப்பப்படும்.

ரஸ்மக்

முகப்பருக்களுக்கு ஆச்சரியமான மருந்து டப்பி 1 அணா 12. வி. பி. சார்ஜ் வேறு.

ஏஜெண்டுகள் தேவை:—

தேஷஹூன் கம்பெனி,
(வேலூர், வட ஆற்காடு.)

நான் யார் தெரியுமா?

ஒரு வருஷத்திற்குள் 8000 பிள்ளைகளைப் பெற்றவன் நான்!



என்னைப்பற்றி எந்த ஊரிலே வேண்டுமானாலும் கேளுங்கள். எங்கப்பன் மாதா மாதம் வந்து எங்களைக் குதூஹலப்படுத்தி விட்டுப் போகிறானென்று பெருமையோடு சொல்லிக் கொள்வார்கள். தினசரி முப்பது அல்லது நாற்பது புதிய பிள்ளைகளைப் பெற்று வருகிறேன். இன்னும் சலிக்காமல் இருக்கிறேன். குறைந்த பட்சம் 30,000 பிள்ளைகளையாவது பெற வேண்டுமென்பது நோக்கம். ஆனால், அப்பனைப் பார்க்கவேண்டுமானால் காசு கொடுத்துத்தான் பார்க்கவேண்டும். வருஷா வருஷம் 1 ரூபாய் கொடுத்தால் என்னை வருஷத்திற்குப் பன்னிரண்டு முறை பார்க்கலாம். ஒரு தடவை மாதிரியாகப் பார்க்கவேண்டுமானால் அரையணா செலவு செய்து ஒரு கார்டு எழுதுங்கள். மறுநாளே உங்கள் இருப்பிடம் தேடி வந்து குதித்திடுவேன். என் பெயர் படத்தில் பாருங்கள். என் இருப்பிடம்,

(3) 244, தங்கசாலை வீதி, சென்னை.

குடி அரசு புத்தகாலயம்

| | |
|---|---|
| வேதப்புரட்டை வெளியாக்கும் ஞானசூரியன் 2-ம் பதிப்பு ... | 0—8—0 |
| இராமாயணத்தின் ஆபாசம் பாலகாண்டம் | 0—4—0 |
| சுயமரியாதைப் பாடல்கள். ... | 0—2—0 |
| இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. ... | 0—2—0 |
| சுயமரியாதைத் தாலாட்டு ... | 0—2—0 |
| சோதிடப்புரட்டு ... | 0—2—0 |
| சாமிகளின் அடிமைகள் ... | 0-12-0 |

விலாசம்:—

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
(எப்) 14, மவுண்ட்ரோட், மதராஸ்.

வலியுள்ளவர்கள்!

சீக்கிரம் குணந்தரும் மருந்துக்கு ஆசைப்படுவார்கள்
அதுதான்

தேகரக்ஷாமிர்தம்

தீரும் வியாதிகள்

| | | |
|---|---|---|
| தலைவலி | வீக்கம் | வண்டு கடி |
| பிடரிவலி | சுரம் | தேள் கடி |
| முதுகுவலி | சளி | மேக ஊரல் |
| இடுப்புவலி | இருமல் | தேமல் |
| குடைச்சல் | மூக்கடைப்பு | வெட்டுக்காயம் |
| கை கால் பிடிப்பு | மார்சளி | பல்வலி |
| நெஞ்சடைப்பு | ஜன்னி | செவி நோய் |

நிமிடத்தில் குணப்படுத்த ஒரு தனி அமிர்தம் போதுமானது.
ஒருமுறை பரிக்ஷிக்கவும்.

புட்டி 1க்கு விலை ரூ. 1—8—0 (தபால் செலவு வேறு)

நல்ல கமிஷன்; ஏஜண்டுகள் தேவை:—

தேகரக்ஷாமிர்தம் கம்பெனி,
(54) அம்மாபேட்டை, சேலம். (தென் இந்தியா.)


சாதிப் பிரிவினில்
தீ மூட்டுவோம்

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தென்றும் அறிவாளிகளாலும் சொல்லப்படுகிறது.

புத்த பகவான் கடவுளைக் கண்டுபிடிக்க தன் சிஷ்யர்களுக்குச்சொல்லவில்லை. கடவுள் உண்டென்றும் இல்லையென்றும் அவர் சொன்னதாக அவர் சிஷ்யர்கள் சொல்லவுமில்லை. தர்மத்தையும், ஒழுக்கத்தையும் சமபாவனையோடு அடைந்தால் எல்லாமடையலா மென்றார். வேதாந்த மதமும் அதையேசொல்லுகிறது. சைவ லக்ஷணவத்தின் உள் நிலையும் அதுவே. சுயமரியாதைக் கொள்கைகளும் அதன் பீடத்தினின்றே புறப்பட்டிருக்கிறது. சீனாவும், ஜப்பானும், லங்கையும் லோக குருவாகிய புத்தரது உபதேசங்களை ஒட்டி ஒழுகுவதனால் இந்தியாவானது புத்தரை ஈசுவராவதாரமென மதித்துப் பூசிக்கிறது என்றும், பௌத்தமதம் தனது சிறந்த கொள்கைகளால் இந்துதேசத்தாரை எவ்வளவு மேன்மையான நிலைக்குக் கொண்டுவந்துவிட்டதென்பதை அக்காலத்திய இந்தியாவின் சரித்திரத்தை எழுதிய ஒரு கிரீஸ் வித்வான்—இந்துவாயுள்ள எவனும் பொய் சொன்னதில்லை; இந்து ஸ்திரீயாயுள்ளவள் எவளும் கற்புநிலை தவறினதில்லை என்றும் எழுதியிருப்பதிலிருந்து புத்தருடைய பெருமையை அறியலாமென்றும், அமெரிக்காவில் சுவாமி விவேகாநந்தர் சொன்னார். அந்த புத்தர், யாகங்களையும், மூடவழக்கங்களையும் கண்டனம் சொன்னதினால் அதை நாஸ்திகமென்று சொல்லி அதை நமது நாட்டில் நிலைபெறாமல் செய்துவிட்டார்கள்.

ஜைனர்களுடைய பிரதான கடவுளுக்கு அருகக் கடவுளென்றும், தன்னைப்போலவே வேதம், உலகம், காலம், உயிர்கள், கர்மம் இவைகள் என்றைக்கும் அனாதியாக வருகின்றனவென்றும்; அவர்கள் கடவுள் ஆதியந்த மற்றவர் என்றும் அவர்கள் மதம் சொல்லுகிறது. அவ்விதமே நம் மத தத்துவங்களும் சொல்லுகின்றன. ஆனால், அவர்கள் வேள்வியையும், உயிர், பலியையும் கண்டித்ததினால் அவர்களைப்பாவிகளென்றும், சண்டாளர்களென்றும் நிந்தித்துக் கழுவில் போட்டார்கள்.

அந்தக் காலத்தில் மதியீன ராஜாக்களும், மூடக்கொள்கையுடையமந்திரிகளுமிருந்ததினால் ஒரு ஓலை ஆற்றில் நீந்தினதாகச் சொல்லி அநேகரைக் கொன்றார்கள். இந்தக் காலத்தில் தண்டத்திலேயே எல்லா சாதனங்களுடன் மனிதன் நீந்துகிறான். சமூக அபிவிர்த்திக்குத் தொடர்ச்சியாக சட்டமுமிருக்கிறது. கால சக்தியின் துதாகபிரிட்டிஷ்ஜாதி இந்தியாவிற்கு வந்திருக்கிறது. கல்வியோ பரவுகிறது. சுதந்திரமோ எல்லோரும் விரும்புகிறார்கள். அப்படியிருக்க சுயமரியாதையை நாஸ்திகமாக்கவுமாகாது; அதை நசுக்கவும் மாளாது.

## "பாபுலர் எலெக்டிரிக் கைவிளக்கு"

(எந்த சமயத்திலும், சைகிளுக்கும் உபயோகிக்கக் கூடியது)



உயர்ந்த பவருள்ள பாட்டெரியுடனும், அழுத்தமான பூதக் கண்ணாடியுடனும் உயர்ந்த மாதிரியிலுள்ளது. வெகு தூரத்திற்குப் பிரகாசத்தைக் கொடுப்பதாயும், வெகு நாளுழைக்கக் கூடியதாயும், பளிச்சென்ற பிரகாசமும் கொடுப்பதாயுமுள்ளது. கையிலெடுத்துப் போக மிக சௌகரியம். நீங்களும் ஒன்று வைத்துக் கொள்ளுங்கள்.

விலை ரூ. 3—0—0 தான்.

வி. பி. தனி.

லக்ஷ்மி ட்ரேட்ஸ் கம்பெனி.

173. தங்கசாலை, மதராஸ்.

## ஆனந்தபோதினி

இனிய தமிழில் வெளிவரும் மாதப் பத்திரிகை; தமிழ் நாட்டில் வெளிவரும் மாதச் சஞ்சிகைகளில் முதன்மை பெற்றது; 20,000 சந்தாதாரர்களையுடையது; கல்வியிற் சிறந்தோர் பலரால் எழுதப்பட்டு வரும் உயர்ந்த வியாசங்களைக் கொண்டு வெளிவருவது; எம்மதத்தார்க்கும் சம்மதமான பொது நன்மைகளைப் போதிப்பது; 64-பக்கங்கொண்டது; முகப்பு ஆப்டோன் படத்துடனும், லயன் பிளாக்குகளுடனும் மாதந்தோறும் குறித்த தேதி தவறாமல் வெளியாகிப் பலர்க்கும் ஆனந்தத்தை யூட்டி வருவது; மிகக் குறைந்த சந்தாத் தொகையுள்ளது.

மாதிரி காபி இனாம்.

வருட சந்தா தபால்கூலி யுள்பட

| | | |
|---|---|---|
| உள்நாடுகளுக்கு | ரூபா | 1—0—0 |
| வெளிநாடுகளுக்கு | ,, | 1—4—0 |

ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

(5)

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

பெருஞ் சோற்றால் வளர்ந்ததென்பதையும, வந்த பெருவாழ்வெல்லாம் தமிழ்ப் பெருமக்களாலேயே யென்பதையும் சிறிது தனித்திருந்து சிந்தனைக்குக் கொணர்ந்து உடனே புறப்பட்டுத் திருப்பனந்தாட்கு வந்து முன்னிலும் பல மந்திரங்களைக்கூறி அறிவுறுத்தி மேலே கண்ட இரண்டு தமிழருக்கும் பரிசு வாங்கித் தரும் தமது கடமையில் சிறிதும் சோர்விலராய் வாங்கித்தந்து தமது ஆரியச் சூழ்ச்சியினின்றும் விலகிய முறையைத் தமிழுலகம் ஏற்குமாறு உண்மையாகச் செய்வார்களாக?

ரூ. 2-5-10 ரூ. 2-15-0

## பௌண்டன் பேனா

நீங்கள் கனவிலும் நினைக்கமுடியாத குறைந்த விலை!

இங்கிலாந்தில் செய்து மாக்ஷிமை தங்கிய 5-ம் ஜார்ஜ் சக்கரவர்த்தியால் புகழப்பெற்றுப் பிரக்யாதியடைந்த ரிஜிஸ்டர்டு W. B. பவுண்டன் பேனா, தங்கப்ளேட் நிப்பு போட்டது. இதை வாங்குபவர்களுக்கு எக்காலமும் ஓடக்கூடிய மூன்று வருஷம் உத்தரவாதமுள்ள லீவர் பாக்கெட் வாட்சு இனாமாய் அனுப்பப்படும். சென்னை இராஜதானியில் இந்தப் பவுண்டன் பேனாவைப் பிரபலப்படுத்துவதற்காக லீவர் பாக்கெட் வாட்சுகளை ஏராளமாகத் தருவித்து ஒவ்வொருவருக்கும் இனாமாக அனுப்பிக்கொண்டு வருகிறோம். ஸ்கூல் உபாத்தியாயர்கள், வக்கீல்கள், வக்கீல் குமாஸ்தாக்கள், இன்னும் ஏனைய உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் எழுதப்பேனாவும், மணி பார்க்கக் கடியாரமும் இந்த சொற்ப விலையில் கிடைக்கிறது ஆச்சரியமல்லவா?



W. B. பவுண்டன் பென் விலை ரூ. 2-15-0. இதற்கு மேற்சொல்லிய பாக்கெட் வாட்சு இனாம். ஒரே காலத்தில் இரண்டு பேனாக்களுக்கு ஆர்டர் கொடுத்தால், பாக்கெட் வாட்சுக்குப் பதிலாக ரோல்டு கோல்டு ரிஸ்டு வாட்சு எந்த ஷேப் வேண்டுமோ இனாம்.

முக்கிய குறிப்பு:—எங்களிடமிருந்து ¼ டஜன், ½ டஜன் இப்படிப் பவுண்டன் பேனாக்களைத் தருவித்துப் பிறகு, பேனாக்களையும், கடியாரங்களையும் தனித்தனியாக அதிக விலைக்கு விற்று லாபம் சம்பாதிக்கவும் வழியுள்ள இத்தருணத்தைக் கைவிடாதீர்கள்.

(30) The Laxmi Trades Co., Sowcarpet, Madras.

## நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

(1919-ல் பம்பாயில் ஸ்தாபிக்கப்பட்டது)

சேர்மன்: —

### சர்: டோராப் ஜே. டாட்டா Kt.

மூலதனம்:

| | | |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட மூலதனம் | ... ரூ. | 6,00,00,000. |
| பதிவு செய்யப்பெற்ற ,, | ... ரூ. | 3,56,05,275. |
| வசூலான ,, | ... ரூ. | 71,21,055. |

இதைப்பற்றி 1929 ஜுன் மாதம் வெளிவந்த "இந்தியன் இன்ஷியூரன்ஸ்" பத்திரிகை பின் வருமாறு கூறுகிறது: —"நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி இந்தியாவிலே மிகவும் பெரிய ஜெனரல் இன்ஷியூரன்ஸ் கம்பெனியென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. மூலதனத்தைக் கவனித்தால் அது உலகத்திலுள்ள பெரிய இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளில் ஒன்றென்று கூறிக்கொள்ள அதற்கு உரிமையுண்டு."

ஏஜெண்டுகள் இல்லாத இடங்களில் உயிர், நெருப்பு, மேரைன், மோட்டார்கார், விபத்து முதலிய பலவித அஷ்யூரன்ஸ்களுக்கும் ஏஜென்சிகள் கிடைக்கும்.

பிராஞ்சு மானேஜர்,
4, முதல் லைன்பீச், சென்னை.

(28)

ஜனங்களுக்குச் சந்தோஷத்தைத் தரும்

# ஜனோபகாரி தைலம்.

இத்தைலமானது 27 வகை வன மூலிகைகளால் செய்யப்பட்டது. அநேக நற்சாட்சிகள் பெற்றது.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"

நல்ல குளிர்ந்த வாசனையுள்ள தைலம்.

இத்தைலத்தால் தீரும் வியாதிகள்:—தீராத தலைக்கனம், ஓயாத மண்டையிடி, ஒருதலைக்குத்து, தலையரிப்பு, முடிகழிதல் இவைகளை நீக்கிக் கூந்தலை வளரச்செய்யும் காதிரைச்சல், காதடைப்பு, குத்தல், கண்வலி, எரிவு, கூச்சம், நீர்வடிதல், சிகப்பு விழுதல், நாசியிலிருந்து மஞ்சள்நிறத் தண்ணீர் வடிதல், ஓயாத் தும்மல், சிராபோல் விழுதல், வாய்க்கசப்பு, புளிப்பு, தூர்க்கந்த மடித்தல் முதலிய வியாதிகள் நீங்கி தேகத்திற்குச்சுகம்உண்டாகும். கண்டத்துக்குமேல் ஏற்படக்கூடிய 96 வியாதிகளும் தீரும்.

பெரிய டின் ரூ. 1—12—0 }
சிறிய டின் ரூ. 1—0—0 } தபால் சார்ஜ் வேறு.

# பார்சவாய்வு மருந்து.

விதை வாய்வு, நரம்புத்தடிப்பு, வலி, வீக்கம் முதலிய விதை சம்மந்தமான சகல வியாதிகளுக்கும் இந்த மருந்தை உபயோகியுங்கள். பத்தியம் கிடையாது. பெண்கள் அண்டவாய்வுக்கும் உபயோகிக்கலாம்.

14 வேளை மருந்து ரூபா 1—0—0. தபால் சார்ஜ் வேறு.

சிங்கப்பூர், பினாங்கு முதலிய வெளிநாட்டு நேயர்கள் வி. பி. செலவு சேர்த்து முன்பணம் அனுப்பவேண்டும். நீங்கள் கடிதம் எழுதும்போது தெளிவாய்அச்செழுத்தைப்போல இங்கிலீஷிலோ, தமிழிலோ எழுதவேண்டும் சோல் ஏஜண்டுகள் தேவை விவரம் நேரில் எழுதி தெரிந்துகொள்ளவும்.

உ. கா. நாகூர்மீரா அன் பிரதர்,
7-வது தெரு, ஏர்வாடி போஸ்டு,
திருநெல்வேலி ஜில்லா (தென்னிந்தியா.)

(41)



# கைத்தொழில் முறைகள்

திருத்தப்பட்ட இரண்டாம் பதிப்பு

மாதம் 100 ரூபாய் முதல் 500 ரூபாய் வரை சம்பாதிக்கத்தக்க அரிய போதனைகள் அடங்கியது.

முதற்பதிப்பு வெளியான மூன்று மாதத்திலேயே செலவழிந்து விட்டது. ஆயிரத்துக்கு மேற்கொண்ட இரகசிய முறைகளடங்கியது. கூந்தல் தைலங்கள், பாணவேடிக்கை மருந்துகள், இங்கி முறைகள், சோப்புகள், நாற்கால் பிராணிகளுக்குள்ள சிகிச்சைகள், ஜான் டானிக் பஸ்பங்கள், விஷக்கடிகளுக்குச் சிகிச்சை, வார்னிஷ்கள், பென்சில்கள், தீக்குச்சிகள், மெழுகுவர்த்திகள் இன்னும் பலவிதமுறைகளுடனும், இப்பதிப்பில் புதிதாக அதிர்ஷ்ட நாட்கள், வாரங்கள், மாதங்கள், வருடங்கள், மேல்நாட்டுச் சகுனங்கள், வீடுகட்டு முறையும் விரிவாய் குறிப்பிட்டிருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டமுள்ள இக்காலத்தில் ஒவ்வொரு இந்திய மக்களிடமும் இந்நூல் இருக்கவேண்டிய தவசியம். 300 பக்கங்கொண்ட எரோப்பிளேன் டிரேட் மார்க் உள்ளது, தனிப்பிரதி ரூபா 1—8—0 தான். தபால்செலவு அணா 5. உள்நாட்டிலிருந்து ஒரே தடவையில் 2 பிரதிகளுக்கு ஆர்டர் செய்வோருக்கு தபாற் செலவு இனாம்.

| | | | |
|---|---|---|---|
| இல்வாழ்க்கையின் இரகசியங்கள் ரூ. | 2 | 0 | 0 |
| கர்ப்பாட்சி அல்லது சுவாதீன கர்ப்பம் | 0 | 8 | 0 |
| ஸ்ரீவீரராகவர் கனகவல்லியின் மணக்கோலம் | 0 | 8 | 0 |
| மாயாமேனியா அல்லது மேனோவுக்கு சவுக்கடி | 2 | 0 | 0 |
| முத்தமாமா 4-ம் பதிப்பு | 0 | 4 | 0 |
| விகடவினோத கொத்துகள் | 0 | 10 | 0 |
| காலத்தின் கோலம் | 0 | 4 | 0 |
| ஆனந்தவிகடன் அநுபந்தம் | 0 | 4 | 0 |

வில்லிபாரத வசனம் அல்லது மகாபாரத வசன சங்கிரகம் 750 பக்கங்கள் கிளேஸ் காகிதத்தில் அச்சடிக்கப்பட்டு கண்ணைக் கவரத்தக்க ஆப்டோன் படங்கள் கலிகோ பயிண்டுடன் கூடியது. இதன் விலை ரூ. 3 0 0.

வாலை புஸ்தகசாலை, 244 தங்கசாலைவீதி, மதராஸ்.



பார்க்கப் பவுன் மோதிரம் தோற்கும்படியான
ஜ்வலிப்புள்ள அற்புத

# எலெக்டிரிக் மோதிரம்

அமெரிக்கா தேசத்தில் ஓர் மின்சார நிபுணரால் இப்பொழுது நூதனமாய்க் கண்டு பிடிக்கப்பெற்றது !



இம்மோதிரத்தை பாலர் முதல் விருத்தர்வரை ஆண் பெண் இருதாரத்தார்களும் உபயோகப்படுத்தலாம். இம்மோதிரத்திற்குள்ளிருக்கும் எலக்டிரிக் பவர் குறையாமல் எக்காலமும் நீடித்திருக்கும். தாங்கள் நோய்வராமல் தடுத்துக் கொள்வதற்கும், இருக்கும் நோயை குணப்படுத்திக் கொள்வதற்கும் இம்மோதிரத்தை உபயோகியுங்கள் !

இம்மோதிரமானது 8-வித லோகங்களைக் கொண்டு வெகு அழகாகவும், பார்வையாகவும் செய்யப்பெற்றிருக்கின்றது. இதை விரலில் போட்ட மாத்திரத்தில் அதினின்றும் எலெக்டிரிக் பவர் மின்சார சக்தி வெளியாகி விரல் மூலம் அது தேகமெங்கும் பரவி பலத்தைக் கொடுப்பதோடு காய்ச்சல், வாந்திபேதி, தொத்து வியாதிகள், வைசூரி, இன்புளூவன்சா, க்ஷயம், குஷ்டம், பிளேக், தலைவலி, அஜீர்ணம், மூலம், அன்னத்துவேஷம், மலச்சிக்கல், வாதம் சூலை வெட்டை முதலிய ஸ்திரீ கொரோமான வியாதிகள் எதுவுமே அணுகாது. நற்சாட்சிப் பத்திரங்கள் பிரதிதினமும் வந்துகொண்டிருக்கின்றன.

மோதிரம் 1-க்கு விலை ரூபா 1 8 0
மோதிரம் 3-க்கு விலை ரூபா 3 12 0

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
தபால் பெட்டி 119, மதராஸ்.

(3)



சென்னை அரசாங்க சுகாதார மந்திரி அவர்களாலும்,
அநேக ஜமீன்தாரர், பிரபுக்கள், ஜட்ஜுகள், வக்கீல்கள்,
டாக்டர்களாலும் தங்க மெடல்களும் நற்சாக்ஷிகளும் பெற்ற
தண்டபாணி வைத்தியசாலையின் மருந்துகள்.

## அமிர்தம்

குடலைப்பற்றிய எல்லா வியாதிகளையும்போக்கும். அன்றாடம் மலப் பிரவர்த்தியைக் கிரமமாய் வெளிப்படுத்தி மூலாதார உஷ்ணம், மூல வியாதிகள் முதலிய எல்லா வியாதிகளையும் போக்கும். 1 சேர் டின் ரூ. 2.

## பிரமேக நிவாரணி

எவ்வளவு காலம் நீடித்த வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு வியாதிகளையும் உடனே குணப்படுத்தக் கூடியது.

மருந்து புட்டி 1-க்கு ரூ. 2-4-0

## அமிர்தரசம்

சகல நோய்களுக்கும், வலிகளுக்கும், உள்ளுக்கும், மேலுக்கும் உபயோகிக்கக் கூடியது. தனிக் கணக்கில் உபயோகிக்க மணிக்கணக்கில் சுகம்பெறலாம்.

புட்டி 1-க்கு ரூ. 1—8—0.

## மகாமன்மத சிந்தாமணி லேகியம்

அபாரமான தாதுபுஷ்டியும், ஜீரண சக்தியும், புத்திக் கூர்மையும், பரமானந்த சுருசுருப்பும், ஞாபக சக்தியும் கொடுக்க கூடியது.

முதல்கெம்பர் 1-சேர்டின் ரூ 3.

[வி. பி. வேறு.] அந்நிய நாட்டார் தபால் செலவு உள்பட முன்பணம் அனுப்ப வேண்டியது. விவரமான பெரிய காட்லாக் இனாமாய் அனுப்பப்படும்.

போலி டாக்டர்களிடம், போலி மருந்துகளை வாங்கி ஏமாந்து போகாமல் இருக்கும்படி பொது ஜனங்களை எச்சரிக்கின்றோம்.

தண்டபாணி வைத்தியசாலை,
தபால் பெட்டி 292, சைனாபஜார், மதராஸ்

## Beauty For Ladies !
## பெண்களுக்கு

அழகான புடவை! உயர்ந்த மல்லில் பச்சை, பழுப்பு, வயலெட், கருப்பு, செம்பு, ஆரஞ்சி, ரோஸ், ஸ்லேட் கலர்கள். கரைகளும் முந்திகளும் பூவேலையினாலுள்ள நூதனமான புடவை.

18 முழம் × 2½ அகலம் ரூ. 4- 6
15 முழம் × 2½ அகலம் ரூ. 3-12

The Madura Oriental Trading Co.,
Laxmi, Cloth Store, MADURA.
(34)



## எங்கு சரசமான விலை? நயம் சரக்கு?

அயல் நாட்டிலிருந்து இறக்குமதி செய்து விற்பதற்கு சரியான பெங்கால், கலர், ஸில்வர், பேக்சன்கள், மாவிச்வயர் முதலியவைகள் வியாபாரிகளிடம் தேவையானது கிடைக்கும்.

காரியஸ்தர், தீப்பெட்டிகம்பெனி,
(37) பாலக்காடு, (தென்மலபார்.)



## குமரன்

காரைக்குடி தனவணிக நாட்டில் பிராமணரல்லாதார் முன்னேற்றத்துக்காக உழைக்கும் சிறந்த செந்தமிழ்ப்பத்திரிகை,

அடிமை வாழ்வைப் போக்கிக் குருட்டு நம்பிக்கையை நீக்கி, அறிவுச் சுடர் கொளுத்தும், கட்டுரைகளைத் தாங்கி வெளிவருகின்றது.

வருடச் சந்தா விவரம்:—
வாரப்பதிப்பு ரூ. 5—0—0
மாதப்பதிப்பு ரூ. 1—8—0
மானேஜர் குமரன், காரைக்குடி.
(எப)



## முன்னேற்றம்

இது

சுயமரியாதைக் கொள்கையை ஆயுதமாகக் கொண்டு சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் ஒரு தமிழ் வாரப பத்திரிகை.

இதன் ஆசிரியர்-வே.சி.நாராயணசாமி
இதன் சந்தா ரூ. 4-0-0 அல்லது
$ 2—25

விலாசம்:—மானேஜர்,
''முன்னேற்றம்'
(எப்) 155, ஸிலிரோட், சிங்கப்பூர்




## திருப்பூர் ஜவுளி தினுசுகள்

- அழகான பலரகம் அச்சுவேஷ்டிகள், சல்லை ரகங்கள், துண்டு மடிகள், ஷர்ட்டிங் பீஸ்கள் மிக நயமானதாகவே தயார் செய்யப்படுகிறது. வேண்டியவர்கள் நேரே எங்கட்கு ஆர்டர் செய்யவும். விலை விவரஜாபிதாவுக்கு எழுதுங்கள்.

M. V. Karuppanna Chettiar,
Khaddar Merchant
Tirupur, (S. India).,
(6)





இதுவரையில் தமிழில் வெளிவராத
"மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும்"
அதன்
"அநுபோகப் பயிற்சிமுறையும்"
(ஆப்டோன் படங்களுடன்)

(தபால் சார்ஜ் வேறு) விலை ரூபா 1—8—0

சிலோன், பினாங்கு, மலாக்கா முதலிய வெளிநாட்டு ஆர்டர்களுக்கு முன் பணம் அனுப்பவேண்டும். ஏஜெண்டுகளும் தேவை. மற்ற விவரங்களுக்கு எழுதவும்.

---

### மோட்டார் பாடசாலை

(1916-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது)


மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக்கொள்ளலாம்

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்ன்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக் கொடுக்கப்படும். மற்ற விவரத்திற்கு எழுதவும்.

தென் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,
(11) மைலாப்பூர், சென்னை.



## A GOLD PLATED *LEVER* WRIST WATCH FOR. Rs. 6—14—0.



எங்கள் ரிஜிஸ்டர்டு ரோல்டு கோல்டு "பிடோ" லீவர் கைக்கடியாரம் பார்வைக்கு அழகாயிருக்கும், சரியான டைம் காட்டும். ஸிலிண்டர் கடியாரங்களைப்போல் கொஞ்ச காலங்களில் நின்று போவதல்ல. 5 வருஷமல்ல, 10 வருஷங்கள்கூட ரிப்பேர் இல்லாமல் போகக்கூடிய கடியாரம். இதை வாங்குவோருக்கு ரோல்டு கோல்டு கைச்சங்கிலி இனாமாகச் சேர்த்து அனுப்பப்படும். வீணிலே ஸிலிண்டர் கடியாரங்களில் பணத்தை வீணாக்காமல் எங்களை நம்பி எக்காலத்தும் உழைக்கக்கூடிய லீவர் கடியாரத்தை வரவழைத்துக் கொள்ளுங்கள். வாங்கிக்கொண்ட ஒருவாரம் வரை சரியாக ஓடவில்லையென்றால் வாபஸ் ஒப்புக் கொள்ளப்படும். 5 வருடம் காரண்டியுள்ளது. இனாம் சங்கிலியுடன் கடியாரம் விலை ரூ. 6-14-0. ஸ்டாக் கொஞ்சம். உடனே எழுதுங்கள்.

Fancy Watch House,
(3) 119, G. P. O. MADRAS.



நீங்கள் ஆஸ்த்துமாவிலிருந்து குணமடைவதை விட்டு ஏன் கவலைப்படுகிறீர்? அபூர்வ சிகிச்சை! இதை—சாதனைசெய் ஆச்சரிய வியாதி !!

## சுவாச காச நிவாரணி.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாச காச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம் தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்தி செய்தும் கெட்டியான கபத்தை இளகச்செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப்பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது.

48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக்கூடிய டின் 1க்கு ரூ. 1—4.
தபால் கூலி அணா. 4. ஒரு டஜன் டின் விலை ரூ 9.
6 டின் விலை ரூ. 5-4. 3 டின் விலை ரூ. 3

F. M. S. முதலிய ஊர்களுக்கு முன் பணம் ரூ. 2-8. அனுப்பவேண்டும். முன் பணம் இல்லாத ஆர்டர்கள் கவனிக்கப்படமாட்டாது.


புரொப்ரைட்டர், திருநாவுக்கரசு வைத்தியசாலை,
அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். S. I.



## ஒரே மாதம் வரையில் ரூ. 5-14
## ஒரு உண்மையான கிராமபோன்

என்ன ஆச்சரியத்தைக் கொடுக்கிறது பாருங்கள்.

பிக்மி போன் என்று சொல்லப்படும் சிறிய சைஸ் கிராமபோன் இது 200, 300 விலையுள்ள பெரிய கிராமபோன்களுக்கு இணையாக வாசிக்கக்கூடியது.



இதன் இயந்திர அமைப்பு பெரிய கிராமபோனைப்போலவே உள்ளது. இந்த கிராமபோன் பெட்டியில் சவுண்டு பாக்ஸ், ஆரன், இரண்டு டஜன் கொண்ட ஊசிப்பெட்டி எல்லாம் உண்டு. இரண்டு பக்கமும் பாடக்கூடிய ஒரு ரிக்கார்டும் இனாமாகச் சேர்த்தனுப்பப்படும். இங்கிலீஷ் பாண்டுகள், சிரித்தல், விகடம் பேசுதல் முதலிய ரிக்கார்டுகள் தயாரிலுள்ளன.

தனி ரிக்கார்டு 1-க்கு ரூ. 1.
ஒரு ரிக்கார்டுடன் கிராமபோன் பெட்டி 1-க்கு ரூ. 5-14.
தபால் செலவு ரூ 1-5.
உடனே எழுதுங்கள்.

Sole distributors.—
CANADIAN WATCH PEOPLE,
(3) G. P. O. MADRAS.




## படக்காட்சி

ரூ 20 ஆகயிருந்தது ரூ. 5-0-0 தான்

## அமெரிக்கன் சிறிய சினிமா மெஷின்

வெகு நூதனமான இந்த மெஷினினால் பொதுப் படக்காட்சிச் சாலையில் அனுபவிக்கும் ஆனந்தத்தை உங்கள் வீட்டிலேயே அடையலாம்.



நர்த்தனமாடுவது, திரச்செயல், கள் மோட்டார், ரயில், ஏரோப்ளேன் விபத்துகள், பாரிஸ் மாதர் லீலைகள், மலைகள், ஆறுகள் முதலிய காக்ஷிகள் ஒவ்வொன்றும் அசைவதும் மிகத் தெளிவாகத் தெரியும். பிலிம் டேப் ஒரு கஜம்கூட அனுப்பப்படும். உபயோகிக்கும் முறையும் மெஷினுடன் உண்டு.

மெஷின் குறைந்த (அசல்)
விலை ரூ. 5 0 0
தனி பிலிம் டேப் 1 கஜம் 0 6 0
3 கஜங்கள் 1 0 0

முந்துங்கள்!
லக்ஷ்மி ட்ரேட்ஸ் கம்பெனி,
173, தங்கசாலை வீதி, சென்னை.
(30)


தரு. ஜே. வைத்தியணப்பா அவர்களால் சென்னை "தாரண்டன" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.